T. D. R. 3624

R. R. No 65 / 77

Vol. I

[illegible]

[illegible]

[illegible]

DIGITIZED

Q6w2
M96
119929

# SKETCHES

OF

# SOUTH INDIAN CHRISTIANS.

**LIVES OF TAMIL, TELUGU, AND MALAYALAM CHRISTIANS.**

---

இந்திய கிறிஸ்தவர்களின்

# ஜீவிய சரித்திரச் சுருக்கம்.

---

FIRST EDITION, 1,000 COPIES.

OFFICE OF THE REGISTRAR 26 JAN.97 MADRAS.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA:
LONDON AND MADRAS.

1896.

*Price, $2\frac{1}{2}$ Annas.*

117922

# SKETCHES

OF

# SOUTH INDIAN CHRISTIANS.

## LIVES OF TAMIL, TELUGU, AND MALAYALAM CHRISTIANS.

---

இந்திய கிறிஸ்தவர்களின்

## ஜீவிய சரித்திரச் சுருக்கம்.

OFFICE OF THE REGISTRAR ... MADRAS

FIRST EDITION, 1,000 COPIES.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA:
LONDON AND MADRAS.

1896.

# பொருள் அட்டவணை.

## தமிழ் கிறிஸ்தவர்கள்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஆரோன் ஐயர் .... .... .... .... .... .... .... | 2 |
| 2. | கிறிஸ்தியான் தானியேல் பிள்ளை .. .... .... .... | 7 |
| 3. | சீகெண்டன் தேவதாசன் ஐயர் .... .... .... .... | 9 |
| 4. | கனம்: ஹென்றி பௌவர் வேதசாஸ்திரியார் .... .... | 19 |
| 5. | கனம்: பூவிருந்தவல்லி ராஜகோபால ஐயர் .. .... .... | 22 |
| 6. | தமித்தாள் பாபு அம்மாள் .... .... .... .... .... | 30 |
| 7. | கனம்: உவில்லியம் தோமாஸ் சத்தியநாதன் ஐயர், B. D. .... | 37 |
| 8. | அன்னாள் சத்தியநாதன் அம்மாள் .. .... .... .... | 45 |
| 9. | சாமுவேல் சத்தியநாதன் அம்மாள் .... .... .... .... | 52 |


## தெலுங்கர்.


| | | |
|---|---|---|
| 10. | கனம்: எம். ரத்தினம் ஐயர். .... .... .... .... | 61 |
| 11. | பீ. வெங்கய்யா .. .... .... .... .... .... .... | 65 |


## கன்னடர்.


| | | |
|---|---|---|
| 12. | ஐயோதிபனை தானியேல்.. .... .... .... .... | 71 |
| 13. | கனம்: ஹெர்மன் அனந்தராயர் காண்டினியா ஐயர். .... | 76 |


## மலையாளிகள்.


| | | |
|---|---|---|
| 14. | யாக்கோபு ராம வர்மா ஐயர் என்ற குணப்பட்ட ராஜ பிரபு .... .... .... .... .... .... .... | 80 |


# SKETCHES OF INDIAN CHRISTIANS.

## PART I.

## SOUTH INDIA.

# இந்திய கிறிஸ்தவர்களின்
# ஜீவிய சரித்திரச் சுருக்கம்.

## தமிழ் கிறிஸ்தவர்கள்.

தமிழ்தேசமானது சென்னபட்டணத்துக்கு வடக்கே இருபது மைல் தூரத்துக்கப்பாலிருக்கிற பழவேற்காடுமுதல் கன்னியாகுமரி முனைக்குச் சற்றுத் தெற்குவரை, சமுத்திரக்கரைக்கு மேற்கும் கனவாய்மலைக்குக் கிழக்குமிருக்கிற பூமி அடக்கம். இலங்கைக் குடிகளில் மூன்றிலொருபங்குபேர் தமிழ் பேசுகிறவர்கள். தமிழ் தேசத்தின் பரப்பளவு, 60,000 சதுரமைல். அதின் விஸ்தீரணம் இங்கிலாந்து உவேல்ஸ் நாடுகளுக்கு ஏறக்குறைய சமமாயிருக்கும். தமிழ்ப்பாஷையை ஒரு கோடியே ஐம்பது லட்சம் ஜனங்கள் பேசி வருகிறார்கள்.

மிஷன்கள். — இந்தியாவில் புரோடெஸ்தாந்து மார்க்கமானது தமிழருக்குள் முதலாவது தொடங்கப்பட்டு, அதுமுதல் அதிகச் சிரத்தையோடும் கவனத்தோடும் நடத்தப்பட்டுவருகிறது. சீகன் பால்க் ஐயரும், புளுச்சோ ஐயரும் முதல் மிஷனெரிகளாக 1706-ஆம் தரங்கம்பாடியில் வந்திறங்கினார்கள். 1893-ஆம் தென் இந்தியாவைச் சேர்ந்த தமிழ் மிஷனில் 107 புறத்தேச மிஷனெரிமார்களும், 47,036 நற்கருணைக்காரரும், 1,76,230 சுதேச கிறிஸ்தவர்களும், 75,013 பள்ளிப்பிள்ளைகளும் இருந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

## 1. ஆரோன் ஐயர்.

இந்த ஜீவிய சுருக்கம் ஆரோனோடே துவக்குவது தகுதியாயிருக்கிறது. அவர் இந்தியாவில் திவ்விய பணிவிடைக்கு அபிஷேகிக்கப்பட்ட முதலாவது புரோடெஸ்தாந்து குரு. அவரைக்குறித்து நாம் கவனிக்கவேண்டியதற்கு இதுமாத்திரம் முகாந்தரமல்ல, அவருடைய சிறந்த கிறிஸ்தவ நடக்கையே, அவரை நாம் மதித்து எழுதும் காரணமாயிருக்கிறது.

அவர் சேர்ந்திருந்த மிஷனைப்பற்றிச் சில காரியங்களை இங்ஙனம் பார்ப்பது நலம்.

கி. பி. 1621-௵ அங்கிலேயர் மசூலிப்பட்டணத்தைப் பிடித்து, அதை ஆதீனமாக்கிக்கொண்டபோது, டென்மார்க் தேசத்தார் தரங்கம்பாடியைத் தங்கள் வசப்படுத்தினார்கள். ஆனால் 80 வருடம் வரைக்கும் அவர்கள் சுவிசேஷத்தை இந்துக்களுக்குப் பிரசங்கிக்கும்படி யாதொரு பிரயத்தனமும் செய்யவில்லை.

கி. பி. 1706-௵ ஜூலை மாசத்தில் சீகன்பால்க், புளுச்சோ ஐயன்மார் தரங்கம்பாடியில் புரோடெஸ்தாந்து மார்க்க முதல் மிஷனெரிகளாக வந்து இறங்கினார்கள். அக்காலத்தில் தரங்கம்பாடியிலிருந்த டென்மார்க் தேசத்தாரில் அநேகர் துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணிவந்ததால், மிஷனெரிமார் வருவதைப்பற்றி அவர்கள் வெறுப்புள்ளவர்களாயிருந்தார்கள். அந்த இரண்டு வாலிப மிஷனெரிமாரும் அவர்களால் மிகுந்த கஷ்டத்தை அடைந்தார்கள். ஒரு தருணத்தில் டென்மார்க் ராஜன் ஐயன்மார்களுக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்ட சம்பளத்தையும் கவர்னர் நிறுத்தினதுடன் சீகன்பால்க் ஐயரையும் அநியாயமான ஒரு பொய்க் குற்றத்தினிமித்தம் சிறைச்சாலையில் போட்டான். மிஷனெரிமார் அதினால் அதைரியப்படாமல், தங்கள் பணிவிடையை ஊக்கத்தோடே நிறைவேற்றிவந்தார்கள். ஏற்றகாலத்தில் அவர்கள் பலனையும் அநுபவித்தார்கள். கி. பி. 1707-௵ மேய் மாசத்தில் ஐந்து அடிமைகள் ஞானஸ்நானம்பெற்றார்கள். அவர்களே தரங்கம்பாடி மிஷனின் முதல் பலன்கள். கி. பி. 1709-௵ டென்மார்க் அரசன் கவர்னருக்கு நிருபம் எழுதி மிஷனெரிமார்களுக்கு உதவிசெய்யும்படி கட்டளையிட்டார். அதோடே மூன்று மிஷனெரிமாரும் அவர்களுக்கு உதவிசெய்யும்படி வந்தார்கள். இந்தக்காலத்தில் தரங்கம்பாடி மிஷனைப்பற்றி இங்கிலாந்திலுள்ளவர்களும் பிரீதிகொள்ளத் தொடங்கினார்கள். சீகன்பால்க்,



புளுச்சோ ஐயன்மார்களுடைய காகிதங்கள் இங்கிலிஷில் திருப்பப்பட்டுக் கிறிஸ்துமார்க்கக் கல்வி விர்த்திச் சங்கத்தாருக்குத் தெரிவிக்கப்பட்டபோது, அவர்கள் வேதாகமத்தை அச்சிடவும் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கவும் சகாயம் அனுப்பினார்கள். கி. பி. 1714-௵ தமிழ் புதிய ஏற்பாடு அச்சிடப்பட்டது. அதற்கு அச்செழுத்து ஜர்மனிதேசத்திலிருந்து வந்தன. டென்மார்க்கர், அங்கிலேயர் நாடுகளில் வேறே பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தப்பட்டன.

ஆரோன் கி. பி. 1698-௵ சென்னபட்டணத்துக்குத் தெற்கே கடலோரமாயிருக்கிற கடலூரில் பிறந்தார். அவர் தாய்தகப்பன்மார் இந்துமார்க்கத்தாராயிருந்தார்கள். அவர் தகப்பனார் சுவர்க்கநாதபிள்ளை, கண்ணியவானான ஒரு வியாபாரி. அந்த வியாபாரி தன் மகனுக்கு வாசிக்கவும் எழுதவும் படிப்பித்ததுடன் விக்கிரக வணக்கத்தைக் கைக்கொள்ளும்படி கவலையாய்ப் பார்த்துவந்தார். கி. பி. 1717-௵ தரங்கம்பாடியில் ஒரு தர்மப் பள்ளிக்கூடம் ஆரோன் தகப்பனாருடைய வீட்டுக்கு எதிரே ஸ்தாபிக்கப்பட்டது. அதில் படிப்பித்த சவரிமுத்து உபதேசியாருடன் ஆரோன் இலகுவாய்ச் சகவாசம்பண்ணிக்கொள்ள ஏதுகரமுண்டானது. உபதேசியாரிடத்திலிருந்து அவர் சில கிறிஸ்தவமான புத்தகங்களை வாங்கி சுறுசுறுப்பாய் வாசித்துவந்தார். அதைக்குறித்து அவர் சொல்லியிருக்கிறதாவது, "தேவனுடைய வார்த்தையானது கல்போன்ற என்னிருதயத்தை உருக்கும்படி எனக்குள்ளே கிரியைசெய்தது. ஆனால் இது அற்பமான துவக்கம்; பூமிக்குரிய சிந்தனை என்னில் கிளம்பினது; நீ உன் தகப்பனையும் தாயையும் விட்டுவிடக்கூடாதே; நீ போய்விட்டால் உனக்கு என்னத்தீமை சம்பவிக்கும் என்பதை யார் அறிவார்" என்பதே. தேவ சந்தர்ப்பமாய் அவருடைய பெற்றோருக்கும் இங்கிலீஷ் கவர்னமெந்தாருக்கும் பிணக்கு நேரிட்டது. அதினால் அவர்கள் கடலூரை விட்டு வெளியேறவேண்டியதாயிற்று. ஆரோனை சம்ரக்ஷணைசெய்யவும் அவர்களால் கூடாதிருந்தது. அப்போது ஆரோன் தரங்கம்பாடியில் கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றித் தான் கேட்டிருந்ததை நினைவுகூர்ந்து, சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் ஆதரவு கிடைக்கும் என்று நம்பி, அங்கே போக விரும்பினார். அவருக்கு வழிதெரியாதிருந்தது. ஆனால் அந்த இடத்துக்குப் போன ஒரு மனிதனைக் கண்டு, அவனோடேகூடச் சென்றார். தரங்கம்பாடிக்கு வந்து சேர்ந்தபோது, சவரிமுத்து உபதேசியாரிடத்துக்குப் போனார். உபதேசியார் அவரை அறிந்து ஏற்றுக்கொண்டு, சீகன்பால்க் ஐயரிடத்தில் கொண்டுபோய்விட்டார். சீகன்பால்க் ஐயர் அவருக்கு நல்ல போதனைசெய்து, கி. பி. 1718-௵ ஞானஸ்நானம் கொடுத்தார். அப்பால் ஆரோனுடைய தாய்தகப்பன்மார் வந்து, அவரைக்

கூட்டிக்கொண்டுபோக விரும்பினார்கள். ஆனால் அவர் அவர்களுக்கு இணங்காமல் உறுதியாய் நிலைநின்றார். அவர் தரங்கம்பாடியில் முதலாவது உபாத்தியாயராகவும், பின்பு உபதேசியாராகவும் ஏற்படுத்தப்பட்டார். சில காலத்துக்குப்பின்பு, அவர் சுதேசிகளான சபைகளுக்குப் பிரயோசனமுள்ளவராக விளங்கலானார். மிஷனெரிகள் குணப்பட்டவர்களுக்குள் சிலரைக் குருக்களாக ஏற்படுத்தும் பெரிய நோக்கத்தை மறந்துபோகவில்லை. இதுவிஷயத்தில் அவர்கள் இஷ்டர்கள் அவர்களைத் தைரியப்படுத்தினார்கள். கி. பி. 1725-ளு கந்தர்புரி பிரதான கண்காணியார் பின்வருகிறபிரகாரம் அவர்களுக்கு எழுதியனுப்பினார். அதாவது;

"நீங்கள் ஐரோப்பாவுக்கு வெகுதூரத்திலிருப்பதால், உங்களுக்குத் திருப்பணிவிடையில் உதவிசெய்யக் கூட்டாளிகளைச் சம்பாதிப்பதில் நீண்ட காலதாமதமும் அநேக வருத்தங்களும் உண்டாகும். ஆகையால் சத்தியத்தைப்பற்றிய சுவிசேஷ அறிவுக்கு நீங்கள் கொண்டுவந்தவர்களுக்குள் சிலரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்குப் பூரணமாய் அறிவைக் கற்றுக்கொடுத்து, அவர்கள் தங்கள் சுயபாஷையில் பள்ளிக்கூடங்களில் மாத்திரமல்ல, தேசமெங்கும் போதிக்கும்படிக்கும்; உங்களண்டைக்கு உபதேசம் கேட்கவும், ஞானஸ்நானம்பெறவும் வருகிறவர்களுக்கு வழியை ஆயத்தப்படுத்தவும் பிரத்தியேகப்படுத்திவைப்பது மிகவும் விரும்பப்படத்தக்க காரியம். அப்படிப்பட்ட சுவிசேஷகர் திராணிபேர்களுக்கு சுவிசேஷத்தை ஆரம்பத்தில் பிரபலியப்படுத்துவதற்கு அதிக அனுகூலமாயிருந்தார்கள். "சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்." அவர்கள் தங்கள் சுதேசிகளுடன் இலகுவில் கலந்து தாங்கள் யோசியவிஷயத்தில் அவர்களை ஐக்கியப்படுத்த ஏற்ற சமயத்தைக் கையாடுவார்கள். சீஷர்களின் தொகை இப்படியாக அதிகரிக்கையில் சபையைச் சேர்ந்தவர்களுக்குள் தாங்கள் விசுவாசித்த சத்தியத்தை மற்றவர்களுக்குத் தெரியக் காட்ட தகுந்தவர்களான வாலிபர் இத்தனைபேரிருக்கிறார்களென்பதை நீங்கள் கண்டறிந்துகொள்ளலாம்." என்பதே.

அக்காலத்தில் மிஷனெரிமார் உள்நாட்டுக்குள்ளே பிரயாணஞ் செய்யக்கூடாதென்று விலக்கப்பட்டிருந்ததால், அவர்கள் நாட்டுப்புறத்துச் சபைகளைச் சந்திக்க ஏதுவில்லாதிருந்தது. வருஷத்துக்கு மூன்றுதரம் சபையார் தரங்கம்பாடிக்கு வருவார்கள். இது போதுமானதாயிருக்கவில்லை. மிஷனெரிமார் டென்மார்க்கிலுள்ள மிஷன் சங்கத்தாருக்கு எழுதி ஒருவருக்கு குருப்பட்டம் கொடுக்கலாமாவென்று ஆலோசனை கேட்டார்கள். அதற்கு வந்த பதில், 'பிற்காலத்தில் சுதேச ஜனங்களுக்குப் போதகமாரும் மேய்ப்பருமாயிருக்கும் சுதேசிகளைக் கண்டுபிடிக்கலாம் என்று நீங்கள் காட்டிய நம்பிக்கை எங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. நாங்களும் எங்களுடைய உத்தம இஷ்டர்களும் தேவ ஒத்தாசையினாலே சபைகளை விருத்திசெய்யவும் பலப்படுத்தவும் இது முதற்றரமான வகையென்று எண்ணுகிறோம். மாட்சிமைதங்கிய ராஜாவுடைய கிருபையுள்ள சட்டங்களின்பேரில் திவ்விய பணிவிடைக்குத் தகுந்தவர்களான யாரையும் அபிஷேகம் பண்ணவும், அப்படிப்பட்டவருக்கு ஒன்று அல்லது அதிகமான சேகரத்தைக் கொடுக்கவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறோம்" என்பதே.



ஆலோசனைச் சங்கத்தார், மிஷனெரிமார் அபிஷேகம்பண்ணத் தெரிந்துகொள்வதில் மிகுந்த விவேகமாயிருக்கவேண்டுமென்று அவர்களை எச்சரித்துத் தாங்கள் குருப்பட்டம் கொடுப்பவர்களுக்கு முந்தி சிறிய பணிவிடைகளைச் செய்யக்கொடுத்து, அதில் அவர்கள் சித்தியுடையவர்களாயிருந்தால், பின்பு ஆத்துமாக்களைப்பற்றிய மேலான விசாரணையை ஒப்புவிக்கலாம் என்று எழுதியிருந்தார்கள்.

நன்றாய்ப் படிப்பிக்கப்பட்டபின்பு, ஆரோன் கி. பி. 1733-ளு டிசெம்பர் 28உ அபிஷேகம் பண்ணப்பட்டார். பதினொரு மிஷனெரிமாரும் டென்மார்க்கரான சில பிரதானிகளும், அப்போது ஆஜராயிருந்தார்கள். ஆரோன், "நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்." கலா. 4. 4, 5. என்ற வாக்கியங்களின்பேரில் பிரசங்கித்தார். அவர் தமது விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட சுதேசக் கிறிஸ்தவர்களைப் பார்த்துத் தங்களுக்கு அனுக்கிரகிக்கப்பட்ட நன்மைகளுக்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படி முக்கியமாய் ஏவி, அச்சமயத்தில் வந்திருந்த மற்றவர்களை நோக்கி, தன்னுடைய பணிவிடைக்கு அவசியம் வேண்டிய கிருபைவரங்களைத் தேவன் தனக்கு அருளும்படி ஜெபிக்கக் கேட்டுக்கொண்டார்.

குருப்பட்டம் பெற்றபின், ஆரோனையர் சபைகள்தோறும் போய்ப் பல இடங்களில் சாக்கிரமெந்துக்களைப் பரிமாறி சபைக்குரிய ஒழுங்குகளை ஏற்படுத்தி, அவைகள் நடந்தேறும்படி பார்த்து, உபதேசிமார்களைத் தைரியப்படுத்திவந்தார். அவருடைய வீடு தரங்கம்பாடிக்குச் சமீபமாயிருக்கிற புரையாற்றிலிருந்தது. அங்கே சபையாரும் பற்பல ஸ்திரீமான்களான இந்துக்களும் அவரை அடிக்கடி சந்திக்கப் போவார்கள்.

ஆரோன் ஐயர் வருஷாவருஷம் பாரமான தம்முடைய பணிவிடையை உத்தமத்தோடே நிறைவேற்றிவந்தார். அவைகளை நிறைவேற்றுவதற்கு அவர் அடிக்கடி பிரயாணம் பண்ணவேண்டியதாயிருந்தது. அதில் அவருக்குண்டான வருத்தத்தைக் குறைக்கும்படி ஒரு குதிரை அவருக்குக் கொடுக்கப்பட்டபோதிலும் அவருடைய சுகம் நாளடைவில் விட்டுவந்தது.

கி. பி. 1745-ஆம் ஆரோன் ஐயர் அதிக அவஸ்தையோடிருந்து மரணத்தை எதிர்நோக்கினபோதிலும், அதை எண்ணாமல் பிரயாணஞ் செய்துவந்தார். அவருடைய இனத்தாரில் ஒருவனுடைய மரணத்தைப்பற்றி அவருக்கு அறிவிக்கப்பட்டபோது, அவர் "பலமும் சுகமுமுள்ள இந்தமனுஷன் இறந்துபோனால் நான் எவ்வளவுக்கு அதிகமாய் அதைக்குறித்துச் சிந்திக்கவேண்டியவனாயிருக்கிறேன்", என்றார். பிந்திய காலங்களில் அவர் பிரயாணங்களைத் துவக்கும்போதெல்லாம் தான் விசுவாசிமார்களை இனிமேல் பார்க்கக் கூடாதென்பதுபோல எண்ணி, அவர்களை வழியனுப்பிக்கொள்வார். கடைசியாக அவர் மாயபுரத்துக்குப் பிரயாணம்போனார். அவர் அந்தவூரில் கிறிஸ்தவர்களைக் கூடிவரச்செய்து, தமக்கு அதிகமான நோயிருந்தபோதிலும் மனதில் ஆழமாய்ப் படத்தக்கதான ஒரு பிரசங்கம் செய்தார். அவர் தம்முடைய பணிவிடையில் உதவியாயிருந்தவர்களைக் கூலிக்காரர்போலிருக்கக் கூடாதென்று எச்சரித்து உண்மையுள்ளவர்களாயிருக்கும்படி சொன்னார். அவர் கிறிஸ்தவர்களைப் பார்த்துக் கடைசிவிசையாகத் தாம் அவர்களுக்கு விருந்தைப் பரிமாறுவதாக அறிவித்து, அந்த விருந்து அவர்களுக்குச் சாபமாகவல்ல, ஆசீர்வாதமாயிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று புத்தி சொல்லி, மிகுந்த களைப்போடே வீட்டுக்குத் திரும்பினார். புனையாத்தில் அவரைப் பார்க்கவந்திருந்த விசுவாசியைப் பார்த்து, "நாம் நாட்டுப்புறத்துக்குச் செய்யும் பிரயாணம் முடிந்தது" என்றார்.

அவருக்குச் சற்று சுகமுண்டானபோது, அவர் ஜூன் 23-உ தமது மகள் கலியாணத்திற்காகத் தரங்கம்பாடிக்குப் போயிருந்தார். அவள், அவரோடே உடன் ஊழியக்காரனாயிருந்த தியாகு ஐயருடைய மகனுக்கு மனைவியாகக் கொடுக்கப்பட்டாள். அந்நாளில் அவர் மிகுந்த அவஸ்தையுடன் மரணப்படுக்கையிலிருந்தார் என்றாலும் அவருக்குத் தெளிந்த புத்தியிருந்தது. தமக்குச் சகாயஞ் செய்யத்தக்க வல்லவருக்கு நேராகத் தமது இருதயத்தை ஏறெடுத்தார். அவர் தமது இரண்டு மருமக்களையும் கட்டி அணைத்துத் தமது குழந்தைகளைக் கொண்டுவரச்செய்து, அவர்களுக்கு முத்தமிட்டு, வழியனுப்பிக்கொண்டார். அப்பால் அவர் "என் கர்த்தாவே, என்



தேவனே, நான் கபடம் அல்லது வஞ்சகமின்றி உம்மைச் சேவித்ததை நீர் அறிவீர். காடுகள் வனங்கள் வழியாய் நான் அலைந்து பிரயாணம் செய்ததற்கு நீரே சாட்சி" என்றார். அப்போது அவருக்கு அதிகமான நோவுண்டானதால் வேறொன்றும் பேச பெலனற்றவராயிருந்தார். ஆனால் அவர் "என் இயேசுவே என் ஆண்டவரே, என்னண்டைக்குச் சமீபித்து வாரும், என்னண்டைக்குச் சமீபித்து வாரும்" என்றார். சாயங்காலத்தில் அவர் தியாகு ஐயர் முன்புக்கும் மற்றும் அநேக கிறிஸ்தவர்கள் முன்புக்கும் நற்கருணை வாங்கினார். அப்போது அவர் மெய்யான தாழ்மையையும் குணப்படுதலையும் விசுவாசத்தையும் விளங்கக்காட்டினார். பின்பு இருபத்து நாலுமணி நேரம் கொடிய வேதனைப்பட்டு, 47 வயதுள்ளவராய் மரித்தார்.

விசுவாசிமார் எல்லா உண்மையோடும் அவரைக்குறித்து நற்சாட்சி பகர்ந்ததாவது, "தேவன் அவருக்குக் கொடுத்த அறிவு கிருபைவரங்களுக்குத் தக்கதாக உண்மையோடே உழைத்தார். இவ்விடத்திலும் நாட்டுப்புறத்திலுமுள்ள சபையாருக்கு அவர் செய்த ஊழியம் அதிகமான பிரயோசனத்தையும் ஆசீர்வாதத்தையும் உண்டாக்கினது. அவர் நடந்துகொண்ட விதத்தினால் கிறிஸ்தவர்களும் அஞ்ஞானிகளும் அவரைக் கண்ணியமாய் மதித்துவந்ததுடன் அவரிடத்தில் அன்புபாராட்டி நம்பிக்கை வைத்தார்கள். சபையாருக்கு வருத்தமான சம்பவங்கள் நேரிடுகையில் தம்முடைய அனுபோகத்தினாலும் ஞானபுத்தியினாலும் சிறந்த ஆலோசனை சொல்லுவார். அவர் ஒவ்வொரு சபையின் ஸ்திதியைப் பூரணமாய்ச் சொல்லுவார். அதைச் சேர்ந்த ஒவ்வொரு அவயவத்தாருக்கும் வேண்டியதின்னதென்பதை அறிவிப்பார். அப்பேர்ப்பட்டவர்களை அவர்கள் ஸ்திதிக்குத் தக்கதாய்ப் போதித்துப் புத்திசொல்லவேண்டும் என்பார். மேலும் அவர் தீமைசெய்தவர்கள் உணரத்தக்கதாக அவர்களைக் கண்டித்துத் தண்டிப்பார். ஆனால் வியாதியஸ்தரையும் உபத்திரவப்பட்டவர்களையும் அவர் அன்புடன் நடத்துவார்" என்பதே.

## 2. கிறிஸ்தியான் தானியேல் பிள்ளை.

தானியேல் பிள்ளையைப்பற்றி நமக்கு அதிகம் தெரியாது. ஆனால் அவர், கிறிஸ்தவ கல்வி விஷயத்தை முன்னுக்குக் கொண்டுவர பிரயாசத்தையும் முயற்சியையும் செலுத்தின இந்துதேசத்தாருக்குள் முதல்வராயும், அதுவிஷயத்தில் சிறந்த சித்தியுடையவ

ராயுமிருந்தார். அவர் திருப்பின புஸ்தகங்கள் 100 வருடங்களாய்த் தமிழ்சபைக்கு ஆசீர்வாதமாயிருக்கின்றன.

தானியேல் தரங்கம்பாடிக்கு 4 மயில் தூரத்திலுள்ள ஒரு ஊரில் பிறந்தார். அவர் பிறந்தபோது அவருடைய தாய் தகப்பன்மார் அஞ்ஞானிகளாயிருந்தார்கள். அவருடைய பெற்றோர் கண்ணியமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயினும், வறுமைக்குட்பட்டிருந்தார்கள். ஒருகொடிய பஞ்சம் மும்முரமாயிருந்தபோது, அவர்கள் சுவார்ச் ஐயரவர்கள் காலத்தில் கிறிஸ்துமார்க்கத்துக்குள் அமைந்தார்கள். சுவார்ச் ஐயர் தானியேலுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, டென்மார்க்கருடைய மிஷன் பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிப்பித்தார். தானியேல் ஜர்மன் பாஷை, டென்மார்க் பாஷை, இங்கிலீஷ் பாஷைகளைக் கற்று, மற்றப்பாடங்களிலும் புகழப்படத்தக்கவண்ணம் தேர்ச்சியடைந்தார். அவருக்கு இருந்த திறமையும் உத்தம பக்தியும் அவர் மிஷன்வேலைக்குச் சிறந்தவராவார் என்று காட்டின.

தானியேல் மரியாளை விவாகம் பண்ணினார். அவள் தாய் தகப்பன்மார் அஞ்ஞானிகளாயிருந்தார்கள். மரியாள் கிறிஸ்துமார்க்கத்தை அநுசரித்து, மிஷன் போர்டிங் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து அங்கே படிப்பிக்கப்பட்டாள். தானியேலுக்கு நாலு குமாரத்திகளும் மூன்று குமாரரும் பிறந்தார்கள்.

சில வருடங்களாக தானியேல் மிஷன்வேலையைச் சிரத்தையோடே செய்துவந்தார். டேனிய கவர்னர் அவர் *திறமையை அறிந்து, தரங்கம்பாடிக்கு சப் ஜட்ஜாக நியமனம் செய்தார். அவர் கவர்ன்மெந்து உத்தியோகத்துக்காக மிஷன்வேலையை விட்டபோதிலும், கிறிஸ்தமான புஸ்தகங்களைத் தமிழில் திருப்பும்படி நாளொன்றுக்கு ஒருமணிநேரம் பின்னிடத் தீர்மானித்து, அந்தப்படி அநேக வருடங்களாக அந்த வேலையை நடப்பித்துவந்தார். அவர் திருப்பின புஸ்தகங்களில் சிலவை பின்காட்டப்பட்டிருக்கிறவைகளே. பொன்றுபாணப் பெட்டி, ஞான மூலிப்பாறுதல், கிறிஸ்தவ நடக்கைத்தியானம், இயேசுகிறிஸ்துவானவர் பாடுபட்ட தியானம், தேவையான ஒன்றே, ரு. இந்தக்காலத்திலும் அவருடைய திருப்புதல்கள், தமிழ் கிறிஸ்தவர்களால் மிகவும் அதிகமாய் மதிக்கப்பட்டுவருகிறது.

டேனிய கவர்னர் தானியேலை ராஜாங்க காரியமாக ஐதர் அலியண்டைக்கு அனுப்பினார். அவன் அவரை முதலில் சிறைச்சாலையில் அடைத்தான். அங்கே சில மாதங்களிருந்தார். அங்கே இருக்கையிலும் அவர் ஜான் பனியனைப்போல் கல்விக்குரிய விஷயங்களைத் திருப்பிக்கொண்டேவந்தார். ஐதர், தானியேலுடைய உத்தம தன்மையை அறிந்து, அவருக்குப் பரிசுகொடுத்து அனுப்பின



துடன், தரங்கம்பாடிக்குச் சமீபமான கிராமங்களில் அவன் கொள்ளையாடின பொருளையும் திரும்பக் கொடுத்துவிட்டான்.

தானியேல் முதுமைப் பிராயமட்டும் ஜீவித்திருந்தார். அவர் தம்முடைய பேரனுக்குப் படிப்பிப்பதில் மிகுந்த பிரீதியுள்ளவராயிருந்தார். அந்தப் பேரப்பிள்ளை பிந்தியகாலத்தில் தென் இந்தியாவில் இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்தவராய் முதலாவதாகக் குருப்பட்டம் பெற்றார். அவர்பேர் யோவான் தேவசகாயம். இவர் திருநெல்வேலியில் திவ்விய பணிவிடையை உத்தமத்தோடு நடப்பித்து வயோதிபராய்க் கர்த்தருடைய ராஜ்யத்தில் பிரவேசித்தார். சுதேசிகருடைய நன்மைக்காகக் கல்வி விஷயத்தில் தானியேல்பிள்ளை ஒரு நாளில் ஒருமணிநேரம் செலவிட்ட நற்காரியமானது தகுதியும் திறமையுமுள்ள மற்றெல்லாரும் இலகுவாய்ப் பின்பற்றத்தக்கது. இதை வாசிக்கிற கிறிஸ்தவர்கள் அப்படி செய்யும்படி விரும்புகிறோம்.

## 3. நீலகண்டன் தேவதாசன் ஐயர்.

தேவதாசன் ஐயர் கல்வித் திறமைக்காவது உலக சம்பத்துக்காவது பேர்போனவரல்ல. அவர் பிராமண குலத்தைச் சேர்ந்தவர். அவர் சர்வத்துக்கும் வல்லவருடைய உதவியால் கிறிஸ்துமார்க்கத்தின் மகிமையான வல்லமைக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார். அவருடைய ஜீவகால முழுவதிலும் தேவனுக்கு ஊழியம் செய்யவும், சாவகாசமிருந்தாலும் இல்லாவிட்டாலும் தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் வேண்டுமென்று ஆவலோடிருந்தார். இந்தச் சிறந்த நோக்கம் அவரில் எப்போதும் அதிகரித்துக்கொண்டேயிருந்தது.

தேவதாசன் என்றழைக்கப்பட்ட நீலகண்டன் சுப்பய்யர், திருநெல்வேலி ஜில்லாவில் திருக்கோளூர் என்ற இடத்தில் கி. பி. 1814–௵ டிசெம்பர்௴ பிறந்தார். எழுவயதாயிருக்கையில் அவருக்கு உபநயனச் சடங்கு அல்லது பூணூற்கலியாணம் முடிந்தது. அது அவர் இரண்டுதரம் பிறந்ததற்கு அடையாளமாம். அதுமுதல் அவர் பூணூலை எப்போதும் தரித்துக்கொள்வார். இதைத்தவிர அவர் இளம்பிராயச்சரித்திரம் நமக்குத் தெரியாது. அவர் சுதேச கிராமப்பள்ளிக்கூடத்தில் கற்கக்கூடிய ஆதாரக் கல்விகளைக் கற்றுக்கொண்டார். அந்தக்காலத்தில் இங்கிலீஷ் பாஷை மிஷன் பள்ளிக்கூடங்களில் மாத்திரம் கற்றுக்கொடுக்கப்பட்டதால், அவருடைய தாய்தகப்பனார் அவரை மிஷன் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப மிகவும் வெறுப்புள்ள

வர்களாயிருந்ததினாலே, அவர் இங்கிலிஷ் பாஷையைக் கற்றுக்கொள்ளவில்லை. அவருக்குப் பதினெட்டு வயதாயிருக்கையில், கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றி முதலாவதாகக் கேள்விப்பட்டார். அவர் திருநெல்வேலிக்குப் போய், அவ்விடத்தில் மிஷன் உபாத்தியாயராயிருந்த தம்முடைய இனத்தானோடே இருந்தார். சுப்பய்யர் தம்முடைய இனத்தான் பள்ளிக்கூடங்களைப் பரீட்சிக்கப் போகும்போதெல்லாம் அவருடன் கூடவே போவார். ஒருநாள் ஒரு பள்ளிக்கூடத்துச் சுவரில் தொங்கவைக்கப்பட்டிருந்த பூமிசாஸ்திரப் படம் ஒன்று, அவர் மனதைக் கவர, அதைக்குறித்து விபரமறிய விரும்பினார். விநோதத்துக்காக அவர் கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றியும் சில காரியங்களை அறிய ஆசைப்பட்டார். அவருடைய இனத்தான் இந்து மதத்தானாயிருந்தாலும், கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றிய அறிவுடையவராயிருந்ததால், அவர் சுப்பய்யர் கையில் ஆதியாகம பிரதி ஒன்றும், புதிய ஏற்பாடு பிரதி ஒன்றும் கொடுத்துக் கிறிஸ்துமார்க்கத்தின் ஆதாரமான உபதேசங்களைக் கற்றுக்கொடுத்தார். இப்படிச் செய்தது சுப்பய்யரைக் கிறிஸ்தவனாக்கவேண்டும் என்றல்ல, அவரை ஒரு தகுந்த உபாத்தியாயராக்கவேண்டும் என்ற கருத்தோடே செய்தார். சுப்பய்யர் போதுமான அறிவைக் கற்றுக்கொண்டபின்பு, பாளையங்கோட்டையிலிருந்த முல்லர் ஐயரிடத்தில் கூட்டிக்கொண்டுபோய் விடப்பட்டார். அங்கே வேலைக்குரிய பழக்கத்தைக் கற்றுக்கொண்டபின் உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார்.

அவர் உத்தியோகம் செய்கையில், அவர் தகப்பனார் அவரை வரவழைத்து, அவருடைய தாய் மாமன் மகள் லெட்சுமி அம்மாளை அவருக்கு விவாகம் செய்தார். அப்போது மாப்பிள்ளைக்கு வயது 19, பெண்ணுக்கு 4½ வயது.

மிஷனில் உண்டான மாறுதலினால் சுப்பய்யர் உத்தியோகத்தை இழந்துவிட்டார். அவர் திருவாங்கோட்டுக்குப் போகவே நாகர்கோவில் கனம்: சார்ள்ஸ் மால்ற் ஐயர் அவருக்கு உபாத்திமைவேலை கொடுத்தார். அவருக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றிய அறிவிருந்தபோதிலும், இன்னமும் இந்துமதத்தானாகவே இருந்தார். அவர் ஜாதி வித்தியாசத்தைப்பற்றி மெத்த பிடிவாதமாயிருந்தார். ஒரு இரவில் ஒரு சத்திரத்திலே க்ஷத்திரியஜாதியான ஒரு சேவகன், அவர் சாப்பிட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்ததினிமித்தம், உடனே கோபதாபத்தோடே சாப்பிடாமல் எழுந்திருந்துவிட்டார். அந்தச் சேவகனைப் பழிவாங்கவேண்டும் என்று அநேக குற்றங்களை அவன்பேரில் சாட்டி, அவனைத் தள்ளும்படி செய்துபோட்டார்.

சுப்பய்யர் வைராக்கிய சிந்தையுள்ள இந்துமதத்தானாயிருந்தார். அவர் நாடோறும் ராம, ராமா, ராமா வென்று 12,000 தரமும்; சிவ, சிவா என்று 6,250 தரமும் சொல்லுவார், வரவர வெளிச்சம் அவர் மனதில் உதித்தது. அவர் ஜெபம் செய்யத் தொடங்கினார். இரவில் விளக்கேற்றப்படுகையில் அவர் ஒன்றியாயிருக்கையிலே, இதுதான் ஜெபம்செய்யத் தகுதியான சமயம் என்பார். அவர் எழுதிவைத்திருக்கிறதாவது; "நான் இந்துமத ஆலயங்களுக்கு என் சிநேகிதரோடே போகையில், நான் அவர்களுக்குப் பயந்து விக்கிரகங்களுக்கு முன்பாகத் தலைகுனிவேன். அப்படியிருந்தும் நான் என் இருதயத்தில், தேவனே நான் விக்கிரகங்களையல்ல உம்மையே வணங்குகிறேன் என்று சொல்லிக்கொள்ளுவேன். படிப்படியாய் நான் விக்கிரக வணக்கத்தையும், ராம, ராமா வென்பதையும் சிவ, சிவா வென்பதையும் விட்டுவிட்டேன்" என்பதே.



காலஞ்செல்லவேதான் உள்ளுக்குக் கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசியாயும், வெளிக்கு இந்துமதத்தானாயு மிருப்பதைப்பற்றி வெறுப்புள்ளவரானார். ஒருநாள் அவர் கனம்: ஜி. மில்லர் ஐயரோடே சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், எண்ணமின்றி தாம் வெளியரங்கமாய் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரிக்கப்போவதாய்ச் சொன்னார். ஆனால் பின்பு தம்முடைய நோக்கத்தை ஒருவராவது அறியக்கூடாதென்று விரும்பினார். இப்படி அவர் மனதில் சங்கடப்பட்டுக்கொண்டிருந்த சற்றுக்காலத்துக்குப் பின்பு கனம்: ஜே. ரசல் ஐயர் அவர் பள்ளிக்கூடத்தைப் பரீட்சிக்கப் போனார். பரீட்சை முடிந்தபின்பு சுப்பய்யர் ரசல் ஐயரிடத்தில் மார்க்கத்தைப்பற்றித் தமக்குண்டாயிருக்கிற உணர்ச்சியைக்குறித்துத் தெரிவித்துத் தாம் கோயம்புத்தூரைப்போன்ற இடங்களுக்குப் போய், அங்கு மார்க்கத்தை அனுசரித்தால் தமது இனபெந்துக்களுடைய துன்பம் நீங்கியிருக்கலாம். அது நல்லதல்லவா? என்று கேட்டார். ரசல் ஐயர் நீர் இருக்கிற இடத்தில் இருப்பது நலம்; ஆனால் வெளியரங்கமாய் மார்க்கத்தை அறிக்கைசெய்யுமுன் அதைக்குறித்துத் தீர்க்க ஆலோசனை செய்யவேண்டுமென்றார். இது 1839-ஞ ஜூன்மீ 21உ நடந்தது.

சுப்பையருக்கு இப்போது மனச்சமாதானமே யில்லை. ஒரு வாரத்துக்குள்ளாகக் கிறிஸ்துமார்க்கத்தை வெளியரங்கமாய் அனுசரிக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணிக்கொண்டார். அவர் தம்முடைய பள்ளிக்கூடத்துக்குப் போய்த் தம்முடைய நோக்கத்தைப் பள்ளிப்பிள்ளைகளிடத்தில் அறிவித்து, "நான் கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொள்ள நாளைக்கு நாகர்கோவிலுக்குப் போவேன்; இவர் எனக்குப் பதிலாக உங்களுக்கு உபாத்தியாயராக இருப்பார்; நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்ததுபோல, அவருக்கும் கீழ்ப்படியுங்கள். நான் உங்களுக்கு விரோதமாய்ச் செய்த காரியங்களுக்கு எனக்கு மன்னிப்புத்தர உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று சொன்னார்.

"நானிப்படி பேசினதைப் பிள்ளைகள் கேட்டுக் கண்ணீர் சொரிந்தார்கள். நான் என் பூணூலை அறுத்துப்போட்டு, அவர்களுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணினேன். அந்த ஊரில் கிறிஸ்தவன் ஒருவனாகிலுமில்லை. நான் கிறிஸ்தவனாகப்போகிற செய்தியைக் கேட்டவர்களில் அநேகர் என்னிடம் வந்து, நான் பைத்தியங்கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள்; மற்றவர்கள் மிஷனெரிமார்களிடத்தில் அதிகச் சம்பளம் வாங்கப்போகிறேனென்றார்கள். கிறிஸ்தவனாய் நான் அந்த ஊரில் வாசம்பண்ணக் கூடாதிருந்தால் நான் நாகர்கோவிலுக்குப் போகத் தீர்மானம்பண்ணி அடுத்தநாள் விடியற்காலம் புறப்பட்டேன்" என்று எழுதியிருக்கிறார்.

சுப்பய்யர் ஞாயிறு காலை 6 மணிக்கு நாகர்கோவில் வந்து சேர்ந்தார். மிஷனெரிமாருடன் சம்பாஷணை செய்தபோது, அவர்கள் அவர் உண்மையைக் கண்டுகொண்டார்கள். மால்ற் ஐயர் அன்று பகல் சில சபைகளைச் சந்திக்கும்படி அவரைக் கூட்டிக்கொண்டு போனார். சுப்பய்யர் ஒரு சபைமுன்பாக முதலாவதாய்ப் பத்துக் கற்பனைகளை விஸ்தரித்துப் புத்திசொன்னார். அன்று சாயந்தரம் அவர்கள் நாகர்கோவிலுக்குத் திரும்பிவந்தபோது சுப்பய்யருடைய இனபந்துக்களான ஸ்திரீகள் பங்களாவில் காத்திருக்கக் கண்டார்கள். அவர்கள் கண்ணீர் சொரிந்து, அவர்களோடே அவர் திரும்பும்படி கெஞ்சினார்கள். அதுவும் பயன்படாமற்போயிற்று.

சுப்பய்யர் 5 வருடங்களாக உபாத்திவேலை பார்த்தபோது, கொஞ்சம் பணம் மிச்சம் பிடித்துவைத்திருந்தார். அந்தப் பணத்தை அவர் தமது மனைவிக்கு அனுப்பி, அவளுக்கு எழுதின காகிதத்தில் தேவதாசன் என்று கையொப்பம் போட்டிருந்தார். சில நாட்களுக்குப் பின்பு, அவர் கனம் சி. மால்ற் ஐயரால் ஞானஸ்நானம் பெற்றார். அடுத்தநாளில் தம்முடைய உடையை மாற்றி, சந்நியாசி உடை தரித்து மிக சாதாரண போசனத்தை அருந்திவந்தார். குணப்பட்ட வாலிபன் தேவனுடைய ராஜ்யம் புசிப்பிலும் குடிப்பிலுமல்ல என்பதை இன்னமும் படித்தறியவில்லை. இங்கிலீஷ் படிக்கும்படி அவரை நாகர்கோவில் சாஸ்திர பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள். ஆனால் அவருடைய தாலந்துகள் வேறே திசையாய்ச் சென்றதால், அங்கே அவர் நெடுங்காலமிருக்கவில்லை.

பின்பு தேவதாசன் மிஷன் பள்ளிக்கூடங்களைப் பரீட்சிக்கும் விசாரணை உபாத்தியாயராகவும் சில சபைகளில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் பிரசங்கியாகவும் ஏற்படுத்தப்பட்டார். அவருடைய முயற்சியால் பள்ளிக்கூடங்களில் வழங்கப்பட்ட புஸ்தகங்களில்





காணப்பட்ட இந்துமதக் கருத்துக்கள் நீக்கப்பட்டு, அவைகளுக்குப் பதிலாகக் கிறிஸ்துமார்க்கத்துக்குரிய கருத்துக்கள் சேர்க்கப்பட்டன.

அவரிடத்தில் காணப்பட்ட மிகச் சிறந்த குணங்களில் ஒன்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும் என்ற ஆவலே. அந்த ஆவலை அவர் கடைசிபரியந்தம் கொண்டு செலுத்தினார். அவர் ஜீவியம் "சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால் ஐயோ எனக்கு" என்று சொல்லப்பட்ட வசனத்துக்கு உதாரணமாயிருந்தது. அவருடைய உடை சாதாரணமாயுள்ளது. அவர் வெளியே புறப்படுகையில் பூணூலைத் தரித்துக்கொள்வதற்குப் பதிலாக, இரண்டு அங்குல அகலமுள்ள வாரை சட்டைக்குமேல் மாராப்புப்போட்டுக்கொண்டு அதை ஒரு பையோடே மாட்டியிருப்பார்! அந்தப் பையில் தாம்

செலவிடும் புஸ்தகங்களை வைத்துக்கொள்ளுவார். முன் பக்கத்தில் வாரின்மேல் "இயேசுவை நம்பு" என்றும் மறுபக்கத்தில் "சத்தியத்தைப் பேசு" என்றும் பெரிய எழுத்தில் எழுதியிருக்கும். அவர் சகலவிதத்திலும் "எல்லா மனிதராலும் வாசிக்கப்படும் நிருபமாயிருந்தார்."

இந்துக்கள் கொண்டாடும் திருவிழாக்காலத்தில் கடைக்காரர் போய்ச் சேருமுன்னே, விடியற்காலத்தில் எழுந்து அந்தந்த இடத்துக்குப் போய் ஆஜராயிருப்பார். 1841-ம் நாகர்கோவிலுக்குச் சமீபமாய் நடந்த ஒரு திருவிழாவில் இரண்டு உபதேசிமாருடன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருக்கையில், பிராமணர் எரிச்சலடைந்து தங்கள் ஜாதியில் ஒருவர் அப்படி பிரசங்கிப்பதையிட்டுக் கொடுமையாய் அவரை அடித்தார்கள். சிலர் வந்து விடுவித்துவிட்டதால், சாகாதபடிக்குக் காக்கப்பட்டார். பின்பு அவர் சமீபத்திலிருந்த ஏரி அருகில் இளைப்பாறி, தம்மை அடித்தவர்கள் இரட்சிப்படையத்தக்கதாக ஜெபம்பண்ணினார். ஜெபம்பண்ணி முடிந்தவுடன், ஒரு உபதேசியார் கொஞ்சம் ஆகாரத்துடன் தமது அருகிலே நிற்கக் கண்டார். அவர் அப்பொழுது நடந்துகொண்டவிதம் இந்துக்களுடைய மனதிலே, அவரைப்பற்றிய விசேஷித்த எண்ணத்தை உண்டுபண்ணினது. அவர் பட்ட அடியினால் அவர் சாகும்பரியந்தம் நெஞ்சில் நோவிருந்துவந்தது.

1860-ம் தேவதாசன் பல இடங்களுக்கும் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் சுவிசேஷகராக நியமிக்கப்பட்டார். அவருடைய வேலை திருவாங்கோட்டில் மாத்திரமல்ல, திருநெல்வேலி, மதுரை, திருச்சிறாப்பள்ளி, கோயம்புத்தூர் முதலிய இடங்கள்வரையும் நடந்தேறினது. இந்த வருஷம் இவ்வண்ணம் உழைத்தார். 1866-ம் பெப்ருவரியில் ஒரு ஞாயிறு காலையில் அவர் திருநெல்வேலியில் ஒரு ஊரிலே இருக்கையில், நாகர்கோவிலுக்கு அவசரமாய் வரவேண்டும் என்று கனம்: ஜே. டதி ஐயர் தந்தி சமாசாரம் அனுப்பினார். அது இன்னகாரணமென்று தெரியாததால் மனதிலே கலக்கங்கொண்டு, இராமுழுவதும் நடந்து திங்கள் காலையில் நாகர்கோவில் போய்ச் சேர்ந்தார். அங்கே லண்டன்மிஷன் சங்கத்துக்குப் புறத்தேச செக்ரற்றேரியாயிருந்த ஜே. மல்லன்ஸ் வேதசாஸ்திரியார் வந்திருந்தார். அவர் தேவதாசனை நாகர்கோவில் சபைக்குப் பாஸ்றராக அபிஷேகம்செய்ய விரும்பினார். அது செய்தியை தேவதாசன் கேட்டு முதலில் தடைசெய்தார். பின்பு ஜெபம்செய்து சம்மதம் கொடுத்தார்.

அடுத்தநாள் 1866-ம் பெப்ருவரிமீ 13உ தேவதாசன் நாகர்கோவில் சபைக்கு பாஸ்றராக அபிஷேகம் பண்ணப்பட்டார்.



அவரோடே வேறே மூன்றுபேரும் பட்டம்பெற்றார்கள். அது திருவாங்கோடு மிஷனில் முதலாவதாக நடந்த பட்டாபிஷேகமானதால் அந்த நாள் மிகுந்த சந்தோஷமாய்க் கொண்டாடப்பட்டது.

தேவதாசன் பாஸ்றராயிருந்தகாலத்தில் சபையாருடைய வைதிக நிலைமை முன்னுக்குவரும்படி ஓயாமல் பிரயாசத்தைச் செலுத்திக்கொண்டுவந்தார். அவர் பிரசங்கித்த கோவில் விஸ்தாரமான கட்டடம். அது 2,000 பேரைக் கொள்ளும். அதை கனம்; சி. மீட் ஐயர் கட்டினார். அந்தச் சபை தென் இந்தியாவிலுள்ள பெரிய சபைகளில் ஒன்று. சபையார் ஆவிக்குரியவகையிலும் புறம்பான வகையிலும் செழித்தோங்கிவந்தார்கள். நாகர்கோவிலுக்குச் சமீபமாயிருந்த மலைகளில் காப்பித்தோட்டங்கள் உண்டாக்கப்பட்டபடியால் தோட்டத்தெசமான்களுக்கும் அவர்களால் வேலைகொள்ளப்பட்டவர்களுக்கும் க்ஷேமமுண்டானது. தேவதாசன் சபையிலுள்ள கைம்பெண்களின் ஆதரவுக்காக ஒரு காப்பித்தோட்டத்தைச் சம்பாதித்தார். ஆனால் அவர் எப்போதும் ஏழையாகவேயிருந்தார். அவருக்கு ஒரு ஏக்கர் நிலமாவது இல்லை. கிறிஸ்தவர்களான யாசகக்காரரை அவர் அசட்டையாய் விட்டதில்லை. "அவர்கள் கிறிஸ்துவினுடைய ஆயக்காரர்" என்பார். அவர்களுக்காக ஒரு வரிசை குடிசையைக் கட்டி வைத்திருந்தார். சபை சுய ஆதரவுக்குவந்தது; பாஸ்றரும், உபதேசிமாரும், உபாத்திமாரும் சபையாரால் ஆதரிக்கப்பட்டார்கள்.

ஓய்வுநாளில் இரண்டு ஆராதனை நடத்தப்படும். ஐரோப்பிய மிஷனெரிமாரும், சாஸ்திரப் பள்ளிக்கூட உபாத்திமாரும் ஆராதனை விஷயத்தில் அவருக்கு உதவிசெய்துவந்தார்கள். சாயந்தரங்களில் அவர் வியாதிஸ்தரைச் சந்தித்து அவர்கள் வீடுகளில் ஜெபம் செய்வார். ஒவ்வொருநாளிலும் அவர் செய்யவேண்டிய கடமைகளிருந்தன. இந்துக்களுக்குப் பிரசங்கிக்கப் போவார். சபையாருக்குண்டாகும் வியாச்சியங்களைத் தீர்க்கப் பஞ்சாயத்தில் பேசி முடிப்பார். மிஷனெரி ஜெபக்கூட்டத்தையும் தாய்மார் ஜெபக்கூட்டத்தையும் நடத்துவதுடன், கிணற்றருகில் பெண்பிள்ளைகளுக்குப் போதனைசெய்வார். ஸ்திரீகளுக்கும் நற்கருணைக்காரருக்கும் கூட்டங்களையும் வைப்பார். வியாதிகாலத்தில் வைத்தியர் அவர் பேசக்கூடாதென்று ஆலோசனை சொல்லுகையில், தாம் பிரசங்கிக்கவேண்டும் என்றிருந்த பொருளை எழுதி உபதேசிமார்களிடத்தில் கொடுத்துச் சபையாருக்கு வாசிக்கச் சொல்லுவார். 1872-ம் கனம்: ஜே. பவுல் ஐயர் பங்களூருக்குத் திரும்பிப் போனார். அவரோடு தங்களுடைய நேசமுள்ள பாஸ்றரும் சுகத்துக்காகப் போகவேண்டுமென்று சபையார் விரும்

பினார்கள். அவர் புறப்படுவதற்கு முந்தின ஞாயிற்றுக்கிழமையில் அவருக்காக அநேக ஜெபங்கள் செய்யப்பட்டன. சபையிலே ஒரு சீமாட்டி தன் புருஷனுடைய சம்மதத்தின்பேரில் அவர் பிரயாணச் செலவை எல்லாம் தாங்குவதாகச் சொன்னாள். சபையில் இன்னொருவன் அவர் தம்மோடே ஒரு உபதேசியாரைக் கூட்டிக்கொண்டுபோக ஏவி, அதற்கு நேரிடும் செலவை தான் கொடுப்பதாக வாக்குக்கொடுத்தான். தேவதாசன் ஐயர் திருவனந்தபுரம், கொல்லம், கோயம்புத்தூர் வழியாய்ப் பிரயாணஞ்செய்து, பங்களூர் வந்து சேர்ந்து, அங்கே சிலகாலம் தமது மருமகனுடன் பின்னிட்டு, பின்பு சென்னபட்டணம், திருச்சிறாப்பள்ளி, மதுரை, பாளையங்கோட்டை பாதைமார்க்கமாய் 110 நாட்களுக்குப் பின்பு நாகர்கோவிலுக்கு வந்து சேர்ந்தார். அவருடைய பிரயாணத்தில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் பிரசங்கித்தார். அப்போது அவர் செலவிட்ட வேத பகுதிகளும் பத்திரிகைகளும் 8,857.

அவருடைய குடும்பத்தைப்பற்றி இங்ஙனம் சுருக்கிச் சொல்லுகிறோம். அவர் ஞானப்பட்ட சில வருடங்களுக்குப்பின், அவர் தம்முடைய யௌவன மனைவிக்கு ஆளனுப்பினார். ஆனால் அவளுடைய தாய்தகப்பன்மார் அவளைப் போகவிடமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். அப்பால் அவர் மிஷனெரிமாருடைய ஆலோசனையின்பேரில் ஒரு கிறிஸ்தவப் பெண்பிள்ளையை விவாகஞ்செய்தார். அவர்கள் 10 வருடம் ஒருமித்து வாழ்ந்தார்கள். அவர் மனைவி இறந்துபோனபின், அவர் மறுபடியும் இலட்சுமி அம்மாளுக்கு ஆளனுப்பினார். அவள் அந்தரங்கமாய்த் தப்பி 1852-௵ நவம்பர்௴ நாகர்கோவில் வந்து சேர்ந்தாள். கிறிஸ்துமார்க்க உபதேசத்தின்பேரில் போதிக்கப்பட்டபின்பு, அவள் இயேசுநேசன் என்ற பெயரால் ஞானஸ்நானம்பெற்று, கிறிஸ்தவளாக தேவதாசனுக்கு விவாகம் செய்யப்பட்டாள். அவள் தன் புருஷனுடைய அடிச்சுவடுகளின்படி நடந்துவந்தாள். அவள் மூன்று குமாரருக்கும் ஒரு குமாரத்திக்கும் தாயானாள். அவர்கள் பேர், ஜேம்ஸ், மால்ற், சத்தியநேசன், அன்னாள். அன்னாள் பங்களூர் டானியேல் என்பவருக்கு விவாகஞ்செய்து கொடுக்கப்பட்டாள். ஆனால் அவள் விவாகமான 9 வாரங்களுக்குப் பின்பு தற்செயலாய் நேரிட்ட சம்பவத்தினால் 1872-௵ மார்ச்சு௴ 19௳ மரித்துப்போனாள். அவள் இப்படி மரித்தது, தேவதாசனுக்குக் கொடிய துயரமாயிருந்தது. என்றாலும், அவருக்குப் பெலனிருந்தது வரைக்கும் தம்முடைய எஜமானுடைய திராட்சத்தோட்டத்தில் பணிவிடை செய்துவந்தார்.

1874-௵ ஜனுவரி௴ 3௳ சனிக்கிழமையன்று இந்துக்களுக்குப் பிரசங்கம்பண்ணிவிட்டு, வீட்டுக்கு வந்தபோது, அவர் தமது



மனைவியைக் கூப்பிட்டு, என் கைகள் ஆடுகிறது, கர்த்தர் என்னைச் சீக்கிரமாய் எடுத்துக்கொள்வார்போல் தோன்றுகிறது; நான் என் வாசிப்பறைக்குச் சமீபமாய் வந்தபோது, என் புயங்கள் செத்துப்போனதுபோலிருந்தது; நான் புஸ்தகங்களைச் செலவிட முதலாய் ஏதுவில்லை என்று சொன்னார். ஆனாலும் சாயந்தரத்தில் வியாதிஸ்தரைச் சந்திக்கப் போனார். இராவில் குடும்ப ஜெபம் செய்ததின் பின்பு நித்திரைக்குப் போனார்.. கொடிய சுரம் அவருக்குண்டானது. முதற்தரமான வைத்தியர் அவருக்கு மருந்து கொடுத்தார்கள். அடிக்கடி ஜெபமும் செய்யப்பட்டது. ஆனால் தேவசித்தம் வேறாக இருந்தது. அடுத்த வெள்ளிக்கிழமை இரவில், அவர் தமது மனைவியைக் கூப்பிட, அவள் கிட்டவந்து, அவர் கைகளைப் பிடித்தாள். அப்போது அவர், நீ கர்த்தருடைய கையை இப்படியே பிடித்துக்கொள்ளவேண்டும். முடிவுபரியந்தம் நாம் உண்மையாய் நிலைத்திருந்தால், ஜீவகிரீடத்தைப் பெறுவோம் என்றார். 1874-௵ ஜனுவரி௴ 10௳ காலையிலே 60 வயசாயிருக்கையில் தேவதாசன் தம்முடைய கண்களைச் சமாதானத்துடன் மூடினார். சாயந்தரத்தில் கோவிலில் அடக்கத்துக்குரிய ஆராதனை வாசிக்கப்பட்டபின், அவருடைய உடல் கல்லறைக்குக் கொண்டுபோகப்பட்டது. அவருக்காகத் துக்கங்கொண்டாடின திரளான சபையாரும் இந்துக்களும் மகமதியரும் அவருடைய பிரேதக்ஷேமத்துக்கு வந்திருந்தார்கள். கனம்: ஜே. டபி ஐயர் அவருடைய நடக்கையைப்பற்றி எழுதியிருக்கிறதாவது, "கிறிஸ்தவனாக அவர் பிள்ளைகளைப்போன்ற உண்மையும் கபடமற்றவருமாயிருந்தார். அவர் உற்சாகமும் நம்பிக்கையில் ஒருக்காலும் தளராதவருமாயிருந்து, நேரிடும் எல்லாச் சம்பவங்களிலிருந்து அநுகூலமான நற்போதனைகளைக் கற்றுக்கொள்ளுவார். அவர் தம்முடைய ஆண்டவரும் எஜமானுமானவருடைய காரியத்திற்குத் தம்மை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்துத் தம்முடைய ஜீவநாட்களின் முடிவு வரைக்கும், அதில் அதிகம்திகமான உற்சாகமுடையவராயிருந்தார். சபையின் போதகராக தம்முடைய ஜனங்களைப்பற்றிய அன்பும், அவர்களுடைய ஆவிக்குரிய விஷயங்களைப்பற்றிய கரிசனையும் அவருடைய இடைவிடாத சுறுசுறுப்பும், ஞானமுள்ள நடத்துதலும், மாயமற்ற தாழ்மையும் பகிரங்கமாய் விளங்கின. அவரை அறிந்த நாங்களெல்லாரும் அவைகளுக்காக அதிசயப்படுவோம். அவரிடத்தில் ஏதாவது தப்பிதம் காணப்பட்டால், அது அவர் குற்றவாளிகளுக்குக் காட்டும் இரக்கமாயும் ஏழைகளுக்கு அதிகமான தர்மம் செய்வதாயுமிருக்கும். (நான் அவரை அறிந்த 15 வருடங்களாய் அவர்பேரில் சொல்லப்பட்டது இதொன்றுதான்.) தமது சபையைச்சேர்ந்த யாரையாவது என்றைக்கும் சபையைவிட்டு நீக்கிப்போடுவதை அவர்

தாங்கமாட்டார். அவர்கள் வெகுகாலத்திற்குப் பின்பாவது சீர்ப்படுவார்களென்று நம்பி, அப்படிப்பட்டவர்களுக்கு இலேசான தண்டனையைச் செலுத்தும்படி அவர்களுக்காக மன்றாடுவார். அநேக விஷயங்களில் அவர் கேட்டுக்கொண்டபடி நடந்தினதில், சேருண்டானதைக் கவனிக்கும்போது, அவர் இன்னதை இன்னபடி நடத்த வேண்டும் என்று அறிவுடையவராயிருந்தார் என்று சொல்லத்தக்கது. அவர் இயல்பாய் கடுங்கோபியாயிருந்ததால் பிரசங்க பீடத்திலிருந்து அடிக்கடி பாவத்தைப் பயங்கரப்படுத்தக்க வண்ணமாகக் கண்டிப்பார். அவர் முக்கியமாய் ஏழைகளின்பேரில் பாசங்காட்ட அவர்களுக்காகத் தமது கடைசிப் பிரசங்கத்தில் மிகுந்த சாமர்த்தியத்தோடே மன்றாடி, நான் எப்போதும் உங்களோடிரேன்; ஏழைகள் எப்போதும் உங்களோடிருப்பார்கள் என்ற வசனத்தை அடிக்கடி எடுத்துக் காட்டுவார். ஏழைகள் வாரந்தோறும் சமீபமாயும் தூரமாயுமுள்ள பல திசைகளிலுமிருந்து அவரிடத்தில் தர்மம் வாங்க வருவார்கள். அப்போது அவர்களுக்கு ஒழுங்காய் வேத சத்தியங்களைப் படிப்பிக்கவுஞ் செய்வார். ஒருகாலத்தில் பெருமை நிறைந்தோரிருந்த பிராமணன் இலக்கிய சந்தோஷமுகத்தோடே இப்பாக்கியமும் வியாதிப்பட்டவர்களுமான கூட்டத்தாருக்குச் சனிக்கிழமைதோறும் கொஞ்சம் அரிசி கொடுப்பது அவருக்கே ஒரு சிறப்பாயிருந்தது. அந்த ஏழைகள் அவரைத் தங்களுடைய பெரிய உபகாரி என்று மதித்துவந்தார்கள். அவர்களுக்கு நன்மைசெய்வது, அவருக்குப் பெரிய இன்பமாயிருந்தது. ஐயோ! அப்படிப்பட்ட கிரியைகளைச் செய்த கை என்றைக்கும் நம்மைவிட்டு மறைந்து போய்விட்டதே!

ஆயிரத்துக்கதிகமான ஜனங்களை மேய்த்துப் பராமரித்து வருவதே ஒரு பாதிரிக்குப் போதுமான வேலை. ஆனால் தேவதாசன் பாதிரியாக மாத்திரமல்ல, இளைப்பற்ற சுவிசேஷகருமாயிருந்தார். இந்த வேலையைச் செய்யாதபடி வியாதியாவது பெலவீனமாவது இடையூறாவது அவரை நிறுத்தவில்லை. அவர் எப்போதும் தமது பிதாவின் வேலையைச் செய்தார். "ஆயிரக்கணக்கானபேர்கள் அவர் மூலமாய்ச் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டார்கள்" என்பதே.

தேவதாசா உழைத்தாய் நன்றாக,
வேலைவிட் டிளைப்பாறு சுகமாக,
போர் முடிந்தது வெற்றியாயிற்றே,
பிரவேசி நீ மோட்சானந்தமே.



## 4. கனம்: ஹென்றி பௌவர் வேதசாஸ்திரியார்.

வேதசாஸ்திரியாகிய பௌவர் ஐயர் யூரோஷியன். ஆனால் அவர் இந்துதேச சபையோடே முழுவதுமாய் இணங்கிக்கொண்டு சிறந்த நன்மைகளை அதற்குச் செய்திருக்கிறதால், இந்த ஜீவிய சரித்திரத்தில் அவரைக் குறித்துச் சொல்வது தகுதியாயிருக்கிறது.

ஹென்றி பௌவர், சீயோன் கோவிலும் சபையும் இருக்கிற சிந்தாதிரிப்பேட்டையில் பிறந்தார். அவர் ஜார்ஜ் கோட்டைக்குள்ளிருக்கிற மேரி கோவிலில் ஞானஸ்நானம் பெற்றார். 1813-ஆம் ஜனுவரி மீ 13உ பிறந்தாரென்று ஞானஸ்நான டாப்பில் எழுதியிருக்கிறது. என்றாலும் அவருடைய குடும்பத்தார் டிசெம்பர் மீ 18உ தங்களுக்குக் குடும்பநாளாக எப்போதும் ஆசரித்துவந்தார்கள். டாக்டர் பௌவருடைய தகப்பனார் ஒரு பிராஞ்சுக்காரன். அவர்பேர் பிரான்சாய்ஸ் பௌவியர். அவர் வாலியின்கீழ் உத்தியோகமாயிருந்த போது சிறையாகப் பிடிபட்டார். அவர் கலியாணம் செய்து சென்னபட்டணத்திலே குடியிருந்தார். அவர் 1824-ஆம் மரித்தார். அப்போது அவருக்கிருந்த ஒரே மகன் பள்ளிக்கூடத்திலே படித்துவந்தார். பாலியனான பௌவர் தாபரசாஸ்திர வேலையைக் கற்றுக்கொள்ளும்படி கிண்டி பார்க்குக்கு அனுப்பப்பட்டபோது, அங்கிருந்த தலைமைத் தோட்டக்காரனான பிராஞ்சுக்காரன் தாபரசாஸ்திரம் அவர் மனதைக் கவராமல் புத்தகங்களில் அவர் மனம் செல்லுவதைக் கண்டான். சர் தோமாஸ் மன்றோவுக்கு சுய செக்கிரத்தேரியாயிருந்த கர்னல் ஜான் கார்பிரே அதை அவதானித்து பாலியன்பேரில் பிரியம்வைத்துப் பிள்ளையாண்டானுக்குத் தோட்டவேலையில் மனம் கவர்ச்சிகொள்ளவில்லை என்றறிந்து, 1826-ஆம் பட்டணத்து அரசு ஆண்பள்ளிக்கூடத்தில் சாப்பிட்டுப் படிக்கும்படியாகச் செலவுகொடுத்தார். அங்கே பாலியன் டாக்டர் ராஸ் துரையிடத்திலும் உவைற் துரையிடத்திலும் ஒரு வருஷத்துக்குமேல் கல்வி கற்றுக்கொண்டார். 1827-ஆம் அவருடைய உபகாரி அவரைத் தமக்கு உக்கிராணக்காரனாகவும் லிகிதராகவும் வைத்துக்கொண்டார். வல்லபசாலியான கவர்னர் சர் தோமாஸ் மன்றோவுக்கு விஷபேதி கண்டு மரித்தபோது, பௌவர் அவருக்கு உதவிசெய்துவந்தார். பின்பு அவர் பம்பாய் கவர்னராகிய சர் ஜான் மால்கோமுக்கு அறிமுகமானார். அவர் பௌவருக்கு நல்ல சம்பளம் கொடுப்பதாக வாக்கு அருளினார். ஆனால் கர்னல் கார்பிரே இங்கிலாந்துக்குப் போக யோசித்து, பௌவனையும் கூட்டிக்கொண்டு போவதாய் வாக்குக்

கொடுத்ததினாலே, அவர்களுடைய யோசனை அவ்வமாய்ப்போயிற்று. 1832-௵ மேய்மீ துராண்டஸ் என்ற கப்பலிலேறி, இங்கிலாந்துக்குப் புறப்பட்டு, அக்டோபர் மாசம் அங்கே போய்ச் சேர்ந்தார். அவர் எடின்பரோவிலும் அதற்குச் சமீபமான இடங்களிலும், இங்கிலாந்தின் தென்பாகத்திலும் தமது உபகாரியோடே அதிகமான காலத்தைப் பின்னிட்டார். கர்னல் கார்பிரே பௌவருடைய சம்ரக்ஷணைக்கு வேண்டியதை சவதரித்துக் கொடுப்பதாகச் சொன்னார். ஆனால் பாலியனுடைய மனம் மிஷனெரி வேலையின்பேரில் அபிலாசை கொண்டிருப்பதை அறிந்து, மனஸ்தாங்கலானார். என்றாலும் அவர் பௌவருக்கு ஒரு உண்டியல் சீட்டுக் கொடுத்து, அதில் அவர் தமது கையொப்பமும் தேதியும் போட்டுக் கொடுத்தார். அதில் தொகை யிவ்வளவென்று காட்டவேண்டிய இடத்தில் ஒன்றும் காட்டாமல் விட்டிருந்தது.

ஹென்ரி பௌவருடைய மிஷனெரிவேலை 1832-௵ நவம்பர் 1உ முதல் தொடங்கினது. அவர் அப்போது லண்டன் மிஷனெரி சங்கத்தைச் சேர்ந்தவராயும், வேதாகம சங்கத்தில் கனம்: ஜான் ரிப்து ஐயர் கைக்குள் ளாற்றாயும் சேர்ந்துகொண்டார். ரிப்து ஐயர் அநேக வாலிபரை மிஷன்வேலைக்காக அப்பியாசப்படுத்திக்கொண்டுவந்தவர். 1837-௵ பௌவர் லண்டன்மிஷன் சங்கத்தாரால் திருப்பாச்சூருக்கு அனுப்பப்பட்டார். அடுத்த வருடம் புரசைபாக்கத்துக்கு மாற்றப்பட்டார். 1842-௵ அவர் கால்டுவெல் அத்தியக்ஷருக்குச் சில மாசங்களுக்கு முன் இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்தார். சுவிசேஷ அபிவிர்த்தி சங்கத்தார், அவரை முதலாவது திருச்சிறுப்பள்ளிக்கு அனுப்பி, பின்பு தஞ்சாவூருக்கு மாற்றினார்கள். தஞ்சாவூருக்கு நாலுமைலுக்கு வடக்கே பௌவர் ஐயர் ஒரு சாஸ்திரப் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தார். அந்த இடத்துக்கு அவர் வேதியர்புரம் என்று பேரிட்டார். அந்த இடத்தில் அவர் சிறந்த வேலைகளை நடப்பித்தார். ஆனால் அவருடைய சால்வை அவருக்குப் பின் வந்தவர்கள்மேல் விழவில்லை: ஏனெனில் அந்தப் பள்ளிக்கூடமும் கோவிலும் இப்போது சிதறிந்து கிடக்கின்றன. 1858-௵ அவர் தமது சேகரத்தை விட்டு வேதாகம திருப்புதலுக்காக சென்னை பட்டணத்துக்குப் போனார். அநேக வருடங்களுக்குப் பின்பு, அவர் மறுபடியும் சாதாரண மிஷனெரி வேலைக்கு நியமிக்கப்பட்டு, 1864-௵ வெப்பேரியில் திவ்விய பணிவிடையை நிறைவேற்றினார். 1872-௵ திருச்சிறுப்பள்ளிக்கு அனுப்பப்பட்டார். பின்பு சில காலம் திருநெல்வேலிக்கும் மறுபடி வெப்பேரிக்கும் கடைசியாக பரங்கிமலைக்கும் மாற்றப்பட்டார். கடைசியாக மாற்றப்பட்டதை அவர் அநியாயமென்று எண்ணினார். அவருடைய உத்தம சிநே-



கிதர் எல்லாரும் அவர் சடங்காசாரங்களுடன் ஆராதனை செய்யவில்லை என்பதைச் சில செல்வாக்குள்ளவர்கள் குற்றமாக எண்ணி அப்படி மாற்றினதாக ஒன்றுபடச் சொன்னார்கள். டாக்டர் பௌவர் ஐயர் தாம் வெகுகாலமாய் தமிழ்ஜனங்களுக்காக உழைத்தும் தமிழ் சபையை மேல்விசாரிக்கத் தகுதியற்றவர் என்பதுபோலெண்ணி, பரங்கிமலையில் இங்கிலீஷ் ஆராதனை நடப்பிக்கும்படி அனுப்பினது, அவர் மனதுக்கு மிகுந்த வருத்தத்தை யுண்டுபண்ணினது. மேலும் வெப்பேரியில் இருபது வருடங்களாக இருந்த மிஷன் வீட்டை விட்டுவிடவேண்டும் என்றும் நெருக்கினார்கள். அவருடைய சுகவீனம் அதுமுதல் துவக்கினது. டாக்டர் பௌவர் ஐயர் திருநெல்வேலியில் ஒரு நாளிலே வைப்பாற்றிலே பிராயம் கடந்த சிலருக்கு ஞானஸ்நானம் கொடுத்ததைப்பற்றி மிகுந்த மனப்பூரிப்போடே எப்போதும் பேசுவார். அவர் ஸ்பென்சர் அத்தியட்சரால் 1843-௵ உதவிக்குருவாகவும் 1845-௵ குருவாகவும் அபிஷேகம் பண்ணப்பட்டார்.

டாக்டர் பௌவருடைய பேர்பிரஸ்தாபம் சுதேச சபையை ஊன்றக் கட்டும்படி இளைப்பற்றவண்ணம் செய்த பிரயாசங்களினிமித்தம், தென்னிந்தியாவில் என்றென்றைக்கும் நிலைநிற்கும். அவர் 1833-௵ முதலாவதாக பிஷநருடைய வினாவிடை புஸ்தகத்தைத் திருப்பினார். நன்னூலும் பகவத்கீதையும் அவர் செய்த முக்கிய திருப்புதல்கள். பகவத்கீதை அச்சிடப்படவில்லை. அவர் சிந்தாமணியை அச்சிட்டார். அது தமிழ்க்கல்விக் களஞ்சியத்தில் மிகப்பெரிதான ரத்தினங்களில் ஒன்றாயிருக்கிறது. அவர் வேத அகராதி, பதமஞ்சரி, பிரசங்க ரத்தினாவளி, இந்துதேச திருச்சபை சரித்திரம் இவைகளைச் சுயமாய்ச் செய்திருந்தார். பீயர்சன் பட்லர் என்பவர்களுடைய அரும்நூல்களையுந் தமிழில் மொழிபெயர்த்தார். தர்மசாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், இலக்கணம் என்றவைகளின்பேரில் கையெழுத்துப் பிரதிகளாக அநேக பிரசங்கங்களை எழுதிவைத்திருக்கிறார். அவைகளை அச்சிட்டு மேற்பார்ப்பதற்குத் தகுந்தஆள் வேண்டியது. அவர் வேதாகமத்தைத் தமிழில் திருப்புவதில் மேலான பிரயாசத்தைச் செலுத்தினார். பதின்மூன்று வருடங்களுக்குப்பின் அது 1871-௵ சென்னை உதவி வேதாகம சங்கத்தாரால் அச்சிடப்பட்டது. அது முடிந்தபின், ஜெப புஸ்தகத்தைத் திருப்பினார். அது சீக்கிரத்துக்குள்ளாக முடிந்தது. 1850-௵ டாக்டர் பௌவர் ஐயர் கல்குத்தா சன்மார்க்க புஸ்தக சங்கத்தாருக்காக ஜாதி வேற்றுமையைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுதினார். பிந்தியகாலத்தில் சென்னபட்டணத்தில் கூடனார் சபைக்கூட்டத்தில் அந்த காரியத்தைக்குறித்துப் பேசினார். தமிழ் அவருக்கு மிகப் பிரியமான பாஷை. அவருக்கு இந்துஸ்தானி, கன்னட, சமஸ்

கிருத, கிரேக்கு, லத்தீன் பாஷைகளும் தெரியும். ஜெல் அத்தியட்சர் கந்தர்புரி சிரேஷ்ட அத்தியட்சரைக் கேட்டபோது அவர் பௌவர் ஐயருக்கு உடனே வேதசாஸ்திரி என்ற பட்டத்தைக் கொடுத்தார். 1861-ஆம் முதல் சென்னை சர்வகலாசாலை பரீட்சை செய்கிறவர்களில் ஒருவராயிருந்தார். 1871-ஆம் அவர் மேற்படி சர்வகலாசாலைக்குப் பெல்லோவானார்.

அவர் சுகவீனப்பட்டிருந்ததால், ஜூன் மீ 1உ திருச்சிராப்பள்ளியிலும் திருநெல்வேலியிலும் உத்தியோகமாயிருந்த தம்முடைய மூன்று குமாரரோடும் கூடமொருவன் சிலகாலம் பின்னிடலாம் என்று புறப்பட்டார். 1885-ஆம் ஜூலை மீ நடுவில் அவர் குற்றாலத்துக்குப் போனார். அந்த மாசம் கடைசி தேதியில் அவருக்குத் தோஷிப்புண்டாக, அவரைப் பாளயங்கோட்டைக்குக் கொண்டுவந்தார்கள். அங்கே மறுபடியும் சனிக்கிழமையன்று தோஷிப்புண்டாயிற்று. அதுமுதல் அவருக்குப் புத்தித் தெளிவில்லாதிருந்தது. ஆகஸ்டு மீ 2உ சாயந்தரம் அவர் தம்முடைய மூத்தமகன் வீட்டில் வெகு அமைதலாய் ஜீவனைவிட்டார். அவரை அங்கிலேயருடைய கல்லறைத்தோட்டத்தில் அடக்கம்செய்திருக்கிறது. அடக்க ஆராதனையை சர்ச்சுமிஷன் சங்கத்தைச் சேர்ந்த கனம்: ஆர்க்காட் ஐயரும், கனம்: கெய்பர் ஐயரும் வாசித்தார்கள். அவர் திரளான கிறிஸ்தரால் மிகக் கண்ணியமாய் மதிக்கப்பட்டுவந்தார்.

## 5. கனம்: பூவிருந்தவல்லி ராஜகோபால ஐயர்.

**இளம்பிராயமும் ஞானஸ்நானமும்.**—பூவிருந்தவல்லி ராஜகோபால ஐயர், சென்னபட்டணம் பிரி சர்ச்சு மிஷனில் முதலாவதாகக் குணப்பட்டவரும், அந்த மிஷனில் மிக சிறந்த குருவுமாயிருந்தார். அவர் தகப்பனார் சென்னபட்டணத்துக்குச் சமீபமான பூவிருந்தவல்லியில் முனிசிப்புவாயிருந்தார். ராஜகோபால் சிறுபிராயமாயிருக்கையில் அவர் மரணமடைந்தார். பாலியன் தமிழ்ப்பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்டபின்பு, தன்னுடைய பதினாலாம் வயதில் கனம்: ஜான் அண்டர்சன் ஐயரால் 1837-ஆம் ஏற்படுத்தப்பட்ட கல்விச்சாலையில் சேர்ந்தார். அண்டர்சன் ஐயர் உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த செட்டிக்காரப் பிள்ளைகளுக்கு இங்கிலீஷ் கல்வியின்மேல் இருக்கிற அபிலாஷையைக் கண்டு, அவர்களுக்கு அதைக் கற்பிக்கவும், அதற்கு மேலான நன்மையை அவர்களுக்குக் கொடுக்கவும்



மனமுள்ளவராயிருந்தார். அவர் அவைக்குமுதல் நாலு மாணாக்கமாருடைய குணப்படுதலைப் பகிரங்கமாய்க் கருதினார். அவர்கள் சுவிசேஷத்தை அங்கிகரிக்கும்படி அவர்களுக்குச் சொன்ன போதனைகள் மெத்த சாமிநயமாயிருந்தன. அவர் மாணாக்கராயிருந்த இளம்பிராயமுதல் விவாதத்தில் பிரியமுள்ளவராயிருந்தார். அவர் கல்வி கற்றுக்கொடுக்கும்போது அதை விளங்கக் காட்டினார். அதால் அவர் தம்முடைய மாணாக்கமாருடைய உள்ளத்தில் ஆச்சரியமான பிரகாரம் முயற்சியை உண்டாக்கும்படி ஏதுகரமாயிருந்தார். படிப்படியாய் மாணாக்கமார், தேவனும் கிறிஸ்துவும் கிறிஸ்துமார்க்கமும் உள்ளபடியான காரியங்கள் என்றும், அவைகள் அவர்களுக்கு விசேஷித்தவைகளாய்ச் சம்பந்தப்பட்டவைகள் என்றும் அறிந்துகொண்டார்கள். அவர்களில் சிலர் உபாத்தியாருடைய ஆவியை அதிகமாய் உட்கொண்டவர்களாயும், தெய்வீக எழுப்புதலுக்கு இணங்கினவர்களாயும் காணப்பட்டார்கள்.' இந்தக் கூட்டத்தில் ராஜகோபால் மாணாக்கருக்குள் தமது இளம்பிராயமுதல் சேர்ந்திருந்தார். அவருடைய உயிர்சிநேகிதனாகிய வெங்கிட்ட ராமய்யரும் அப்படியே சேர்ந்திருந்தார். ஆனால் வெளியரங்கமான பலன் காணப்படுவதற்குச் சில வருடங்கள் சென்றன. 1841-ஆம் ஜூன் மீ 20உ ராஜகோபாலும் வெங்கிட்ட ராமய்யரும் ஞானஸ்நானம்பெற்றார்கள். அதைப்பற்றி அண்டர்சன் ஐயர் எழுதியிருக்கிறதாவது:

“அந்த ஓய்வுநாள் இரவில் சுவிசேஷத்தினால் நாங்கள் பெற்ற எங்களுடைய அருமையான இரண்டு பிள்ளைகளும் நிராதவசியமாய் மிஷன் வீட்டில் எங்களோடே இருந்து எங்களுடன் மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும், போஜனம்பண்ணி 'தேவனை ஸ்துதித்தார்கள். நித்திரைக்குப் போகுமுன் ராஜகோபால் மவுனமாய் வேதாகமத்தை யெடுத்து நாலாம் சங்கீதத்தில் “அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிறகாலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும் அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர். சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன். கர்த்தாவே, நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்” என்ற வாக்கியத்தில் தன் விரலை வைத்துக் காட்டினான்.”

“திங்கள் காலையில் இரண்டு பாலியரும் அவர்களுடைய இனபந்துக்களால் கொடிய துன்பங்களை அனுபவிக்கும்படியாக ஏதுவாயிற்று. அவர்களை விசுவாசத்தைவிட்டு மறுதலிக்கவும், இந்துமார்க்கத்துக்குத் திருப்பவும், அவர்களுக்குச் செய்யக்கூடிய உபாய தந்திரங்கள் எல்லாம் செய்யப்பட்டன.' என்ன, கிறிஸ்துமார்க்கம் உங்கள் பிதாக்களும் தாய்மாரும் சிநேகிதருமாகிய எங்களைப் பகைக்கவா

போதிக்கிறது? இதெப்படிப்பட்ட மார்க்கம் என்று அடிக்கடி கூப்பாடிட்டார்கள். அதற்குப் பாலியர், தங்கள் முகத்தில் கண்ணீர்வடிய அப்படியல்ல, உங்களை நேசிக்கும்படி கிறிஸ்துமார்க்கம் எங்களுக்குப் போதிக்கிறது. நாங்கள் உங்களிடத்தில் அன்புகூருகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். எங்களுடைய தாய்மார் தகப்பன்மார் சகோதரராகிய உங்களிடத்தில் முன்னைவிட அதிகமாய் அன்புகூருகிறோம். கர்த்தர் உங்கள் ஆத்துமாக்களுக்கு இரக்கம் காட்டும்படி இரவும் பகலும் உங்களுக்காக ஜெபம்பண்ணுகிறோம்" என்றார்கள்.

"இந்தப் பிரயத்தனத்தினால் சித்தியுண்டாகவில்லை என்று கண்டு, நாங்கள் அவர்கள் பிள்ளைகளை அவர்களுடைய மனதுக்கு விரோதமாய் எங்கள் வசமாய் வைத்துக்கொண்டோம் என்று பிரியாது செய்து, அன்று சாயந்தரத்தில்தானே எங்களுக்கு வாரண்டு கொண்டுவந்தார்கள். பாலியர் பிரதான மேஜிஸ்திரட்டார் முன்புக்கு அவர்கள் இனபந்துக்கள் சிநேகிதர் முதலானவர்கள் நடுவில் மனவுறுதியோடும் மரியாதையோடும் கிறிஸ்துவை சிறந்தவிதமாய் அறிக்கையிட்டார்கள்."

'மேஜிஸ்திரட்டார் பாலியனைப் பார்த்து உங்கள் இனபந்துக்களுடன் வீட்டுக்குப் போகிறீர்களா என்று கேட்க, அவர்கள் அப்படியல்ல, அண்டர்சன் ஐயரோடு போவோம் என்று தைரியமாய்ச் சொன்னார்கள். இரண்டு பாலியரும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களென்றும், தாங்களே ஒன்றை யோசித்து நிதானிக்கத்தக்கவர்களென்றும், அவர்களுடைய கேட்டுக்கொள்ளுதலின்படியே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதென்றும் அறிந்து அவர்கள் சொன்னபடியே அவர்களுக்கு எங்கே போகப் பிரியமோ அங்கே போகலாமென்று மேஜிஸ்திரட்டார் தீர்ப்புச்செய்து, பிரியாதைத் தள்ளினார். நாங்கள் போகப் புறப்பட்டபோது, போலிஸ் ஆபீசுக்கு எதிரே பிரதான மேஜிஸ்திரட்டார் முன்புக்கு வாலிபரை பலாத்காரமாய்க் கொண்டுபோகும்படி எங்கள்மேல் பாய்ந்தார்கள். ஆனால் அவர்கள் பிரயத்தனம் பலிக்காமற்போயிற்று. பட்டணம் முழுவதும் கலங்கினது. திரள்கூட்டத்தார் இரண்டுமூன்று நாட்களாய் எங்கள் வீட்டைச் சூழ்ந்து பயமுறுத்தி வீரம் பேசினார்கள்" என்பதே.

கல்விச்சாலையில் 400 பேர் படித்தார்கள். அந்தத் தொகை 70 ஆகக் குறுகினது. ஆனால் வரவர பழையபடி தொகை வந்தெட்டினது.

**பயிற்சியும் வேலையும்.** — சுவிசேஷத்தை இந்து தேசத்தாருக்குள் விர்த்திசெய்யும்படி சுதேசிகளைக் குருக்களாக்க வேண்டுமென்பது மிஷனெரிமாருடைய அவாவாயிருந்தது. ராஜகோபா



லும் அவர் சிநேகிதரும் அண்டர்சன் ஐயர் வீட்டிலே இருந்து, அவர் மேசையில் சாப்பிட்டு, ஐரோப்பியருடைய வழக்கங்களையும் மேஜைகளையும் பின்பற்றிவந்தார்கள். அது நல்லெண்ணத்தோடே செய்யப்பட்டபோதிலும், அது தப்பிதம். ஏனெனில் அவர்கள் அதினால் தங்கள் தேசாசாரத்தை விட்டு அதிகமான செலவுபிடிக்கும் பழக்கத்துக் குள்ளாகவேண்டியதாயிற்று. குருப்பட்டத்துக்கென்று ஆயத்தப்படுத்தப்பட்டபோது, ராஜகோபாலும் அவர் சிநேகிதரும் கல்விச்சாலையில் வேதபாடம் படிப்பித்துவந்ததுடன், அடிக்கடி வைதீகத்துக்குரிய பிரசங்கங்களும் செய்துவந்தார்கள். ஐந்து வருஷம் பயிற்சிக்கப்பட்டபின்பு, அவரும் அவருடைய சிநேகிதர் இரண்டு பேரும் சென்னபட்டணத்து மிஷன் குருக்களால் லைசென்ஸ் பெற்றார்கள்.

ராஜகோபால் அண்டர்சன் ஐயருக்கு உதவியாயிருந்து, அவருடைய கவலைகளையும் பணிவிடைகளையும் இலகுவாக்கினார். அண்டர்சன் ஐயருடைய பிரசங்கங்களைத் தமிழிலும் தெலுங்கிலும் திருப்பிச் சொல்லுவார். பாலிய மாணாக்கருக்கும் மிகுந்த பிரயோசனமாயிருந்தார். இந்தக்காலத்தில் அவர் சற்குணசாலியான ஒரு கிறிஸ்தவப் பெண்ணை விவாகம் செய்தார். அவள் தன் கணவனுக்கு மிகுந்த உதவியாயிருந்தாள். அவள் மரணத்தைக்குறித்து, அவர் கடைசிபரியந்தம் துக்கித்துக்கொண்டிருந்தார். அண்டர்சன் ஐயர் 1847-௵ லோகூர் மிசி அம்மாளை விவாகம் செய்திருந்தாலும், அநேக வருஷங்களாக ராஜகோபாலும் அவர் மனைவியும் அண்டர்சன் ஐயர் வீட்டில்தானிருந்தார்கள். துவக்கமுதல் கடைசிபரியந்தம் ராஜகோபால் அண்டர்சன் ஐயருடைய "நேசகுமாரனான ராஜாவாயிருந்தார்." மரணமே யல்லாது வேறொன்றும் அவர்களைப் பிரிக்கத்தக்கதல்ல.

அண்டர்சன் ஐயர் 12 வருடம் இடைவிடாமல் வேலைசெய்து, குணப்பட்ட பெண்பிள்ளைகளை மேற்பார்க்கும்படி தம்முடைய அம்மாளைப் பின்னிருத்தி, 1849-௵ ராஜகோபாலைக் கூட்டிக்கொண்டு ஸ்காட்லாந்து தேசத்துக்குப் போனார். ராஜகோபாலும் தமது மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுத் தமது ஞானத்தகப்பனுடன் சென்றார். அங்கே அவர்களை வெகு பிரீதியோடே ஜனங்கள் ஏற்றுக்கொண்டதால், அவருக்கு நேரிட்ட பரீட்சைக்குச் சரிக்கட்டப்பட்டது. ஜனங்கள் திரள் திரளாய் அவருடைய பிரசங்கத்தைக் கேட்க வந்தார்கள். விவேகமற்ற சிநேகிதரால் அவர் போற்றி புகழப்பட்டாலும், அவர் அதினால் பெருமைகொள்ளவில்லை. அவர் சென்னபட்டணத்துக்கு மனத்தாழ்மையுடைய கிறிஸ்தவனாகத் திரும்பிவந்தார்.

பாலிய பிரசங்கி தம்முடைய முயற்சிக்குத் தக்கதாகக் கல்விச்சாலையில் போதுமான வேலையிருக்கக் கண்டார். என்றாலும் ஜனங்களுக்குச் சுயபாஷையில் சுவிசேஷத்தை அறிவிக்கும் வேலையையும் அவர் மறந்துபோகவில்லை. காலத்துக்குக் காலம் செங்கல்பட்டு காஞ்சிவரம் முதலிய இடங்களிலுள்ள பள்ளிக்கூடங்களைப் பரீட்சிக்கப் போகையிலும், திரும்புகையிலும் பட்டணங்களிலும் கிராமங்களிலும் அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தார். தெலுங்கு நாட்டில் சென்னபட்டணத்துக்கு 100 மைலுக்கு வடக்கேயிருக்கிற நெல்லூர்வரைக்கும் அந்தப்படியே செய்துவந்தார்.

குருப்பட்டாபிஷேகம்.—1851-௵ லெசென்ஸ் பெற்ற மூவரும் பிரிசர்ச்சுமிஷனைச் சேர்ந்தவர்களாக பட்டாபிஷேகம் பெற்றார்கள். அண்டர்சன் ஐயர் அப்போது செய்த பிரசங்கத்தில் "உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டவராக இயேசுவை உயர்த்திக் காட்டுங்கள். நீங்கள் அவரை விசுவாசித்திருப்பதாலும், நீங்கள் அவரைக் குத்தினதினாலும், உங்கள் பாவங்கள் அவர்மேலில் சுமத்தப்பட்டதினாலும் அவரைப் பிரசங்கியுங்கள். உங்களை நேயத்துக்கு வாங்கின கர்த்தராகிய கிறிஸ்துவை நீங்கள் இவ்வண்ணமாய்ப் பிரசங்கிப்பீர்களானால், அவர் உங்களைக்கொண்டு பிரசங்கிப்பார்" என்று சொன்னார். இந்த வார்த்தைகளின் கருத்துக்கிசைவாக ராஜகோபால் கடைசிபரியந்தம் நடந்துகொண்டார். ஜான் அண்டர்சன் ஐயருடைய பணிவிடை கொஞ்சக்குறைய முடிந்தது. அவர் ஸ்காட்லாந்துக்குப் போனதில் பூரண சுகமுண்டாகவில்லை. 1855-௵ மார்ச்சு௴ 24௳ ராஜகோபால் ஐயர் அருகேயிருக்க ஜீவனைக் கர்த்தரிடத்தில் ஒப்புவித்தார்.

1855-௵ முதல் 1862-௵ வரையும் மிஷன் காரியாதிகள் மாறுதலுக்குட்பட்டுவந்தது. அது அண்டர்சன் ஐயருடைய காலத்தில் குணப்பட்டவர்களுக்குப் பரீட்சை காலம்போலிருந்தது. அவரை நன்றாய் அறிந்தவரும், அவர்களுடைய பெலவீனங்களை உணர்ந்தவரும், அவர்களுக்குப் பாசம் காட்டினவருமாய்ப் போய்விட்டதால், அந்தச் சிறிய கூட்டத்தில் துக்கப்படத்தக்கதான குறைதல் நடந்தது. காரியம் இப்படி இருந்ததால், அவர்களை மேல்விசாரிக்க ஒரு பாஸ்டரை நியமிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. 1858-௵ ஜனங்களும் மிஷனெரிமாரும் ராஜகோபாலை அதற்கென்று ஏற்படுத்தினார்கள். அது மிக வருத்தமான ஸ்திதியாயிருந்ததாலும், அவருக்கிருந்த பலத்த சக்தியினாலும், அவருடைய ஸ்திரமான நடக்கையினாலும் அதை நிலைநிறுத்திவந்தார். அவருடைய பணிவிடைக்குட்பட்டவர்கள் அவருக்குக் கொடுக்கப்பட்ட பிரசங்க வரத்துக்காக




வும், ஆலோசனை சொல்வதில் அவரில் காணப்பட்ட ஞானத்துக்காகவும், சிநேகிதனாக அவர் பாராட்டின அருமைக்காகவும் நெடுநாட்களாய் அவரை அதிகமாய் மதித்துவந்தார்கள்.

சில வருஷகாலமாய் ராஜகோபால் தமது சபையின் வேலையோடே அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் வேலையையும் நடத்திவந்தார். அப்பால் அவர் மனம், மேல்தேசத்தாருடைய கல்வியைக் கற்றதினால் மனதிலே அறிவுண்டாகி, சந்தேக சாகரத்தில் தள்ளாடின சென்னபட்டணத்து சுதேச கல்விமான்கள் பேரில் சென்றது. அவர் சுதேச கிறிஸ்தவ கல்விச்சங்கம் ஒன்றை ஏற்படுத்தி, கிறிஸ்தவ அங்கத்தாருடைய அந்நியோந்நிய தேர்ச்சிக்கும், கல்விமான்களான இந்துக்களுக்குப் பிரயோசனமும் எழுப்புதலுமான காரியங்களைக்குறித்துப் பிரசங்கிப்பதற்கு ஒழுங்குசெய்தார். இவெஞ்சலிஸ்டிக் ஹாலில் அருமையான புஸ்தகசாலையொன்றும் ஏற்படுத்தப்பட்டது. அங்கே வைதீக விஷயமாயும் கல்வி விஷயமாயும் சாஸ்திர விஷயமாயும் பிரசங்கங்கள் நடத்தப்பட்டதால், இந்துக்கள் அநேகர் அந்தக் கூட்டத்துக்கு வந்துகொண்டிருந்தார்கள்.

கிறிஸ்தவ பரோபகாரி.—சென்னபட்டணத்து வடபாகத்திலே பெரிய பாச்சேரியில் அநேகர் கொடிய தரித்திரத்தசையில் புலைஞர்போலிருந்தார்கள். அவர்களுடைய பெற்றோர் கூலிவேலைக்காரராயிருந்தார்கள். அவர்களுக்குக் கிடைத்த சம்பளம் அற்பம். அதுவும் நிச்சயமற்றதாயிருந்தது. அவர்கள் நெருக்கமான நிற்பந்த அழுக்கான குடிசைகளில் குடியிருந்தார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளை முன்னுக்குக் கொண்டுவருவதும் கூடாததாயிருந்தது. பிள்ளைகள் நிர்வாணிகளாயும், அசுசிகளாயும் அறிவீனத்தில் வளர்ந்துவந்தார்கள். சன்மார்க்கம் அவர்களுக்குள் கிடையாது. மரியாதை, ஒழுக்கம் இன்னதென்று அவர்கள் அறியார்கள். துன்மார்க்கத்துக்கு அவர்கள் இரையாயிருந்தார்கள். இப்படிப்பட்ட ஜனங்களுக்கு இந்துமார்க்கம் எவ்வளவும் பட்சம் பாராட்டுகிறதில்லை. அவர்கள் சபிக்கப்பட்ட ஜாதியாராய் என்றைக்கும் அடிமைத்தனத்துக்கு நியமிக்கப்பட்டவர்கள்போலிருந்தார்கள். அவர்களோடே சங்காத்தம் செய்வது தீட்டாக எண்ணப்பட்டது. அவர்கள் நீசத்தனத்திற்கு விட்டுவிடப்பட்டிருந்தார்கள். ராஜகோபால் மிஷன் உதவியின்றி, அப்பேர்ப்பட்ட ஜனங்களுக்குள் கிரியை செய்யத் தொடங்கினார். பரச்சேரி மத்தியில் ஒரு வீட்டை வாடகைக்கு வாங்கி, அதில் பள்ளிக்கூடம் வைத்துச் சில பிள்ளைகளைச் சேர்த்துப் படிப்பித்தார். பிள்ளைகள் மரியாதையாகக் காணப்படும்படி அவர்களுக்கு வஸ்திரம் கொடுக்கப்பட்டது. பின்னும் அநேகருக்குச் சாப்பாடும் கொடுக்

கப்பட்டது. வரவர பிள்ளைகள் அதிகரித்து, நாடோறும் 100 பேர் படித்துவந்தார்கள். அவர்களில் அநேகர் பள்ளிக்கூடத்தை விட்ட பின்பு, வீட்டுவேலைக்காரராக அமர்ந்தார்கள். மற்றவர்கள் அச்சுக்கூடங்களிலும், ஷாப்புகளிலும் வேலைபார்த்துவந்தார்கள். அநேகர் படிப்பில் தேறி, உபாத்திமாராகும்படி பத்திரம் பெற்றார்கள். சிலர் கிறிஸ்தவர்களானார்கள்.

சென்னபட்டணத்து கவர்ண்மெண்டார் முன்னமே அனாதருக்கு அடைக்கலமாய் வைத்திருந்த ஒரு கட்டிடத்தை அவருக்குக் கொடுத்தார்கள். அவர் கடைசியாக ஸ்காட்லாந்து தேசத்துக்குப் போனதில், அந்தப் பள்ளிக்கூடம் நிலையாயிருக்கத்தக்கதாக பணம் சேர்த்து வட்டிக்கு விட்டார். அந்தப் பள்ளிக்கூடம் இப்போது கனம்: பூ. ராஜகோபால ஐயர் ஏழைகள் பள்ளிக்கூடம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. அது அவருடைய பிரயாசத்துக்குரிய ஞாபகச்சின்னமாயிருக்கிறது.

**ஸ்திரீகளுக்காகச் செய்த வேலை.**—இந்துதேச ஸ்திரீகள் அநேக நூற்றாண்டுகளாக ஆண்பிள்ளைகளுக்கு அடிமையாயிருந்துவந்தார்கள். அதோடு அவர்கள் ஆண்பிள்ளைகளுக்கு கிங்கரிகளாயுமிருந்தார்கள். சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று விரும்பும் இந்துக்கள், வைதீக விஷயத்தில் சீர்திருத்தம் செய்ய ஏற்படுத்தும் ஒழுங்குகள் ஸ்திரீகளுடைய சொற்சக்தியாகிய கன்மலையில் அடியுண்டு ஒழிந்துபோவதைக் கண்டறிந்துகொள்வார்கள். ஏனெனில் அறிவீனமும் வீண்பக்தியும் கையோடே கைகோத்துப் போகிறதுண்டு. 1870-ஆ ராஜகோபால் ஸ்திரீகளுக்காகத் தம்முடைய வேலையைத் துவக்கினார். அவர் கோவிலுக்குச் சமீபமாய் அநேக செட்டிகள் வியாபாரத்தில் முயற்சியுள்ளவர்களாய்க் குடியிருக்கிறார்கள். அவர்கள் வீண்பக்திக்காரரான முரட்டு இந்துமதஸ்தர். பிரெட் ஹுட் துரை ஒரு தருணத்தில் ஒரு நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கி, அங்கே ஒரு பள்ளிக்கூடம் கட்டத் துவக்கினார். ஆனால் அந்தச் செட்டிகள் ஒன்றுபோல எழும்பி, பள்ளிக்கூடத்துச் சுவரை இடித்து, வேலைசெய்தவர்களைத் துரத்திவிட்டார்கள். அப்பால் இருபது வருஷகாலமாய் ஒன்றுஞ் செய்யப்படவில்லை. அந்தமட்டிலே காரியம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. ராஜகோபால் ஐயர் ஒரு வீட்டைக் கிட்டஞ்செய்து, அதில் ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தார். முதலில் கொடிய விதமாய்ச் செட்டிகள் எதிரிடைசெய்தார்கள். ஆனால் அவர்களுக்குள்ளும் புளித்தமா கிரியை செய்திருந்தது. வரவர பள்ளிப்பிள்ளைகள் சேர்ந்தார்கள். செட்டிகள் குடியிருப்பின் மத்தியில் ஒரு நேர்த்தியான கட்டிடம் சமைக்கும்படி பணங்களும் சேகரிக்கப்பட்டு,



காற்றோட்டமுள்ள விஸ்தாரமான பள்ளிக்கூடம் அறை அறையாகக் கட்டப்பட்டது. இப்போது அறுநிறைய முகம்இலங்கிய புத்திக்கூர்மையுள்ள பிள்ளைகள் படித்துவருகிறார்கள். அது அந்த இடத்துப் பார்வைக்கு அலங்காரமாய்க் காணப்படுகிறது. இந்தச் சித்தியினால் தைரியங்கொண்டு, இராயபுரத்தில் இரண்டாவதாக ஒரு பள்ளிக்கூடமும், அப்பால் வேறு இரண்டு பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபித்தார். அவைகளில் அவர் விசாரணைக்குள் ஐஞ்ஞூறு அறுநூறு பிள்ளைகள் படித்தார்கள்.

**கடைசி வருஷங்கள்.**—இந்தப் பிரயத்தனங்களினால் ராஜகோபால் ஐயருடைய சுகத்துக்குக் கெடுதல் நேரிட 1882-ஆ அவரைப்பற்றிய பயமுண்டானது. இடமாற்றவும், இளைப்பாறவும் அவருக்கு ஆலோசனை சொல்லப்பட்டது. பட்சமும் உதாரகுணமுமுள்ள சிநேகிதர் வீரதீரனான மிஷனெரியை ஸ்காட்லாந்துக்கு வரும்படி அழைத்தார்கள். அவர் தமது சுகத்துக்காக அங்கே போனார். அங்கிருக்கையில், பிரிசர்ச்மிஷன் சங்கத்தார் பணவுதவி செய்யும்படி அவர்களை ஏவிக்கொண்டிருந்தார். அவர் தமது ஏழைகள் பள்ளிக்கூடத்தைப்பற்றி அருங்கவலையுள்ளவராயிருந்தார். ஏனெனில் அவர் தலையிட்ட காரியங்களில் அதுவே அதிகச் செலவுள்ளதாயிருந்தது.

அவர் எங்கேபோனாலும் ஐசுவரியவான்கள், தரித்திரரான திரள் சனங்கள், அவருடைய பிரசங்கங்களைக் கேட்க வந்து, உதாரமாய் அவருக்கு உதவிசெய்தார்கள். ஒரு ஏழை வேலைக்காரி இந்தியாவுக்காகத் தன் காணிக்கை யென்று சொல்லி, ஒரு பவுன் நோட்டு கொடுத்தாள். ஒரு ஐசுவரியவான் 10 பவுன் கொடுத்தார். தமது ஏழைகள் பள்ளிக்கூடத்துக்கென்று 5,000 பவுன் சேகரித்தார். அதை அவர் தருமகர்த்தாக்களிடத்தில் ஒப்புவித்து, வட்டிக்கு விட்டார். மற்ற வேலைகளுக்காகவும் அதிகமான பணம் சேகரித்துக்கொண்டு வந்தார்.

ராஜகோபால் ஐயர் ஒரு வருஷத்துக்குள்ளாக சென்னபட்டணம் வந்து சேர்ந்தார். அவர் வெகுதூரம் சுகமடைந்திருந்ததாகக் காணப்பட்டது. ஆனால் முன்னிருந்த பெலன் அவருக்கில்லாதிருந்ததால், அவருடைய இரண்டாவது மகன் குசன்றாஸ் ராஜகோபால் பள்ளிக்கூட வேலையில் அவருக்குதவியாக நியமிக்கப்பட்டாள். நீராழிவாகிய கொடிய வியாதி அவருக்கு இருந்தது. அவர் தம்முடைய எல்லா வருத்தங்களையும் விட்டு, 1887-ஆ ஜனுவரி மீ 9உ மந்தாரமில்லாத சோதியுள்ள பூமிக்குச் சமாதானத்துடன் ஏகினார்.

## 6. தபித்தாள் பாபு அம்மாள்.

ஸ்காட்லாந்து தேசத்து பிரீ சர்ச்மிஷனைச் சேர்ந்த தபித்தாள் பாபு அம்மாள் 1845-ஆம் செப்டெம்பர்மீ 8உ சென்னபட்டணத்தில் பிறந்தாள். அவளுடைய பாட்டனாகிய சின்னையா பேதுரு கல்நாயகம் என்பவர் தமது ஜீவகாலமெல்லாம் சுவிசேஷகராகவும் சித்தியுள்ள வைத்தியராகவும் யாவராலும் அறியப்பட்டவராயும் அவர்களால் கண்ணியமாய் மதிக்கப்பட்டவராயுமிருந்தார். அவருக்கு நாலு குமாரரும் ஒரு குமாரத்தியும் இருந்தார்கள். பாபு அம்மாள் அவருடைய மூத்தமகனாகிய ஓசியா பேதுருவின் இரண்டாவது குமாரத்தி.

ஓசியா பேதுருவின் மனைவி, பாபு அம்மாள் பிறந்தபின்பு மரித்துப்போனாள். அவர் இரண்டாவதாக விவாகஞ்செய்து, தமது மனைவியோடும் இரண்டு குமாரத்திகளோடும் வெப்பேரியில் பரிசுத்த பவுலின் கோவில் கம்பவுண்டுக்குள் குடியிருந்து, பரிசுத்த பவுலின் பள்ளிக்கூடத்தில் அநேக வருடங்களாய் உபாத்தியாயர் வேலை செய்துவந்தார். அந்த இடத்தில் தபித்தாள் தன் இளம்பிராயத்தைப் பின்னிட்டாள். அவள் முந்தியகாலத்தில் கம்பவுண்டு தென்னம்பிள்ளைகளுக்குள் தன் சிநேகிதியோடே விளையாடிக்கொண்டிருந்ததைப்பற்றிப் பிரியத்தோடே சொல்லிக்கொண்டிருப்பாள். தபித்தாள் இளமையாயிருக்கையில், அவளுடைய சிறியதாய் அவள் படிப்புக்குரிய விஷயத்தை நடத்தி, அவளுடைய யௌவனமதில் மார்க்கப்பற்றுண்டாகும்படி மிகுந்த பிரயாசத்தைச் செலுத்தினாள். அவள் வளர்ந்தபோது, வெப்பேரியிலிருக்கிற லண்டன்மிஷன் போர்டிங் பள்ளிக்கூடத்துக்கு அவளை அனுப்புவது நலமென்று எண்ணினார்கள். ஆனால் தபித்தாளுக்கு அது பிரியமில்லாததால், அவள் அதிகமாய் அழுதுகுதித்து முறுமுறுக்கவே, சேர்க்கப்பட்ட முதல்நாளிலே அவளுக்குக் காய்ச்சலுண்டாக வீட்டுக்குக் கூட்டிக்கொள்ளப்பட்டாள். சில காலத்துக்குப் பின்பு அமெரிக்கன் மிஷனைச்சேர்ந்த கனம்: ஐ. என். ஹர்ட் ஐயருடைய அம்மாள் மரித்துப்போகவே, அவருக்கிருந்த ஒரேபையனுக்கு உதவியாயிருக்கும்படி யாரைத் தெரிந்துகொள்ளலாம் என்று தம்முடைய கைக்குள்ளிருந்த உபதேசியாரிடத்தில் ஆலோசனை கேட்டபோது, அவர் தபித்தாளைப் பற்றி சிபார்சு செய்தார். அந்த உபதேசியார் ஓசியா பேதுரு என்பவருடைய சகோதரன். ஹர்ட் ஐயர் தபித்தாளுக்கு ஆளனுப்பி வர





வழைத்து, இராயபுரத்திலிருக்கிற அமெரிக்கன் மிஷன்வீட்டில் தம்மோடே வைத்துக்கொண்டார்.

அவர் அவள்பேரில் மிகவும் அன்புகூர்ந்து, தம்முடைய பையனோடே கூடவைத்து, இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொடுத்ததோடே பிரசிடென்சிகாலேஜில் தமிழ்ப்பண்டிதராயிருந்தவரைக்கொண்டு, தமிழ்ப்பாஷையையும் நன்றாய்க் கற்றுக்கொடுத்தார். ஹர்ட் ஐயர் வீட்டில் அவள் பூஞ்செடிகளைப்பற்றியும் பிரியங்கொண்டு தன்

ஜீவகாலம்மட்டும் அதின்பேரில் நீங்காத ஆவலுள்ளவளாயிருந்தாள். சனிக்கிழமையில் அவள் ஹோர்ட் ஐயரோடே மிஷன் பள்ளிக்கூடங்களைச் சந்திக்கப் போவாள். அவள் அடிக்கடி அப்படிப் போய் வந்ததால் படிப்பிக்கிற விஷயத்தில் பிரியங்கொண்டாள். ஹோர்ட் ஐயர் அவளை அடிக்கடி பிராட்வேயிலிருக்கிற அமெரிக்கன் மிஷன் அச்சுக்கூடத்துக்கும் கூட்டிக்கொண்டு போவார். அவர் அந்த அச்சுக்கூடத்துக்கு மேல்விசாரணைக் கர்த்தாவாயிருந்தார். அவள் அங்கே எழுத்துப் பொறுக்கவும், அச்சடித்ததைத் திருத்தவும், அச்சடிக்கவும் கற்றுக்கொண்டாள். இந்த அறிவு பிந்தியகாலத்தில் சத்தியதீபம் அச்சுக்கூடத்தை அவள் மேற்பார்த்து வந்தபோது அவளுக்கு மிகப் பிரயோசனமாயிருந்தது.

ஹோர்ட் ஐயர், தமித்தாள் மிஷன் ஆசாரியாய் வரவேண்டும் என்ற அபிலாசைகொண்டு தாம் தமது சுயதேசத்துக்குப் போக எத்தனமாயிருக்கையில், அவளைத் தம்மோடேகூடக் கூட்டிக்கொண்டுபோய், அமெரிக்காவில் அவளை நன்றாய்ப் படிப்பித்து, அவள் சுயதேசத்தாருக்கு மிஷனெரியாக்கவேண்டும் என்று விரும்பி கேட்டபோது, அவள் இனத்தார் அதைத் தடுத்துப்போட்டார்கள். என்றாலும் தமித்தாள், தன் இளமையில் தனக்கு அதிகமாய்க் கல்வி கற்றுக்கொடுத்த அவரைப் பிள்ளைப்பத்தியான நன்றியறிதலோடே ஜீவகாலபரியந்தம் மதித்துவந்தாள்.

ஹோர்ட் ஐயர் போனபின்பு, தமித்தாள் பிளாக்டவுனில் ப்ரீ சர்ச் மிஷன் போர்டிங் பள்ளிக்கூடத்தில் அண்டர்சன் அம்மாளிடத்தில் கல்விகற்கும்படி சேர்க்கப்பட்டாள். அங்கே அவள் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு பாஷைகளைக் கற்றுக்கொண்டதோடு தையல் வேலையையும் பாட்டு ராகங்களையும் கற்றுக்கொண்டாள். பள்ளிக்கூடத்திலிருந்த கடைசி வருடத்தில் பள்ளிக்கூடங்களை நடத்தும் வகை பிள்ளைகளுக்குப் படிப்பிக்கும்வகை இவைகளில் பழகுவிக்கப்பட்டாள். அடுத்தவருடம் ஜனுவரி 20ஆ. அவள் கனம். ஆர். எம். பாபு ஐயருக்கு விவாகஞ்செய்து கொடுக்கப்பட்டாள். பாபு ஐயர் சென்னபட்டணத்தில் ப்ரீ சர்ச் மிஷனைச் சேர்ந்த பெண் பள்ளிக்கூடங்களை மேல் விசாரித்து வந்தார்.

பாபு ஐயர் விதுரன். அவருடைய முந்தின மனைவி இரண்டு குமாரரையும் ஒரு குமாரத்தியையும் பின்விட்டு, மறுமைக்குச் சென்றிருந்தாள். ஆகவே தமித்தாள் என்ற பாபு அம்மாளுக்கு மனைவியின் கடமைகளோடு தாயின் கடமைகளும் அதேநாளில் கிடைத்தது. அந்தப் பிள்ளைகளை எவ்வளவு கவனத்தோடும் சிரத்தையோடும் பார்த்துவந்தாள் என்பதை அவளை அறிந்தவர்கள் எல்லாரும் சாட்சி



பகருவார்கள். அவளுடைய புருஷனுடைய வேலையிலும் அவள் முழு உள்ளத்தோடே பிரவேசித்து, அதிகமான நன்மை செய்தாள். சம்பளமில்லாமல் அந்த வேலையைச் செய்தபோதிலும், 28 வருடக் காலங்களாய் நாடோறும் சில மணிநேரங்கள் அவைகளுக்கென்று பின்னிட்டுவந்தாள். தான் சாகும் ஐந்துநாட்களுக்கு முன்னும் அந்த வேலையை நடப்பித்தாள். அவளுடைய புத்தியினாலும் சுறுசுறுப்பினாலும் திறமையினாலும் அந்தப் பள்ளிக்கூடங்கள் தேர்ச்சியடைந்து முன்னுக்குவரும்படி செய்தாள். உபாத்திமாருடைய பிரியத்தையும் கண்ணியத்தையும் அவள் அதிகமாய்க் கவர்ந்துகொண்டாள். பிள்ளைகளின் பெற்றோர் சிநேகிதரை கிரமமாய்ச் சந்தித்து, அவர்களுடைய பாசத்தையும் தேடிக்கொண்டாள்.

கவர்ன்மெந்து பரீட்சைக்குப் பெண்களை விடக்கூடாதென்று பிடிவாதமாய்ச் சாதித்துவந்த இந்துக்களான பெற்றோரை முதலாவதாக மேற்கொண்டது பாபு அம்மாளே. சில பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்து, மற்றும் வகையாயும் அவர்களைத் தைரியப்படுத்திப் பிரைமரி பரீட்சைக்குப் போகும்படி அவர்களை ஏவினாள். வரவர யாதொரு வருத்தமில்லாமல் அநேக பிள்ளைகள் பரீட்சைக்குப் போனார்கள். அவர்களில் சில கெட்டிக்காரப் பிள்ளைகள் ஸ்திரீகளின் உயர்ந்த பரீட்சையில் தேறி, முன்னுக்குவந்ததை அந்த அம்மாள் கண்டதுடன் அவர்களில் மூன்றுபேர் அந்த அம்மாளுடைய பள்ளிக்கூடத்திலேயே உபாத்திச்சிமாராக நியமிக்கப்பட்டதையும் பார்த்தாள்.

பள்ளிக்கூடத்தை முடிவதாய் விட்டு வீட்டுக்குப் போயிருந்த பிள்ளைகளைத் தைரியப்படுத்தி, அவர்களுக்கு உதவியாயிருக்கத்தக்கதாக அமிர்தவசனி என்ற வர்த்தமானியை அந்த அம்மாள்தானே பல வருஷங்களாகப் பிரசுரம் செய்துவந்தாள். அநேகர் அதை வாங்கி பிரியத்தோடே வாசித்துவந்தார்கள்.

அந்த அம்மாளுடைய வேலை அதிகரிக்கவே பள்ளிக்கூடத்துக்குப் போகப் பிராயம் கடந்தவர்கள் என்று தாய்தகப்பன்மார் எண்ணின பிள்ளைகளுக்குப் படிப்பிக்கத் தனக்கு உதவிஆட்களைச் சம்பாதிக்கும்படி பிரயாசத்தைச் செலுத்தினாள். இதற்கு முந்தி இந்துக்களில் உயர்ந்த வகுப்பாருக்கு அவர்கள் வீடுகளில் படிப்பிக்கும் பிரயத்தனங்கள் அதாவது ஜெனானா போதனைகள் செய்யப்படவில்லை.

பாபு அம்மாள் சென்னபட்டணத்தில் ஜெனானா படிப்பை முத[illegible] உண்டுபண்ணினவள். வீடுகளில் படிப்பிக்கவும், பெண் [illegible]சாலையில் படிப்பித்த உபாத்திமாருக்குப் பதிலாக உபாத்திச்சி

மானா நியமிக்கவுந்தக்கதாய் அவள் 1871-ஆம் சென்னபட்டண பெண் டிரேனிங் பள்ளிக்கூடம் என்ற கல்விச்சாலையை ஏற்படுத்தினாள். அந்தக் கல்விச்சாலை, சென்னைபட்டணம் மிஷன் பெண் பாடசாலை சம்பந்தமாய் ஒரு நார்மல் வகுப்போடே தொடங்கினது. அவள் ஜீவகாலத்தில் அந்தக் கல்விச்சாலை மிகவும் விர்த்தியடைந்தது. அதிலிருந்து சென்னபட்டண மிஷன் பெண் பாடசாலையிலுள்ள எல்லா வகுப்புகளுக்கும் பாபுவின் கைக்குள்ளிருந்த வேறு இரண்டு பள்ளிக்கூடங்களிலுள்ள அநேக வகுப்புகளுக்கும் உபாத்தியாயினிமார் அனுப்பப்பட்டார்கள். அதுவுமல்லாமல் சென்னபட்டணத்திலும் அதற்கு வெளியிலுமுள்ள மற்ற மிஷனெரிகளின் பள்ளிக்கூடங்களுக்கும் அநேக உபாத்தியாயினிமார்கள் அனுப்பப்பட்டார்கள். வேறு ஞானவேலை பார்க்கவும் பலர் அனுப்பப்பட்டதுண்டு.

பாபு அம்மாள் தன் பள்ளிக்கூடங்களிலுள்ள பள்ளிப்பிள்ளைகள் மனதில் கிறிஸ்துவின் அன்பைப் பதிப்பிக்க பேராவலுள்ளவளாயிருந்தாள். அவள் தன் பள்ளிப்பிள்ளைகளுக்குக் கிறிஸ்துவையைப்பற்றிய அறிவை உண்டாக்குவதற்கு ஓய்வுநாள் பள்ளிக்கூடம் ஒன்றை ஏற்படுத்தினாள். அதில் துவக்கத்திலே மூன்று பிள்ளைகள்மாத்திரம் படித்தார்கள். இப்போது 200 பிள்ளைகள்வரையும் படிக்கிறார்கள். மிஷனைச்சேர்ந்த மற்ற ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களும் முன்னுக்கு வரும்படி வலி தைரியப்படுத்திவந்தாள். ஏழைகளுக்கும், தரித்திரத்துக்கும் பிள்ளைகள் அநுதாபம் காட்டும்படியாகவும் உணர்த்திவந்தாள். இந்தச் சுபாவம் அந்த அம்மாளிடத்தில் சிறுபிராயமுதல் குடிகொண்டிருந்தது. மாசத்தின் இரண்டாம் ஞாயிறில் பிள்ளைகள் காணிக்கையாக மகிழ்ச்சியாய் ரூ. 25, ரூ. 30 வரையும் கொடுத்துவந்தார்கள். அவர்கள் தாய்மாரும் மனப்பூர்வமாய் அதுவிஷயத்தில் உதவிசெய்தார்கள். இந்தத் தொகையை பாபு அம்மாள் தர்மவிஷயமாய்ச் செலவிட்டுவந்தாள். தன் பள்ளிக்கூடங்களிலிருந்த ஏழைகளையும் அவள் மறந்துபோகாமல், அவர்களுக்கும் அனேகவேண்டு சகாயஞ்செய்தாள்.

பாபு அம்மாளுடைய சொந்தக்காரியத்தைக் கவனிக்கையில், அது சிறந்த கிறிஸ்தவ குடும்பத்துக்கேற்றதாக இருந்தது. அவள் வீடு சுத்தத்துக்கும் கிரமத்துக்கும் பழமொழியாயிருந்தது. குடும்பத்துக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதிலும் ஜாக்கிரதையாயிருந்தாள். அடுக்களையிலும், படிப்பறையிலும், போஜன அறையிலும் அவளிடத்தில் உதவிக்காகவும் ஆலோசனைக்காகவும் அடிக்கடி வருகிறவர்களுக்கு ஏற்ற சகாயம் செய்து, தகுந்த ஆலோசனை சொல்லுவாள். அவள் நல்ல பத்தினியாயும், பாசமுள்ளதாயாயும், விவேகமுள்ள சிநேகிதியும், மலர்ந்த முகமுள்ள உபசாரியாயும், பட்சமுள்ள எஜமாட்டி



யிருந்தாள். அவள் வீடு யாவருக்கும் திறந்திருந்தது. அந்நியர்கள் எந்நேரத்தில் வந்தாலும், அவர்கள் கண்ணியமாய் உபசரிக்கப்படுவார்கள். இளமையில் அங்கிலேயர் வீட்டில் வளர்க்கப்பட்டாலும், அவள் ஒருகாலத்திலாவது அந்நிய தேசத்தாருடைய வழக்கங்களை உடைகளை அனுசரிக்கவில்லை. உடையிலும், மேஜையிலும் அவள் இந்துதேச ஸ்திரீயாகவேயிருந்தாள். அவள் எப்போதும் சுயபாஷையிலே பேசுவாள். வேறே பாஷை தெரியாமல், இங்கிலிஷ் மாத்திரமே தெரிந்தவர்களோடே இங்கிலிஷில் சம்பாஷிப்பாள். ஐரோப்பியருடைய ஆசாரங்கள் பழக்கங்களை அவள் நன்றாய் அறிந்திருந்தால், இந்து பெருமாட்டிகளில் யாராவது ஐரோப்பிய துரைசானிகளை விருந்துக்கு அழைத்தால், பாபு அம்மாளும்கூட இருக்கவேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்ளுவார்கள். அவள் தன்னுடைய ஸ்திரியினாலும் கல்வியினாலும் இயற்கையான வரங்களினாலும் ஐரோப்பியரும் இந்துக்களும் தாராளமாய் சஞ்சாரம் செய்துகொள்வதில் முன்னுக்குவர ஏற்ற கருவியாயிருந்தாள்.

முன்பு சொல்லப்பட்டிருக்கிற வர்த்தமானியையல்லாமல் பாபு அம்மாள், ராஜாத்தியுடைய இளம்பிராயச் சரித்திரம் என்றதைத் தமிழில் எழுதினாள். அதில் ஒரு பிரதி நேப்பியர் பெருமாட்டி மூலமாய் இராணியவர்களுக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் அதைத் தயவாய் அங்கீகரித்துக்கொண்டார்கள். அந்தச் சரித்திரத்தைத் தெலுங்கில் அச்சிட்டபோது முதல் வருடத்திலேயே பிரதி ஒன்றுக்கு ஒரு ரூபாயாக 2,000 பிரதிகள் விற்கப்பட்டன. வேறே சில புஸ்தகங்களையும் அந்த அம்மாள் எழுதினதுண்டு.

அந்த அம்மாளுடைய புருஷன் தென்னிந்தியாவில் முதல் இந்திய கிறிஸ்தவ வர்த்தமானியாக பிரசுரம் செய்யப்பட்ட "ஈஸ்டர்ன் ஸ்டார்" என்ற வர்த்தமானியை ஆசிரமாய் நடத்திவந்தபோது, அவள் அதற்கென்று அதிகநேரம் பின்னிடும்படி நேரிட்டது; அது சத்தியம் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. அந்த வர்த்தமானிக்கு அச்சிட எழுத்துப் பொறுக்குகிறவர்களைத் தைரியப்படுத்தி, அச்சுப்பிழைகளைத் திருத்தி உதவிசெய்து வந்தாள்.

பாபு அம்மாள் சிறிதுகாலம் சென்னபட்டணம் கிறிஸ்தவ ஸ்திரீகள் ஐக்கிய கூட்டத்தின் ஓர் பிரிவாகிய பிரார்த்தனைக் கூட்டத்துக்கு செக்ரெட்டரியாயிருந்தாள். இந்தக் கூட்டத்துக்கென்று அவள் எழுதின காரியங்களில் சிலவை ஒப்புக்கொள்ளப்பட்டு, அச்சாய்ப் பதிக்கப்பட்டது. 1882-ஆம் டிசெம்பர் மாசத்தில் கல்குத்தாவிலே கூடின நாலாவது கூட்டத்துக்குச் சென்னபட்டண பிரிசர்ச்சமிஷனிலிருந்து அவள் ஒரு அங்கமாக அனுப்பப்பட்டாள். அப்போது

நடந்த ஒருநாள் கூட்டத்திலே, இந்தியாவில் ஸ்திரீகளுக்கு செய்யப்படும் வேலையைப்பற்றிப் பேசப்பட்டபோது, அவள் செ னபட்டணத்தில் நடந்தேறிவந்த கிரியையைப்பற்றி மெத்த நேர் யாய் எழுதி வாசித்தாள்.

1883-ம் கல்விவிஷயமாய்க் கமிஷனர்கள் சென்னபட்டண தில் விசாரணைகளை நடத்தினபோது இரண்டு சிமாட்டிகள்மாத் ரம் சாட்சிகளாக வருவிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள். அவர் ளில் பாபு அம்மாள் ஒருத்தி.

அவளுடைய மரணத்துக்குச் சில வருடங்களுக்கு முந்தி அவ புருஷன் கனம்: பி. ராஜகோபால் ஐயருக்குப் பதிலாக எஸ்பி னேட் தமிழ் சபைக்குக் குருவானார். அவள் தன் யுக்தியினாலு நற்குணத்தினாலும் அதுவிஷயத்தில் தன் புருஷனுக்கு மிகவும் உதவியாயிருந்தாள். சபையைச்சேர்ந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் பாசங்காட்டி வந்ததுடன், அவசியம் நேரிடும்போது, தன் பணங் களைத் தாராளமாய்ச் செலவிட்டுவந்தாள். அவர்களுக்காக அநுதா பமும் காட்டுவாள்.

பாபு அம்மாளின் ஜீவியம் பாக்கியமுள்ளதா யிருந்தபோதிலும், அவளுக்குத் துக்கங்கள் நேரிடாமல் போகவில்லை. பாபு ஐயருடைய முதல்தாரத்துப் பிள்ளைகள் இரண்டுபேரிருந்தார்கள். தனக்கு சின்ன கருணை என்ற ஒரு குமாரத்தியிருந்தது. அது தன் தாயின் இரு தயத்துக்குப் பிரகாசமும் மகிழ்ச்சியுமாயிருந்தது. 1874-ம் மேய் மாசம் அது எடுபட்டுப்போயிற்று. அதில் பாபு அம்மாள் ஆச்சரியப் படத்தக்கவண்ணம் தாங்கப்பட்டாலும், சிறிதுகாலம் துக்கமாயி ருந்தாள். அவளுடைய புருஷன் கொடிய வியாதிப்பட்டதும் அவ ளுடைய மூத்தமகன் கல்யபிராயத்தில் மரித்ததும் பின்னும் அதிக மான துக்கத்தை அவளுக்கு உண்டாக்கினது. ஆனால் அவள் நம்பிக் கையற்றவர்களைப்போல துக்கப்படாமல் தான் நேசித்த அவர்களை மோட்சத்தில் காண்பேன் என்று சந்தோஷத்தோடே எதிர்நோக்கி கொண்டிருந்தாள்.

பாபு அம்மாள் எப்போதும் நல்ல சுகதேகியாயிருந்தாள். ஆ 1889-ம் கடைசியில் தன் முடிவு சமீபமாயிருப்பதாக அவளு தோற்றமுண்டாயிற்று. பெப்ருவரிமாசம் 1-ட சனிக்கிழமை யில் அவள் படுக்கையைவிட்டெழுந்தபோது, தன் புருஷனி "நான் என்னுடைய ஜனுவரிமாசம் 31-டை முடித்திருக்கி என்றாள். அன்று அவளுக்குக் காய்ச்சல் உண்டாகிப் பலவீ கரித்தது, அதோடே நோவு பிறந்தது. மெடிக்கல் காலேஜ் சா சுவாமி டாக்டரும், மெடிக்கல் மிஷனைச்சேர்ந்த ஹென்றர் மி



மாரும் வரவழைக்கப்பட, அவர்கள் செய்யக்கூடிய பிரயத்தனங்களை எல்லாம் செய்துபார்த்தும் அநுகூலப்படவில்லை. ஞாயிற்றுக்கிழமையில் அவள் தன் பிள்ளைகளையும் சகோதரியையும் இனத்தாரையும் உபாத்திச்சிமாரையும் வரவழைத்து பயனுபசார புத்திபோதனைகளைச் சொன்னாள். பின்னும் சில நாட்களாக நோவு அதிகரித்துக்கொண்டே இருந்தது. அவள் அதைக் கிறிஸ்தவ பொறுமையோடே சகித்துவந்தாள். மரணத்துக்குச் சற்று முந்தி அவள் தன் பிள்ளைகளையும் இனத்தாரையும் உபாத்திச்சிமாரையும் வரவழைத்துத் தனக்குப் பிரியமாயிருந்த பாட்டுகளைப் பாடும்படி கேட்டாள். அவர்கள் பாடிக்கொண்டிருக்கையில், 1890-ம் பெப்ருவரிமாசம் 6-ட வியாழக்கிழமை இரவிலே அவள் ஆவி மெதுவாய்ப் பிரிந்தது. அவளுடைய சடம் புரசைபாக்கம் கல்லறைத்தோட்டத்தில் தன் மகனுக்கும் மகளுக்கும் அடுத்து அடக்கம் செய்யப்பட்டது. அடக்கம்பண்ணும் ஜெபமுறை கனம்: ஜி. எம். ரா ஐயராலும், டாக்டர் மில்லர் ஐயராலும் நடத்தப்பட்டது. திரளான ஜனங்கள் பிரேதக்ஷேமத்துக்குக் கூடிவந்திருந்து, பாபு அம்மாள் இந்துதேசத்தாராலும் ஐரோப்பியராலும் மதிக்கப்பட்டு அன்புகூரப்பட்டதைக் குறித்துச் சாட்சி பகர்ந்தார்கள்.

பாபு அம்மாள் பள்ளிக்கூடத்தில் படித்த பிள்ளைகள் உதாரமாய்ப் பணம்சேர்த்து, சென்னபட்டணத்தில் வசிக்கிற கல்வித்திறமையுள்ள இந்து சிமாட்டிகளுக்குப் பிரயோசனமாக சென்னபட்டணம் தினசரி பெண் பாடசாலையில் ஒரு புஸ்தகச்சாலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

## 7. கனம்: உவ்லியம் தோமாஸ் சத்தியநாதன் ஐயர், B. D.

சத்தியநாதன் ஐயர் 1830-ம் மதுரையில் பிறந்தார். அவர் தாய்தகப்பன்மார் இந்துமதத்தார். அவர் தகப்பனுக்குக் கவர்ன்மெந்தில் உத்தியோகமிருந்ததால், அவர் தமது குடும்பத்தாருடன் திருநெல்வேலிக்குக் குடிபோனார். சத்தியநாதனுக்கு 14 வயசாயிருக்கையில், அவர் கபோதியான உவ்லியம் குருக்ஷாங்க் துரை படிப்பித்த சர்ச்மிஷன் பள்ளிக்கூடத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளும்படி அனுப்பப்பட்டார். அவர் படித்த பாடங்களில் ஒன்று பைபிள் என்ற வேதபுஸ்தகம். பாலியனாகிய சத்தியநாதன் அதைக் கற்றுக்கொள்ள எவ்வளவும் பிரியமில்லாமல் வெறுப்படைந்து, ஒருநாள் பள்ளிப்பிள்ளைகள் எல்லாரையும் கூவி, அவர்கள் ஒன்றுபோல உபாத்



தியாயரிடத்தில் போய் வேதம் படிப்பிப்பதை விட்டுவிடவேண்டும்; மற்றப்படி நாங்கள் எல்லாரும் பள்ளிக்கூடத்தை விட்டுவிடுவோம் என்று பயமுறுத்தும்படி பண்ணினார். உபாத்தியாயர் அதற்கு உத்தரவாக உங்களுக்கு மனமானால் பள்ளிக்கூடத்தை விட்டுவிடுங்கள், நான் வேதம் படிப்பியாதபடி இருக்கேன் என்றார். உபாத்தியாயர் வேத சத்தியத்தை மாணாக்கருடைய உள்ளத்தில் பதியும்படியாகப் போதித்துவந்ததால், அந்தப் போதனையால் அவர்கள் பேரில் ஒன்ப வினைப்போல கதிரெடுக்கத்துவங்கிற்று.

குருக்ஷாங்ஸ் உபாத்தியாயரிடத்தில் சத்தியநாதன் மூன்று வருடம் படித்தார். படிப்படியாய் அவர் மனதில் வெளிச்சம் உதித்து பின் மேலும் பிரகாசம் கொடுத்தது. தேவ ஆவியானவர் இந்துமதத்தின் மதிகேட்டையும் கிறிஸ்துமார்க்கத்தின் உண்மையையும் அவருக்கு உணர்த்தினதோடே, பாவியாக அவர் கெட்டுப்போனவராயிருப்பதை



யும், கிறிஸ்து சம்பாதித்த இரட்சணியம் அவருக்கு அவசியம் என்பதையும் மனதில் அழுந்தப் பதித்தார். ஒருவருஷகாலமாய் அவர் மனதில் போராட்டமிருந்துவந்தது. தமக்கு அருமையாயிருந்த பெற்றோரையும் மற்றவைகளையும் விட்டுவிட இன்னமும் ஆயத்தமாகவில்லை. தாம் கஷ்டம் அடையாதபடிக்கு நிக்கொதேமுவைப்போல அந்தரங்க சீஷனாயிருக்கலாம் என்று அடிக்கடி எண்ணினார். தேவ ஆவியானவரோ அவருடைய உள்ளத்தில் பலமாய்க் கிரியை செய்துவந்தார். கிறிஸ்து இயேசுவைப்பற்றிய சத்தியம் அவர் மனதிலே அடிக்கடி பிரயோகிக்கப்பட்டுவந்தது. கடைசியாக அவர் தன் வீட்டையும் இனத்தையும் விட்டுச் சிலுவையின் பாதத்தண்டைக்கு வந்து, பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் தமது ஆத்துமாவுக்கு இளைப்பாறுதலையும் கண்டுபிடித்தார். அவர் குணப்பட்டதினால் அந்த ஜில்லாவில் பெரிய அமளி உண்டாகப் பள்ளிக்கூடத்துக்கு ஒரு பிள்ளையும் போகாமல் நின்றுபோனார்கள். சத்தியநாதனும் மேஜிஸ்ரேட்டார் முன்புக்கு விசாரணைக்கு இழுக்கப்பட்டார். கர்த்தரோ அவரோடே இருந்து எல்லாச் சோதனையினின்றும் விலக்கிக் காத்தார்.

1847-ம் மெஞ்ஞானபுரம் கனம்: ஜான் தோமாஸ் ஐயரால் சத்தியநாதன் ஞானஸ்நானம் பெற்றார். அவர் குணப்பட்டவுடனே அவர் முதலாவது சார்ஜென்று அத்தியட்சரிடத்தில் மாணாக்கனாயும் பின்பு அவர் கல்விச்சாலையில் உபாத்தியாயராயுமிருந்து வாலிபருக்குப் படிப்பித்துவந்தார். அவர்களில் சிலர் இப்போது குருப்பட்டம் பெற்று திருநெல்வேலியில் திவ்விய பணிவிடையை நடப்பித்துவருகிறார்கள். கல்விச்சாலையில் அவர் உபாத்தியாயராயிருக்கையில் தென் இந்தியாவில் இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்தவராய் முதலாவது குருப்பட்டம் பெற்றவரும் சர்ச்மிஷனை 50 வருடம் சேவித்தவருமான புகழ்பெற்ற கனம்: ஜான் தேவசகாயம் ஐயருடைய ஏகமகளை விவாகம்பண்ணினார். இந்த விவாக ஐக்கியம் கிறிஸ்தவானவருக்குரிய விஷயத்தில் அதிக அநேக பலன்களைக் கொடுத்தது. அவர் மனைவி 40 வருடங்களாக அவருக்கு உத்தம உதவியாயிருந்து திவ்விய கிரியைகளை நடத்திவந்தாள். 1855-ம் மிஸ்தர் சத்தியநாதன் சென்னபட்டணத்தில் கல்விகற்கும்படி அனுப்பப்பட்டார், அவர் முதலாவது பிராக்றவுனிலிருக்கிற லண்டன்மிஷன் கல்விச்சாலையில் படித்து, பின்பு டவுற்றன் காலேஜில் சேர்ந்து 1857-ம் முதல்தடவையாக மெற்றிகியுலேஷன் பரீட்சை நடத்தப்பட்டபோது, அந்தப் பரீட்சைக்குப்போய் அதில் முதல்வகுப்பில் தேறினார். அதற்காக அவருக்கு காலேஜிலிருந்து ஒரு பின்னம் கொடுக்கப்பட்டது. மாணாக்கராக அவர் மிக சித்தியுடையவராயிருந்தார். அவர் எதைச் செய்தாலும் அதைத் திருத்தமாய்ச் செய்வார். இளவயசாயிருக்

னையிலே அவர் இங்கிலீஷ் பாஷையைச் சுசடறக் கற்றுக்கொண்டார். அவர் வட திருநெல்வேலியில் வேதநாயகம் ஐயர் கொருனேலியு ஐயர் இவர்களுடன் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி வரவழைக்கப்பட்டதால், சர்வகலாசாலையில் கல்விப்பட்டம் பெற ஏதுவில்லாமற்போயிற்று. பரிசுத்தவானான ராக்லாந்து ஐயர், தாவீது பென் ஐயர், உவ்லியம் கிரேய் ஐயர், ராபர்ட் மெடோஸ் ஐயர் இவர்களோடே சேர்ந்து தேசாந்தரப் பணிவிடையை நடப்பிக்கும் அபூர்வ சலாக்கியமும் அவருக்குக் கிடைத்தது. மிஸ்டர் சத்தியநாதன் அவர்களோடே முக்கியமாய் ராக்லாந்து ஐயரோடே பழகினதில் ஆவிக்குரிய பெலனைப் பெற்றுக்கொண்டார். ராக்லாந்து ஐயர் வட திருநெல்வேலியில் தேசாந்தரப் பணிவிடையை நிறைவேற்றின பரியந்தம் மிஸ்டர் சத்தியநாதன் அவரோடு கூடவேயிருந்தார். அதினால் அவர் பெற்றுக்கொண்ட நன்மை இன்னதென்பதை கனம்: கைற் ஐயர் எழுதியிருக்கிறதினால் தெரியவரும். "தேசாந்தர வேலையைச் சந்தோஷமாய் நடப்பிக்கப்படுவதற்கு அவர்கள் செய்கிற ஜெபமே காரணமாயிருக்கிறது; ஜெபமே அவர்களுக்கு ஆகாரம்போலிருக்கிறது; காலையில் பிரசங்கிக்கப்போகுமுன் அவர்கள் பேசவேண்டிய வார்த்தைகள் பேசவேண்டிய வகைமுதலியவைகளுக்காகவும் ஜனங்கள் கூடிவரும்படிக்காகவும் ஜெபம் செய்வார்கள்; பிரசங்கம்பண்ணி திரும்பினபின்பு தாங்கள் பிரசங்கித்த வசனத்தைப் பலிதப்படுத்துகிற கர்த்தரிடத்தில் அதை ஒப்புவிப்பார்கள்" என்பதே. ராக்லாந்து ஐயர் மரித்தபின்பு, சத்தியநாதன் ஐயர் 1859-ல் பட்டம்பெற்று, ஸ்ரீ வில்லிப்புத்தூர் சேகரத்தைச் சுயாதீனமாய்ப் பார்க்கும்படி நியமிக்கப்பட்டார். 1861-ல் சென்னபட்டணத்தில் சர்ச்சுமிஷனைச் சேர்ந்த தமிழ்ச்சபையை மேல்விசாரிக்கும்படி ஏற்படுத்தப்பட்டார்.

சென்னபட்டணம்.—சத்தியநாதன் ஐயருடைய சிறந்தவேலை சென்னபட்டண சம்பந்தமாயுள்ளது. துவக்கத்தில் அவர் பாஸ்டரர் வேலையைமாத்திரம் பார்த்துவந்தார். அவர் சுதேச சபையை ஏற்படுத்துவதற்கு முழுபலத்தையும் செலுத்திவந்தார். சர்ச்சுமிஷனைச்சேர்ந்த ஜான் பெரியார்த் தோட்டம், மவுண்ட்ரோட் என்னும் இடங்களிலுள்ள சபைகளை அவர் ஒப்புக்கொண்டபோது அந்தச் சபைகளில் அநேகர் வீட்டுவேலைக்காரராய்மாத்திரமிருந்தார்கள். ஸ்திரமான சபைக்குரிய ஏதுக்கள் அங்கே காணப்படவில்லை. அவர் சென்னபட்டணத்திலிருந்த 28 வருடங்களுக்குள்ளே நிறைவேற்றின கிரியைகளைப்பற்றிச் சென்னபட்டண சர்ச்சுமிஷன் பாஸ்டரேட்டுகள் சாட்சியிடும். அவருடைய முயற்சியினால் சென்னபட்டணத்திலிருக்கிற சர்ச்சுமிஷன் சபையானது தென் இந்தியாவில் அல்லது இந்தியா முழுவதிலுமுள்ள மிகுந்த செல்வாக்கான சபைகளில் ஒன்றாய் வளர்ந்



தேறியிருக்கிறது. சபையை வளர்த்துவந்ததில், அது சுயாதீனமாக வேண்டும் என்ற நோக்கம் அவருக்குள் குடிகொண்டிருந்தது. அந்த நோக்கத்தில் வெகுதூரம் சித்திபெற்றார். இந்தியாவில் முதலாவதாக 1868-ல் சென்னபட்டணத்தில் சுதேச ஆலோசனை சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. சத்தியநாதன் ஐயர் துவக்கமுதல் அதைச் சேர்ந்திருந்தார். பின்பு அவர் அதற்கு அக்கிராசனாதிபதியாகி 20 வருஷங்களாக அதை நடத்திவந்தார். அந்தச் சங்கத்தைக்குறித்து மெயில் வர்த்தமானியில் கண்டிருக்கிறதாவது: "அந்தச் சங்கமானது மேல்விசாரணை யில்லாமல் பல பாஸ்டரேட்டுகளுடைய காரியாதிகளைச் சித்தியோடே நடப்பித்ததுடன் கல்விவிஷயத்தில் வெகுதூரம் முன்னின்று நடத்தினது. தேசாந்தரப் பிரசங்கிகளை ஏற்படுத்தி ஆதரித்து வந்தது. அதின் வேலை நன்றாய் நடந்தேறியிருக்கிறது" என்பதே. ஆலோசனைச்சங்கத்தைச் சேர்ந்ததாய் இப்போது 12,000 ரூ. வட்டிக்கு விடப்பட்டிருக்கிறது. காரியாதிகளை நடத்துவதில் தமிழ் சபையிலே அவருக்கு இணை ஒருவருமில்லை. ஒழுங்குகளை ஏற்படுத்தும் சக்தி, திட்டமான நடத்துதல், கடமையைப்பற்றிய நுண்ணிய அறிவு, இயல்பான குணபலம், மனச்சுத்தம் இவைகள் அவருக்கு இருந்ததால் மிஷன் காரியாதிகளைச் சித்தியாய் நடத்துகிறவர்களில் ஒருவராயிருந்தார். சென்னபட்டணத்திலிருக்கிற சர்ச்சுமிஷன் சுதேச சபையானது இப்போது சுயாதீனமாயும் தன் காரியாதிகளை ஒழுங்குபடுத்தி நடத்துகிறதாயும் ஐக்கியமுள்ளதாயுமிருக்கிறது. இப்படி அது முன்னுக்கு வந்தது சத்தியநாத ஐயருடைய முயற்சியே. தேசாந்தர வேலையிலும், அவர் முயற்சிகள் மிகச் சிறந்த வகையாய்ச் சித்திபெற்றது. அவர் தமது பணிவிடை நாட்களிலே பற்பல ஜாதியாரைச் சேர்ந்தவர்களான 300 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அவர்களில் சிலர் இப்போதும் கிறிஸ்துவுக்கு உத்தம சாட்சிகளாக விளங்குகிறார்கள். மேலும் அவருடைய முயற்சியினால் 1874-ல் சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு பிரசங்கசாலையும் வாசிப்பு அறையும் சமைக்கப்பட்டன. அவைகளில் காரியங்கள் இன்றைவரைக்கும் அநுகூலமாய் நடந்தேறிவருகின்றன.

இங்கிலாந்துக்குப் போனது.—1878-ல் சர்ச்சுமிஷன் தாய்ச் சங்கத்தார் அவரையும் அவர் அம்மாளையும் இங்கிலாந்துக்கு வரவழைத்தார்கள். அங்கே அவர் பற்பல இடங்களுக்குப் போய்ச் சங்கத்தாருக்காகப் பிரசங்கித்துவந்தார். தேசமொன்றும் சங்கத்தாருடைய டைரக்டர்கள் அவர்களை மிகுந்த பிரியத்தோடே ஏற்றுக்கொண்டார்கள். சத்தியநாதன் ஐயர் லண்டன்மா நகரத்தில் நடந்த பல கூட்டத்திலும் மற்றும் பிரதான பட்டணங்களிலும் சங்கத்தாருடைய காரியங்களைப்பற்றிப் பலமாய்ப் பேசி ஜனங்களை எழுப்பிவிட்

டார். இந்தியாவிலிருக்கிற அநேக ஐரோப்பியர், பேர் கிறிஸ்தவர்களாய்மாத்திரம் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் அநுசரிக்கிற மார்க்கத்துக்கு உத்தம மாதிரியைக் காண்பிக்கிறதில்லை. சத்தியநாதன் ஐயர் இங்கிலாந்துக்குப் போனதில் அநேக சிநேகிதர்களைச் சம்பாதித்துக்கொண்டார். அவர்களைக் குறித்து அவர் எழுதியிருக்கிறதாவது "அவர்கள் பரோபகாரிகளாயும், தயாளசீலராயும், தன்னயமற்றவர்களாயும், முழுவதுமாய்க் கர்த்தருக்குத் தங்களை ஒப்புவித்தவர்களுமாயிருக்கிறார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றி, அவரையே பிரசங்கித்து, 'அவரைப்போல ஜீவிக்கவேண்டும்' என்பது அவர்கள் ஏகநோக்கமாயிருக்கிறது. நான் அவர்களிடத்திலே மேலான சுத்த ஆகாயத்தை சுவாசிக்கிறவன்போலிருந்தேன்" என்பதே.

சத்தியநாதன் ஐயரும் அம்மாளும் ஆறுமாசங்களாய் இங்கிலாந்திலிருந்து பின்பு திரும்பிவந்து, அவ்விடத்தில் தாங்கள் நடத்தின காரியங்களையும் கண்டறிந்த விஷயங்களையும் குறித்து பிரசுரம் செய்தார்கள்.

கல்வி விஷயம்.—சத்தியநாதன் ஐயர் இங்கிலீஷிலும் தமிழிலும் சில புஸ்தகங்களை எழுதியிருக்கிறார். புதிய ஏற்பாட்டின்பேரில் செய்யப்பட்ட முதற்தரமான தமிழ் வியாக்கியானங்களில் அவர் செய்ததும் ஒன்று. இந்த வருடம் அதற்கென்று ஒயாதவண்ணம் பின்னிட்டார். இங்கிலீஷிலும் தமிழிலும் திருச்சபை சரித்திரம் ஒன்று எழுதினார். அது அதிகமாய் வேதவித்தியாசாலைகளில் வழங்கப்பட்டு வருகிறது. அவர் தமிழில் எழுதியிருக்கிற நூல்களுக்குக் கணக்கில்லை. பத்து வருடங்களாக அவர் தமக்கு அதிக நஷ்டமுண்டானபோதிலும் தேசாபிமானி என்ற பத்திரிகையைப் பிரசுரம் செய்துவந்தார். தர்மப் பள்ளிபோதகம் புஸ்தகத்தை சிறுவருக்குபயோகமாக 20 வருடங்களாகப் பதிப்பித்துவந்தார். அவர் கல்லூரியில் சாஸ்திரங்களைக் கற்றுக்கொள்ளாதிருந்தும் மிகவும் தேர்ந்த நிபுணராயிருந்தார். இங்கிலீஷில் அவர் வல்லபசாலி; அந்தப் பாஷையில் அவர் சாதுரியமாய்ப் பேசிச் சம்பாஷிப்பார். சுதேச கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்துக்கு அவர் பிரதி அக்கிராசனாதிபதியாயிருந்து மரணசகாய சங்கம் வளர்ந்தேறுவதற்கு மிகுந்த முயற்சி செய்தார்.

ஜீவியத்தின் கடைசிகாலம்.—இங்கிலாந்திலிருந்து அவர் திரும்பி வந்த பின்பு தேசாந்தரவேலையும், கல்விவிஷயமான வேலையும் சபைவேலையும் அதிகரித்தது. அப்படியிருந்தபோதும், அவர் பலமான தேகமுடையவராயிருந்ததால், அந்த வேலைகளையெல்லாம் திருப்திகரமாய்ச் செய்யத்தக்க சக்திசாலியாயிருந்தார். அவர் சீயோன் ஆலயத்தை 12,000 ரூ செலவு செய்து புதுப்பித்தார். சபை ஆலோ



சனை சங்கத்து அக்கிராசனாதிபதியாக அவர் பல பாஸ்டரேட்டுகளையும் அநேக பள்ளிக்கூடங்களையும் மேல்விசாரித்துவந்தார். அவருடைய முயற்சி மற்றவர்களையும் எவி எழுப்பிவிடத்தக்கதாயிருந்தது. மற்றவர்கள் தங்கள் வேலைகளின்மேல் பிரியங்கொண்டு நடத்தும்படி அவர்களைத் தூண்டிவிடத்தக்க சத்துவம் அவருக்கிருந்தது. சபைக்குரிய வேலைகள், தேசாந்தர வேலைக்குத் தாவிடையாயிராதபடிக்குப் பார்த்துக்கொண்டுவந்தார். இரண்டு வருடங்களுக்கு முன்னே தேசாந்தரப் பிரசங்கத்துக்கென்று வல்லபசாலிகளான பிரசங்கிகளை ஏற்படுத்தினார். அதில் அவருடைய சபையைச் சேர்ந்தவர்கள் அநேகர் சேர்ந்திருந்தார்கள். அவர் ஜீவியத்தின் தாபம் மனிதனைக் கிறிஸ்துவண்டைக்கு நடத்தவேண்டும் என்பதாயிருந்தது.

1882-ல் அவர் சென்னபட்டணம் சர்வகலாசாலையின் பெல்லோவாக நியமிக்கப்பட்டார். இதற்கு இரண்டு வருடங்களுக்குப் பின்பு, அவர் சுதேச சபையில் செய்த பணிவிடையினிமித்தம் கந்தர்புரி சிரேஷ்ட அத்தியக்ஷரால் பி. டி. பட்டம் பெற்றார். அவர் சென்னபட்டண அத்தியட்சருக்குச் சுதேச சாப்ளன்களில் ஒருவராயிருந்தார். சுதேச கிறிஸ்தவ பணிவிடைக்குரிய எல்லா விஷயத்திலும், அவருடைய ஆலோசனையும் சகாயமும் நாடப்பட்டது. நாற்பதுவருடங்களாய்த் தம்முடன் உழைத்த அவருடைய அம்மாள் 1890-ல் மரித்தது அவருக்குப் பெரிய அடியாயிருந்தது. என்றாலும் அந்த உபத்திரவத்தை அவர் தைரியமாய்ச் சகித்தார். சென்ற வருடம் கடைசியில் தமிழ் மந்திரீசபை ஆலோசனை சங்கத்துக்கு அவர் பிரதி அக்கிராசனாதிபதியாக நியமிக்கப்பட்டார். அந்தச் சங்கத்துக்குச் சென்னை அத்தியட்சர் அக்கிராசனாதிபதி. அவர் திருநெல்வேலிக்கு பெப்ருவரி 12உ புறப்பட்டுப்போய் 16, 17உகளில் நடத்தப்பட்ட ஆலோசனை சங்கத்தில் வேண்டிய முயற்சிகளைச் செய்து, சாயங்காலம் சிந்துபூந்துறை என்ற ஊரில் தாம் கட்டியிருந்த வீட்டுக்குப் போனார். அவருக்குக் குளிரும் காய்ச்சலும் உண்டானது. காய்ச்சல் இரண்டு நாட்களுக்குள்ளே நின்றுபோனது. ஆனால் அவர் பெலன் எல்லாம் ஒடுங்கிப்போயிற்று. திங்கள் 22உ மறுபடியும் காய்ச்சல் வந்தது. அடுத்த நாளிலே அவர் மோசமான நிலைமையிலிருக்கிறாரென்று, அவர் பிள்ளைகளுக்குத் தந்திசமாசாரம் அனுப்பப்பட்டது, அவர்களில் ஒரு பிள்ளை தவிர மற்றெல்லாரும் புதன்கிழமை திருநெல்வேலிக்குப் புறப்பட்டார்கள். ஆனால் முந்தின சாயங்காலம் சமாதானத்தோடே போய்விட்டார் என்ற சமாசாரத்தைக் கேட்கும்படியாக வந்திறங்கினார்கள். அவருடைய சரீரம் சார்ஜென்ற் அத்தியக்ஷர் கல்லறைக்கும் டாக்டர் பௌவர் ஐயர் கல்லறைக்கும் சமீபமாய்ச் சேமிக்கப்பட்டது.

சத்தியநாதன் ஐயர் சிந்தாதிரிப்பேட்டையில் கட்டி தமது ஜீவனை விட்ட வீட்டை சுவிசேஷ பிரசங்க வேலைக்காக உபயோகப்படுத்த அவர் சர்ச்மிஷனுக்கு நன்கொடையாகக் கையளித்தார்.

அறுதி நடக்கை.—இவ்விஷயத்தைப்பற்றி இரண்டுபேர் சொல்லிய சாட்சியை எடுத்துக் காட்டுவோம். "கன்வோகேஷன் பிரசங்கத்தில் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் டைரெக்டர் கிரீக் துரை, சர்வகலாசாலை பெல்லோக்களில் கனம்: உவில்லியம் தோமாஸ் சத்தியநாதன் ஐயர் இறந்துபோனதால் நேரிட்ட நஷ்டத்தைக்குறித்து சொல்லியிருக்கிறதாவது: கனம்: சத்தியநாதன் ஐயர் இந்தச் சர்வகலாசாலையில் முதலாவது மெற்றிகியுலேஷன் பரீட்சை கொடுத்தவர்களில் ஒருவராயிருந்தார். அவர் சென்னைபட்டணத்து சுதேச கிறிஸ்தவர்களுக்குக் கபடமில்லாத ஜீவியத்திற்கும் போதக சித்திசத்திற்கும் தேவபக்திக்கும் உத்தம மாதிரியை வைத்துப்போயிருக்கிறார். வேறே மார்க்கத்தை அனுசரிப்பதினால் சுதேச பாரம்பரியத்தினும் உணர்ச்சியினும் சிறந்தவைகளை விட்டுவிடவேண்டும் என்பது பொருளல்ல என்பதை அவர் காட்டியிருக்கிறார்" என்பதே. சென்னைபட்டணம் அத்தியட்சர் அவரைக்குறித்துச் சொல்லியிருக்கிறதாவது: அவர் இல்லாத குறைவை நான் அதிகமாய் உணருகிறேன். "அவர் எப்பொட்டுப் போனதைக்குறித்து இந்த அத்தியட்சர் ஆட்சி எங்கும் ஞாபகமுண்டாகும். அவருக்கிருந்த இயற்கையான வல்லபமும் முதிர்ந்த அறிவும், பாஷையறிதலும் அவர் தம்மை முழுவதுமாய் இரட்சகருக்கு ஒப்புக்கொடுத்ததும், அவருக்கே ஊழியஞ்செய்து, அவரை மகிமைப்படுத்தவேண்டும் என்றிருந்த ஏக நோக்கமும், அவரை அவர் சகோதரருக்குள்ளே சிறந்தவராக்கி, சுதேச சபையின் காரியங்களைக் குறித்துக் கவலைகொள்ளும் யாவருடைய பார்வையிலும் அவரைக் கண்ணியப்படுத்தியிருக்கிறது. அவர் இப்போது தமது பணிவிடையை விட்டு இளைப்பாறுகிறார். அவர் ஜீவியத்தின் கடைசியில் அவருக்கு நேரிட்ட துக்கமானது, இப்போது இரட்சகருடைய சமுகத்தில் சந்தோஷமாக மாறிற்று. அவர் இவ்வுலகில் மிகவும் விசேஷித்த வகையாய் அன்புகூர்ந்த தமது அருமை மனைவியுடனேயும் மற்றப் பரிசுத்தவான்களுடனேயும் பரம சம்பாஷணை செய்யும்படி போயிருக்கிறார்" என்பதே.





## 8. அன்னாள் சத்தியநாதன் அம்மாள்.

காலஞ்சென்ற கனம்: உவில்லியம் தோமாஸ் சத்தியநாதன் ஐயருடைய மனைவியாகிய அன்னாள் சத்தியநாதன் அம்மாளைப்பார்க்கிலும் தென்இந்தியாவிலுள்ள சுதேச கிறிஸ்தவர்களுக்குள்ளே அதிகமான சய்கை பெற்றவர்களில்லை. அவள் இருபத்தைந்து வருடங்களுக்கு அதிகமாய்த் தன் புருஷனோடே சென்னைபட்டணத்தில் பணிவிடை செய்துவந்தாள். இந்துதேச கிறிஸ்தவ பெண்களுக்குக் கிறிஸ்தவ கல்வி விர்த்தியாகும்படி அவள் காட்டின வைராக்கியமும் அவளுடைய உத்தம கிறிஸ்தவ ஜீவியமும் அவள் பாராட்டின தயாள கிரியைகளினால் பிரத்தியட்சமாய் இந்துக்கள் கிறிஸ்தவர்களான யாவ

ருக்கும் விளங்கவே, அந்த அம்மாளுடைய சொற்கீர்த்தி எங்கும் சென்றது.

சத்தியநாதன் அம்மாள் 1832-௵ ஏப்பிரல்௴ 30௳ மாயபுரத்தில் பிறந்தாள். அந்தப் பட்டணம் செழிப்புள்ள நாடாகிய தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்தது. அவள் கன்னிமைப்பேர் அன்னாள் ஆரோக்கியம்: அவள் கனம்: ஜான் தேவசகாயம் ஐயருடைய ஒரே மகள். தேவசகாயம் ஐயர் இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்தவராய் முதலாவதாகக் குருப்பட்டம் பெற்ற சுதேசியாயிருந்தார். அவர் தென் இந்தியாவில் மிகப் பூர்வ கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர் டேனர் ஆவியிடத்தில் உத்தியோகமாயிருந்தார். அவர் பேர் தானியேல் பிள்ளை. இவர் மிக உத்தம கிறிஸ்தவன். இவருடைய சிறந்த நடக்கையினிமித்தமும் தமது மார்க்கத்தில் கிறிஸ்தவருக்கு உண்மை காட்டினதினிமித்தமும் இவர்பேரில் ஷ்வார்ட்ஸ் ஐயர் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். இவர் ஜெர்மன் பாஷையில் எழுதப்பட்ட சில புஸ்தகங்களைத் தமிழில் திருப்பினார். அவைகளைச் சுதேச கிறிஸ்தவர்கள் ஞான புஸ்தகங்களாக இன்னமும் உபயோகித்துவருகிறார்கள். ஜான் தேவசகாயம் ஐயர் தஞ்சாவூரிலும் திருநெல்வேலியிலும் திருப்பணிவிடையைச் செய்துவந்தார். திருநெல்வேலியில் அவர் சர்ச் மிஷன் சங்கத்தைச் சேர்ந்து சிறந்த வேலையை நடப்பித்தார். அவர் பேர் இன்றைவரைக்கும் சுத்த சுவிசேஷ உபதேசத்தைக் கைக்கொண்டுவருகிற அங்கிலேயருக்கு நன்றாய்த் தெரியும்.

அன்னாள், தேவசகாயம் ஐயர் குடும்பத்தில் ஒரே மகளாயிருந்ததால், தாய் தகப்பன்மார் அவளை நன்றாய் வளர்த்துவந்தார்கள். அவள் தன் தகப்பனுடைய செல்லப்பிள்ளையாக எப்போதும் அவர் பக்கத்திலிருப்பாள். அவரோடே சபை சந்திப்புக்கும் போய், அவர் வேலையில் அதிக உதவிசெய்துகொண்டுவந்தாள். அன்னாள் இங்கிலீஷ்பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று தகப்பனார் விரும்பினதால், அவர் குடும்பத்தாருக்குப் பாசமாயிருந்த சில மிஷனெரி ஸ்திரீகளிடம் அவளை வைத்துப் படிப்பித்தார். அவள் இங்கிலீஷை வாசிக்கவும் தாராளமாய்ப் பேசவும் சீக்கிரம் கற்றுக்கொண்டாள். இப்படி இங்கிலீஷைக் கற்றுக்கொண்டது முக்கியமாய் சென்னபட்டணத்தில் அவள் நடப்பித்த வேலைக்கு மிகுந்த பிரயோசனமாயிருந்தது. 1845-௵ அவள் தன் பெற்றோரோடே சென்னபட்டணத்துக்குப் போய், அவ்விடத்திலுள்ள அநேக பெரியோரோடே பழக்கமானாள். அவள் தன் பெற்றோரோடே ஆலிடேயில் பிரபு ஸ்திரீயைச் சந்திக்கப்போய், அந்த அம்மாளுடன் இங்கிலீஷில் தாராளமாயும் நாகரிகமாயும் சம்பாஷணை செய்ததால், அந்த அம்மாளுக்கு



மிகுந்த சந்தோஷமுண்டானது. அக்காலத்தில் தென் இந்தியாவில் ஆண்பிள்ளைகளுக்குள் முதலாய் இங்கிலீஷ் அவ்வளவாய் விர்த்தியடைந்திருக்கவில்லை.

1849-௵ வேத வித்தியாசாலையில் குருப்பட்டத்துக்கென்று படித்த மிஸ்டர் சத்தியநாதனுக்கு அன்னாள் விவாகம்செய்து கொடுக்கப்பட்டாள். இந்தச் சம்பந்தமானது தேவமகிமைக்கேதுவாக அதிகமான பலனைக் கொடுத்தது. 1859-௵ அவள் புருஷன் பரிசுத்தவானாகிய கனம்: தோமாஸ் ராக்லாந்து ஐயர் கைக்குள் ஸ்ரீ வில்லிபுத்தூரில் தேவபணிவிடையை நிறைவேற்றினார். அவ்விருக்கையில் அவள் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்குமாக, ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தித் தானே படிப்பித்துவந்தாள். 1863-௵ அவள் தன் புருஷனோடே சென்னபட்டணத்துக்குப் போய், அங்கே சீக்கிரத்துக்குள்ளாக வேலையில் பிரவேசித்தாள். ஜெனானாப் போதனை என்று அழைக்கப்படுகிற கிறிஸ்தவ சிறந்த பணிவிடையை முதலாவதாக உண்டுபண்ணின கனம், அந்த அம்மாளுக்கே உரியது. அந்த வேலை அந்த அம்மாள் தன் வீட்டில் இந்து சகோதரிகளுக்காக வைத்திருந்த சிறிய பள்ளிக்கூடத்தில் துவக்கப்பட்டு விர்த்தியடைந்தது. அந்த வேலை துவக்கத்தில் மிகுந்த கஷ்டமாயிருந்தது என்றாலும் அவளுடைய பொறுமையினாலும், வைராக்கியத்தினாலும், சுவிசேஷத்தை இந்து சகோதரிகளுக்கு அறிவிக்கவேண்டுமென்கிற ஆவலினாலும், அது சித்தியானது. ஆரம்பகாலங்களாகக் கடும்பிரயாசத்தைச் செலுத்தினபின்பு, சர்ச் மிஷன் சங்கத்தாரும், ஜெனானா மிஷன் சங்கத்தாரும் அந்த அம்மாள் துவக்கின வேலையை கையேற்றுக்கொண்டு, அந்த அம்மாளையே அந்த வேலையை மேற்பார்க்கும்படி ஒப்புவித்தார்கள். அந்தப்புர ஸ்திரீகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் அந்தப் பொறுப்பான வேலையுடன் உயர்ந்தஜாதி பிள்ளைகளுக்கும் கிறிஸ்தவர்களுக்குமாக ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்களையும் மேல்விசாரித்துவந்தாள். இந்த இரண்டுவகை வேலைகளுக்கும் அவள் தன்னைப் பிரதிஷ்டையாக்கி, கடைசிபரியந்தம் அதை உண்மையோடேகொண்டு செலுத்திவந்தாள். இவ்விஷயத்தில் அவளுடைய குமாரத்திகளும் சொந்தமாய் உதவிசெய்துவந்தார்கள். உயர்ந்தஜாதி பிள்ளைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடத்தில் அவள் அடைந்த சித்தியினாலும் அவளுடைய மதுரமான குணத்தினாலும், அநேகர் அந்த அம்மாளுக்கு உத்தம சிநேகிதரானார்கள். அவர்களில் ஒருவர் சென்னபட்டணம் கவர்னராகிய நேப்பியர் பிரபுவின் பெருமாட்டியே. அந்தப் பெருமாட்டி சத்தியநாதன் அம்மாள் வேலையின்பேரில் மிகவும் பிரியப்பட்டு தான் நேப்பியர் பார்க் என்ற இடத்தில் கட்டின ஒரு பள்ளிக்கூடத்தைக் கையளித்தாள்.

சென்னபட்டணத்தில் இன்னொரு கவர்னராயிருந்த ஹோபார்ட் பெருமாட்டியும் அந்த அம்மாளுடைய வேலையின்பேரில் பிரியம் கொண்டு, அவளுக்குப் பட்சம் பாராட்டினாள். அன்னாள் தன்னுடைய வார்த்தையினாலும் சமுகத்தினாலும் மாத்திரமல்ல, எழுத்தினாலும் தென் இந்தியாவிலுள்ள ஸ்திரீகளுக்குப் பிரயோசனமாயிருந்தாள். அவள் தமிழில் பல சிறு புஸ்தகங்களை முக்கியமாய் ஜெனனா ஜனங்களுக்காக எழுதினாள். அவைகளில் நல்லதாய் என்ற புஸ்தகம் அநேக ஜெனனா வீட்டாருக்கு மிகுந்த பிரயோசனத்தை உண்டு பண்ணினது.

1878-ல் அவள் தன் புருஷனோடே இங்கிலாந்துக்குப் போனாள். சர்ச்சுமிஷன் சங்கத்துத் தாய் கமிற்றியார், அவர்களை வரவழைத்திருந்தார்கள். அவள் இங்கிலாந்தில் ஆறுமாசம் பின்னிட்டு, இந்துதேச ஸ்திரீகளுக்குள்ளே கிறிஸ்தவ பணிவிடை நடந்தேறுவதற்குத் தன்னைப்போல அனேகர் முன்வருவார்களாகும்படி அவ்விடத்திலுள்ளவர்களுக்குள்ளே அனலை மூட்டும்படி அமைதலான மேனாபோடே ஓயாமல் வேலையை நடப்பித்துவந்தாள். அவள் இங்கிலீஷில் ஒரு சிறு புஸ்தகம் எழுதி அதில் தன் தேச ஸ்திரீகளுடைய நிலைமையையும் அவசியத்தையும் எடுத்துக்காட்டி, பிரசுரம் செய்தாள். அவள் இங்கிலாந்திலிருந்து திரும்பிவந்தபின்பு, அவ்விடத்தில் தான் கண்டறிந்த காரியங்களைக்குறித்துத் தமிழில் ஒரு பிரபந்தம் எழுதி அச்சிட்டாள். அது சவிஸ்தாரமாய்ப் பரம்பினது. சபையின் வேலையிலும் அவள் தன் பர்த்தாவுக்கு மிகவும் உதவியாயிருந்தாள். சபையிலுள்ள ஏழைகளுக்கு அவள் உத்தம ஸ்நேகிதியும் தாயுமாயிருந்தாள். அவர்களை அவர்கள் வீடுகளில் சந்தித்து, அவர்களுக்கு வேண்டிய சகாயம் செய்துவந்தாள். இவ்வண்ணமாய் அவள் ஜீவியம் நன்மை செய்வதில் செலவிடப்பட்டது. அவள் தன் வீட்டிலும் பாரிக்குடும்பமான தன் இனத்தார், இஷ்டர்கள் நடுவிலும், ஸ்திரீகளின் சன்மார்க்க ஒழுக்கத்துக்கு முன்மாதிரியாயிருந்தாள். அவள் மரியாதையும், உருக்கமுள்ள மனதும், கபடற்ற தன்மையும், பாசமுமுள்ளவளாயிருந்தாள். அவளுடைய தேவபக்தியும், தூய்மையான ஜீவியமும் என்றுமுள்ள பிரசங்கமாயிருந்தன.

இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தபின்பு, அந்த அம்மாளுடைய சுகம் திர்ப்திகரமாயிருக்கவில்லை. அவள் ஜீவியத்தின் கடைசி மூன்று வருஷங்களிலே அது படிப்படியாய் குறைந்துவந்ததால், அதிகமான பெலவீனத்தையும் நோவையும் அநுபவிக்கும்படி நேரிட்டது. அதெல்லாவற்றையும் அவள் பொறுமையோடும் நம்பிக்கையோடும் தாங்கினபின்பு 1894-ல் அக்டோபர் 24ல் அமைதலாய்த் தன் கண்களை மூடினாள். தன் மரணத்துக்குச் சில நாட்களுக்கு முந்தி,



அவள் தன் பாரிக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களைத் தன் படுக்கையண்டைக்கு வரவழைத்துக் கடைசியான புத்திபோதனைகளைச் சொல்லி, ஆசீர்வாதம் கூறினாள். கடைசிபரியந்தம் அவளுடைய நேச இனத்தார் அவளுக்குப் பணிவிடை செய்தார்கள். அவள் உபத்திரவங்களை அநுபவித்த கடைசி நாட்களின் சங்கதிகளைப்பற்றி, சகுனம் கமலம் என்ற புஸ்தகங்களை எழுதின அவளுடைய மருமகளாகிய கிருபாயி சத்தியநாதன் உரைத்திருக்கிறதாவது: "பார்வை மங்கும்போதும், பெலன் குன்றும்போதும், தேவையானதைக் கேட்கவேண்டிய தருணத்தில் சப்தம் தாழவிழும்போதும், செய்யப்படும் பணிவிடையை அங்கிகரிப்பதற்கு அடையாளமாக சைகை வல்லமையற்றிருக்கும் போதும், உலகம் மங்கலாய்க் காணப்பட்டுதாலும் மற்றவர்களும் பார்வைக்கு மறைந்துபோவதாய்க் காணப்படும்போதும் மனமானது தன் உயர்ந்த தன்மையைக் காட்டி தான் பரத்தின் கைவேலையென்று விளங்குகிறது. அப்போதுதான், நாம் மனதின் சிறந்த தன்மையை உணர்ந்தறிகிறவர்களாயிருக்கிறோம். ஆம், வியாதிப் படுக்கையிலே மாத்திரம் மனித சுபாவத்தின் சோபிதமான பாகத்தைப் பூரணமாய்ப் பார்க்கிறோம். வியாதிகள் துக்கங்களைப்போல சுபாவத்தின் கழிம்பை அகற்றுவதற்கு வேறே ஒன்றும் உதவமாட்டாது. வியாதிக்காரி மிகுந்த பிரயாசத்தோடும் வருத்தத்தோடும், ஒரு வார்த்தைமாத்திரம் சொன்னபோதிலும், அந்த வார்த்தையானது உள்ளத்திலே நடந்திருக்கிற கிரியையை விளக்கி, அது வசனிக்கப்பட்ட ஆழமான கருத்தைக் காட்டுகிறது. அப்போது சமீபத்தில் நிற்கிறவர்கள் தாங்கள் உலகத்திலிருப்பதை மறந்து, தங்கள் காதலியோடே சோதி பூமியின் எல்லையிலிருந்து மோட்சானந்த இன்பங்களை ருசித்து, அதின் நீங்காச் சந்தோஷங்களில் பங்கடைவதுபோலிருக்கிறது.

வியாதிப்பட்ட பதினான்காம்நாளிலே சூரியன் தன் அலங்காரத்தோடே உதித்து, ஒளிவீச எங்கும் பசுமையும் ஆரோக்கியமாயுமிருந்தது. அப்போது அவர்கள் எழுந்திருந்து, காற்று எவ்வளவு சுகமாயிருக்கிறது என்று சொல்லி, மணி, நாள், தேதி இன்னதென்று கேட்டு, என் கையை இறுகப் பிடித்து, இதுவரைக்கும் விழித்தாயிருக்கிறாய்? அது எவ்வளவு பட்சம் என்று மொழிந்து, என்னைப் பாடச்சொல்லி நான், "என்றும் நீர் எனக்குத் தேவை" என பொருளுள்ள பாட்டைப் பாடவே, என் பிறகாலே நான் பாடின வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். பின்பு "இயேசுவின் கையிற் காவல், திவ்விய மார்பிலே, அங்கவர் நேசநிழல், ஆற்றுமென். மனமே" என்ற பாட்டைப் பாடி முடிந்தவுடனே, அவர்கள் தங்கள் கண்களை மூடி; "ஆம், அவர் காவலில் பூரண பத்திரமாயிருக்கிறேன்" என்றார்கள்.

நான் கடைசியாக விழிப்பாயிருக்கும்படி நேரிட்டது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. நான் போகும்படி எழுந்தபோது, அவர்கள் என் கையை இறுகப் பிடித்து, இரு, வாசி என்க, நான் இங்கும் அங்கும் சில பாகங்களை வாசித்தேன். அவர்கள் இளைப்பில்லாதவர்கள் போல கேட்டுக்கொண்டிருந்ததுடன், எப்போதும் சில வார்த்தைகளை என் பின்னே சொன்னார்கள். அவர்கள் கவனமாய்ச் செவி கொடுத்திருப்பதை அறிந்து அது அவர்களுக்கு வருத்தமாயிருக்கும் என்றெண்ணினேன். அவர்களோ அப்படியல்ல, இப்போது எனக்குச் சுகமாயிருக்கிறது. சீக்கிரத்துக்குள்ளாக எல்லாம் சரியாய்ப் போகும், இன்னும் வாசித்துப் பாடு என்றார்கள். அவர்கள் சொன்ன வார்த்தை சீக்கிரத்துக்குள்ளாக வேறேவகையாய் அர்த்தப்படுத்தும்படி நேரிட்டது.

காலை பத்துமணிக்கு அவர்கள் மறுபடியும் எங்களோடே பேசி சீக்கிரத்துக்குள்ளாக நான் சுகமாயிருப்பேன். நான் சற்று மூர்ச்சை மனக்குழப்பமாயிருந்தேன்; என்னை இந்தக் குழப்பமான நிலைமையில் எடுத்துக்கொள்ளாதபடி தேவனைக் கேட்டுக்கொண்டேன். எல்லாம் இப்போது தெளிவாயிருக்கிறது. ஒரு வயோதிபன் வந்து என் சொப்பனத்தில் எல்லாம் சுகமாயிருக்கிறது என்றான். பிள்ளைகளே பாருங்கள் உலகம் எவ்வளவு சீக்கிரமாய் அழுகிவருகிறது. அவர் எல்லாம் சுகமாயிருக்கிறதென்று சொன்னவுடனே, என் மனதுக்குத் தெளிவுண்டாக, என் சொப்பனத்தில் நான் வேலைக்காரனை அழைத்து, உங்கள் எல்லாருக்கும் போஜனம் ஆயத்தம்பண்ணச் சொன்னேன் இது ஆச்சரியமல்லவா? என்றார்கள்.

இரண்டுமணிக்கு அவர்களுக்கு நோவுண்டாக இளைத்தவர்களாய்க் காணப்பட்டார்கள். ஆனால் சீக்கிரத்துக்குள்ளாக அது நீங்க, ஒருமணி நேரம்வரையும் அமைதலாயிருந்து, சுற்றிலும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாலுமணிக்கு படுக்கையில் சற்று அசைவுண்டாக, இரண்டொரு பிரலாப வார்த்தைகள் அவர்கள் உதட்டிலிருந்து புறப்பட்டது. உங்களுக்கு எப்படியிருக்கிறதென்று கேட்டபோது, அவர்கள் அமைதலாய் "நான் போகிறேன்" என்றார்கள். மாமனார் போகிறீர்களா? என்று கேட்கவே, அந்தச் செய்தி அவர்கள் மனதை ஊடுருவிப் பாய்ந்தது. கடைசியாக அவர்கள் தைரியத்தைக் கூட்டிச்சேர்த்து, நாம் இனிமேல் ஒருவரை ஒருவர் கண்டு சந்தித்து, ஒருமித்து வாசம்பண்ணலாம் என்றதுடன் வருத்தத்தோடே "ஒன்றாய்" என்ற வார்த்தை திரும்பவும் சொன்னார்கள். மரணம் சமீபித்து வந்துவிட்டது, அது தேவனுடைய செயல். நாங்கள் அவருக்கு முன்பாக மவுனமாயிருந்தோம்.



சப்தம் தாழ்ந்துவிட்டது, அது நித்தியமௌனத்துக்கு துவக்கம், தெளிவிருக்கிறது, ஆனால் பேசப் பெலனில்லை. தேவனே என் அப்படியிருக்கிறது? கடைசியாக இயேசு என்று ஒரு மெல்லிய சத்தம் கேட்டது, அது மெத்த மெதுவாய்ச் சொல்லப்பட்டது. பூமியிலே அது தான் கடைசியாக உச்சரிக்கப்பட்ட ஆறுதலான வார்த்தை. இயேசு, இயேசு, இந்த வார்த்தையே அவர்களுக்குப் பிரியமான வார்த்தையாயிருந்துவந்தது. அந்த வார்த்தையையே அவர்கள் பலம் குன்றின போதும், பேச சக்தியற்றபோதும், கண் பார்க்கத் தெளிவில்லாதபோதும் அவர்களால் உரைக்கப்பட்டது. அதை அவர்கள் கேட்டு; இயேசு, இயேசு என்ற வார்த்தையைச் சொல்லி இரு கைகளையும் கோர்த்துக்கொண்டு, நீண்ட ஜெபம் செய்து, கண் சைகையால் வழியனுப்பிக்கொண்டார்கள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபோது, கண்ணீர் ததும்பி விழுந்தது. அந்தக் காட்சி ஒவ்வொருவருடைய இருதயத்துக்கும் வியாகுலத்தை உண்டுபண்ணினது. முடிந்தது, கடைசி வார்த்தை சொல்லப்பட்டது, கடைசிப் பார்வையுமாச்சுது; தேவன் அங்கே இருந்தார்.' அவர் சமுகம் அங்கு எழுந்தருளியிருந்தது. அந்த நாங்கள் உணர்ந்தோம். அது பரிசுத்த பூமியாயிருந்தது.

அவர்கள் மகிமையில் பிரவேசிக்க ஒரு அடி எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் அடி எடுத்துவைத்துப் போகிறதை நான் கொஞ்சக்குறையப் பார்க்கிறேன். அவர்கள் பர்வதத்தின் கொடிக்கு ஏறிவிட்டார்கள். அவர்கள் உயர நடந்து நடந்து போகிறார்கள். நாங்கள் அவர்களை நிறுத்தும்படி பிரயாசப்படுவது வீண். கொடிமுடிக்கு அப்பாலிருக்கிற சோதியும் பிரபையும் அவர்களைச் சுற்றிப் பிரகாசிக்க, அங்கே எங்கள் கண்களுக்கு முன்பாகக் கொடிமுடியை விட்டு, மோட்சலோக மகிமைக்கு ஏறினார்கள்.

தங்களுக்குரிய நாணத்தோடே பொன்வாசல் வழியாய் இவ்வளவு இன்பமும், இவ்வளவு சோதியும், இவ்வளவு பாக்கியமும் எனக்குரியதாமென்று சொல்லி, அதிசயத்தோடே பிரவேசிப்பதை நான் பார்ப்பதுபோலிருந்தது. அந்தக் காட்சி என் கண்களுக்கு சோதி பிரவாகத்தை அளித்தது. தேவதூதர்கள் தங்கள் கையில் குருத்தோலைகளைப் பிடித்தவர்களாய் அவர்களைச் சூழ்ந்து நிற்க, அவர்கள் தலைகுனிந்து, என் மகிமை இயேசுவே என்று எப்போதும் பிரியத்தோடே சொல்லும் வார்த்தைகளை வசனித்தார்கள். கிறிஸ்துவின் சமுகம் வந்தது, அவர்கள் ஏறிட்டுப் பார்க்கவே ஒரு மேகம் வந்து, அந்தக் காட்சியை என்னுடைய கண்களுக்கு மறைத்துக் கொண்டது; நக்ஷத்திரங்கள்மாத்திரம் பிரகாசித்துக்கொண்டிருந்தன. பிரகாசித்துக்கொண்டிருந்த இருதயங்களோ சூழ்ந்திருந்தன" என்பதே.



## 9. சாமுவேல் சத்தியநாதன் அம்மாள்.

சாமுவேல் சத்தியநாதன் அம்மாள் காலஞ்சென்ற கனம் ஹாரிபாண்ட் கிஸ்தி யவருடைய கனிஷ்ட புத்திரி. அவள் தகப்பனார் அமெரிக்கன் போர்ட் மிஷெனரி சங்கத்தைச் சேர்ந்தவர். கிருபாயி 1862-ம் பெப்ருவரி 14உ அமெத் நகரில் பிறந்தாள். அவள் தாய் தகப்பன்மார் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள். பம்பே சமஸ்தானத்தில் நவக்கரத்திலே கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்த குடும்பத்தார்களில் அவர்கள் ஒரு குடும்பத்தாராயிருந்தார்கள். அவள் தகப்பனார் குணப்பட்ட சரித்திரம், அவள் பாலிய மனதில் ஆழமான எண்ணத்தை யுண்டுபண்ணினது. அதைப்பற்றி அவள் எழுதின சகுணா என்ற புஸ்தகத்தில் சிறப்பாயும் உருக்கத்தக்க வண்ணமாயும் எழுதியிருப்பதைப் பார்க்கலாம். அந்தச் சிறுபெண் இளவயதி



லேயே கிட்சணிய பக்திக் கூர்மையுள்ளவளாயிருந்தாள். அவள் கல்வியில் மிகுந்த ஆவாவுள்ளவளாயிருந்ததால், அவள் தன் சகோதரரோடுகூட இருந்து படிக்கவாவது அல்லது அவர்கள் படிக்கும்போது, அவர்களோடேகூட இருக்கவாவது உத்தரவு கேட்டுக்கொண்டாள். ஆனால் அவள் சகோதரர் கணிதம் செய்கையில், அவர்களுடைய பிழைகளைத் திருத்திச் சரியானபடி உத்தரவு சொல்லுவாளாதலால், அவர்கள் விடலைத்தன்மையாய்ச் சிறுபெண் தங்களோடேகூட இருக்க விருப்பமில்லாமல் ஆட்சேபித்தார்கள். சிறுபெண்ணுக்குரிய சரியான இடம் என்று எண்ணப்பட்ட அடுக்களைக்கு அனுப்பிவிட அவர்களால் கூடாமற்போயிற்று. ஆனால் படிப்படியாய் அவர்கள் தங்கள் சகோதரியின் கல்வித் திறமையைப்பற்றி அதிகமாய் மதித்துவந்தார்கள். மூத்த சகோதரன் தன் சகோதரியுடைய நடக்கையின் சிறந்த தன்மையைக் கண்டு, எப்போதும் அவளுக்குப் பட்சம் பாராட்டிவந்தான். அவளும் அவனுடைய விநய பயபக்தியினிமித்தம் அவனைக் கண்ணியமாய் மதித்துவந்தாள். இரண்டுபேரும் வடதக்கணத்திலுள்ள வனக்காட்சிகளைப் பார்த்து, அனுபவித்து வந்தார்கள். அவள் குடும்பத்தார் அவள் சகோதரன் பாஸ்கருடைய சுகத்துக்காக அங்கே போயிருந்தார்கள்.

தகப்பனார் இறந்த கொஞ்சக் காலத்துக்குள்ளாக பிள்ளையாண்டான் மரித்துப்போனான். அவனுடைய மரணத்தினால் கிருபாயிக்குண்டான துக்கம் அநேக மாதங்களாய் அவளை வருத்தினது. அதினால் அவள் சுகத்துக்கு அதிகக் கெடுதியும் நேரிட்டது.

அவளுக்குப் பலத்தை வருவிக்க நோக்கமாய் முதலாவது சில மிஷனெரி உபாத்தியாயினிமார்களிடத்தில் கல்வி கற்கவும், பின்பு பம்பாயிலிருக்கிற ஜெனனா பள்ளிக்கூடத்தில் படிக்கவுமாக அனுப்பப்பட்டாள். பள்ளிக்கூடத்தில் அவள் தன் வயதுக்கொப்பான பிள்ளைகளுக்கு வெகுதூரம் பிந்தியிருப்பேன் என்று எண்ணினாள். ஆனால் அதற்குப் பதிலாக பள்ளிக்கூடத்திலுள்ள எந்த வகுப்பாருக்கும் அதிகமாய்த் தேர்ச்சியடைந்திருந்ததால், அவள் தானே தன்னிஷ்டப்படி கல்வி கற்கும்படி விட்டுவிடப்பட்டாள். அப்போது அமெரிக்காவிலிருந்து வந்திருந்த ஒரு டாக்டர் உபாத்தியாயினியிடம் சேர்ந்துகொண்டாள். அதினால் கிருபாயி ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ளும்படி தெரிந்துகொள்ள நேரிட்டது. அந்த அம்மாளோ இயற்கையில் விவேகமும் ஸ்திரமான குணமுமுடையவளாயிருந்தாள்.

கிருபாயின் விசேஷித்த திறமையையும் வைத்திய சாஸ்திரம் படிக்கவேண்டும் என்ற ஆவலையும் அவளுடைய அங்கிலேய சிநேகிதர் அறிந்து, அந்தக் கல்வியைப் பூரணமாய்க் கற்கும்படி அவளை

இங்கிலாந்துக்கு அனுப்ப எண்ணம் கொண்டார்கள். அங்கே போக கிருபாயிக்கும் ஆவலிருந்தது. ஆனால் அவள் தன் முழு பெலனையும் செலுத்திப் படிக்கும்படி இங்கிலாந்து தேச சுவாத்தியம் அவள் தேகத்துக்குப் பொருந்தாதென்று நிறுத்தப்பட்டது. அக்காலத்தில் சென்னபட்டணத்து மெடிக்கல் காலேஜில் ஸ்திரீகளும் வைத்திய சாஸ்திரம் கற்கும்படி முதலாவதாக இடங்கொடுக்கப்பட்டதால், அவளுடைய சிநேகிதர் அவளை அங்கே அனுப்பும்படி தீர்மானித்தார்கள். அவள் யாதொரு துணையின்றி பம்பாய் பட்டணத்தை விட்டு, சென்னபட்டணத்துக்கு வந்தாள். அங்கே கனம்: ஊ. தோ. சத்தியநாதன் ஐயர் அவளை ஏற்றுக்கொண்டு, தமது வீட்டில் வைத்து உபசரித்துவந்தார். கிருபாயிக்கு அதைவிட வேறே நல்ல இடம் கிடைப்பது அரிது. சத்தியநாதன் ஐயர் கிருபாயிக்குப் பிற்காலத்தில் பர்த்தாவாகப் போகிறவருடைய தகப்பனார். அவருடைய சௌஜன்யமும் அவருடைய அம்மாள் பிள்ளைகளுடைய சௌஜன்யமும் அநேக வருடங்களாக நன்மைக்கென்று வல்லமையாகச் சென்று வந்தது. அவர்களுக்கும் கிருபாயிக்கும் நேசபாசமுண்டாக, அவர்கள் வீட்டில் கிருபாயி இருவருடக்காலம் சந்தோஷமாய்ப் பிழைத்திட்டு, மெடிக்கல் காலேஜில் படித்துவந்தாள். அவள் காலேஜில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதத்தைக் குறித்து சகுணா என்ற புஸ்தகத்தில் எழுதியிருக்கிறாள். அவள் கல்விச்சாலைக்கு வந்தபோது மாணாக்கமார் எல்லாரும் எழுந்து நின்று, இந்து பெண்மாட்டிகளில் ஒருத்தி முதலாவதாகத் தங்கள் வகுப்பில் சேரும்படி வந்ததைக் கண்டு அந்த நல்லிய பெண்ணைத் திடப்படுத்தி சந்தோஷப்பட்டார்கள். வருஷக் கடைசியில்; அவள் இரசவாத சாஸ்திரந்தவிர, மற்றெல்லாப் பாடங்களிலும் முதலில் நின்று பல பரிசுகளைப் பெற்றாள். வித்தியாமாணாக்கர்களால், அவளுக்குக் கிடைத்த புகழ்ச்சியினிமித்தம் இயல்பாய்ப் பகைகள் உண்டாகக்கூடியது. ஆனால் அவளோடே படித்த மாணாக்கமார் அவளை எப்போதும் பட்சமாயும் மரியாதையாயும் நடத்தினார்கள். அது அவர்களுக்கே புகழ்ச்சி, அவர்கள் அப்படி நடந்துகொண்டதற்கு அவளுடைய சாந்தமும் பதமையுமான குணமும் ஒரு காரணம். மெடிக்கல் காலேஜில் முன் தலைமையாயிருந்த ஒருவர் அவளைப்பற்றி எழுதியிருக்கிறதாவது: "நான் அறிந்த மிக இன்பமான குணமுடையவர்களில் அவளொருத்தி. அவள் சாந்தமும் அவதானமும் புத்திக் கூர்மையுமுள்ளவள். அவள் நேர்மையும் சலிப்பற்ற யத்னமுமுடையவளாயிருந்தாள்" என்பதே.

அவளுடைய மெல்லிய தேகமானது, அவளுக்குள்ளிருந்த முயற்சியுள்ள ஆத்துமாவுக்குத் தக்க வற்ற பலமுள்ளதல்ல. பரீட்சை முடிந்தபின்பு, அவள் [illegible] பெலவீனப்பட்டுப்போக, அவ



ளுக்குச் சுகவீனமுண்டானது. அப்பால் வைத்திய சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ள அவளுக்குப் பெலனுண்டாகவில்லை. அந்தச் சாஸ்திரத்தை இங்கிலாந்தில் பூரணமாய்க் கற்றுக்கொள்ளவேண்டுமென்பது, அவளுடைய பேராவலாயிருந்தது. ஆனால் அந்த ஆவல் முற்றுப்பெறவில்லை. அவளுடைய திறமையானது வேறே வகை வேலையில் செல்ல நேரிட்டது.

1881-ம் வருஷம் கிருபாயி சென்னபட்டணத்திலிருந்த தன் சிநேகிதருடைய மகனைக் கண்டு சந்தித்தாள். மிஸ்டர். சாமுவேல் சத்தியநாதன் அப்போதுதான் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்திருந்தார். அவர் கேம்பிரிஜ் சர்வகலா சாலையில் 4 வருடம் படித்துக் கீர்த்தியடைந்து கல்விப்பட்டமும் பெற்றிருந்தார். கிருபாயி ஒல்குதலும் தேக பலவீனமும் நீங்கினவளாய்த் தெளிந்த புத்தியும் ஆழ்ந்த சிந்தையும் அன்புமுள்ளவளாயிருப்பதை அவர் கண்டு, ஆச்சரியப்பட்டார். கல்விக் களஞ்சியத்திலிருந்து புதிதாய் வந்தவர் சம்பாஷித்த காரியங்களை அவள் கேட்டு, அவர் தமது தேசத்தாருக்கும் தமது ஜனங்களுக்கும் நன்மை செய்யவேண்டுமென்ற கருத்துடையவராயும் அவர்களுடைய அநுகூலத்துக்கென்று தன்னுடைய வழிவகைகளுக்கு இணங்க ஆயத்தமுள்ளவராயுமிருப்பதைக் கண்டபோது, அவளுக்குள் அது புதுஜீவனை உண்டுபண்ணினதுபோலிருந்தது.

இப்படிப்பட்ட இரண்டுபேருக்கும் அன்னியோன்னியமுண்டாகிறது இயல்பு. அறிவுக்குரிய நாட்டமாகிய சுயாதீன ஜீவியத்தை விட்டுவிடுவது, கிருபாயிக்கு பிரயாசையாயிருக்கும். ஆனால் கடைசியில் பாசமும் அறிவும் நாட்டமும் ஒன்றுக்கொன்று பொருந்தியவைகளென்று கண்டுகொண்டாள். அவள் தன்னுடைய சிறந்த வேலையைத் தன் பர்த்தாவீட்டில் செய்துவந்தாள்.

1883-ஞ் ஜூலையில் மிஸ்டர். சா. சத்தியநாதன் கிருபாயியை விவாகம் செய்து உதகமண்டலத்துக்குக் கொண்டுபோனார். அவர் அங்கே பிரீக் மெம்மோரியல் பள்ளிக்கூடத்துக்குத் தலைமை உபாத்தியாயராயிருந்தார். கிருபாயுடைய தேகத்துக்கு அங்கே ஆரோக்கியமுண்டானதுடன், அவளுடைய மனம் அவ்விடத்திலுள்ள மாட்சிமையான காட்சியையும் சுத்த ஆகாயத்தையும் அழகிய புஷ்பங்களையும் கண்டுகளித்தது.

அவ்விடத்திலிருக்கையில், தான் மற்றவர்களுக்குப் பிரயோசனமாயிருக்கும்படியான வழிவகைகளை உடனே தேடத் துவக்கினாள், வாரத்தில் அநேக மணிநேரங்களை ஜெனனா வேலையிலும் சுதேச பெண்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஹோபார்ட் பள்ளிக்கூடத்திலும்

பின்னிட்டு, அந்த பள்ளிக்கூடத்தை மேற்பார்த்து, அதை முன்னுக்கு வரும்படி செய்தாள். மேலும் அவள், உதகமண்டலத்தில் அநாதைகளாயும் கைவிடப்பட்டிருந்த மகமதுமார்க்க சிறுபெண்களுக்கு ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தாள். அது இப்போது சர்ச்மிஷன் சங்கத்தாருடைய விசாரணைக்குள் பிரயோசனமுள்ளதாய் விர்த்தியடைந்து வருகிறது.

அவள் ஏறக்குறைய அந்தக்காலத்தில் முதலாவதாக தென்இந்திய அப்சர்வர் என்ற இங்கிலிஷ் வர்த்தமானிக்கு, "தோடா ஜனங்களைச் சந்தித்தல்" என்பதைப்பற்றி எழுதினாள். அதற்குப் பின்பு மலைகளில் கண்ட காட்சிகளைப்பற்றியும் பலதரம் எழுதினாள். அவள் எழுதின காரியங்கள் உண்மையும், இயல்பும், ஜீவசத்தையும்பெற்றி அலங்காரமான வாசகப்போக்காயிருந்ததினால், அவைகள் அநேகருடைய கவனத்தைக் கவர்ந்துகொண்டது.

1884-ஆம் மிஸ்டர். சத்தியநாதன் ராஜமகேந்திரத்தில் உத்தியோகம் செய்யப்போனார். கிருபாயி அம்மாளும் கூடவே போனாள். அந்த இடம் அவளுக்குப் பிடிக்கவில்லை. சிலமாதங்களுக்குப் பின் திடீரென அவள் இரத்த நாம்புகளில் ஒன்று வெடித்தது. அதன் பின்பு, அவள் ஜீவித்திருந்த ஒருவருஷகாலமாய் மோசமான வியாதிக்குள்ளானாள். அந்தக்காலத்திலும் அவள் நாஷனல் இந்திய ஜர்னலுக்கும் மற்ற வர்த்தமானிகளுக்கும் எழுதிக்கொண்டிருந்தாள். அடுத்த வருடத்தைக் கும்பகோணத்தில் பின்னிட்டார்கள். கும்பகோணமானது செழிப்புள்ள தஞ்சாவூர் ஜில்லாவில் கல்விக்குப் பேர்போன விடம். அங்கே கிருபாயுடைய சுகம் அநுகூலப்பட்டு வந்ததுபோலக் காணப்பட்டது. அவள் எப்போதும் எழுதிக்கொண்டிருந்து, தன்னைச் சூழ்ந்திருக்கிற ஜனங்களைப்பற்றி ஆராய்வதில் பிரியமுள்ளவளாயிருந்தாள்.

1886-ஆம் மிஸ்டர். சத்தியநாதன் டைரக்டர் ஆவ் பப்ளிக் இன்ஸ்டிரக்ஷனுக்கு உதவியாக நியமிக்கப்பட்டார். பின்பு பிரசிடென்ஸி காலேஜில் நியாய இலக்கணம் கலைஞானம் என்ற சாஸ்திரங்களைப் படிப்பிக்கும்படி ஏற்படுத்தப்பட்டார். அதினால் அவர்கள் சென்னபட்டணத்தில் வசிக்கும்படி நேரிட்டது. இக்காலத்தில் கிருபாயுடைய பர்த்தாவும் சிநேகிதரும், அவள் ஒரோர் பொருளின் பேரில் எழுதுவதற்குப் பதிலாக, ஒரு புஸ்தகம் எழுதும்படி அவளைக் கேட்டுக்கொண்டார்கள். அப்போது அவள் சொந்தமாய்த் தான் நன்றாய் அறிந்தபடி தன் இளம்பிராய காட்சிகளைக்குறித்து எழுதி, அந்தப் புஸ்தகத்துக்குச் சகுணா எனப் பேரிட்டாள்.

அந்தப் புஸ்தகத்திலடங்கிய பொருள் சுயமான விவேகத்துடன் எழுதப்பட்டிருப்பதால், யாருக்கும் மனதைக் கவர்க்கக்கூடிய இன்பத்



தைக் கொடுக்கிறது. அதில் காட்டிய காட்சிகளில் சிலவை உற்சாகத்துடன் சாமர்த்தியமாய் எழுதப்பட்டிருப்பதால், அவைகள் உண்மையான சங்கதிகளாக விளங்க, அதை வாசிக்கிறவன் ஆக்கியோனுடைய கருத்துக்கு இசைந்து, அவைகளை ஒப்புக்கொள்ள நேரிடும். நுட்பமாய் ஆலோசிக்கப்படும் அதிகாரங்களோ சில விஷயங்களில் மனதுக்கு மிகத்தெளிவான வர்ணிப்பாயிருக்கின்றன. காட்சிகளைப்பற்றி எழுதுகையில், கிருபாயி தேர்ச்சவளையாய் அவைகளைச் சிறப்பித்திருக்கிறாள். சிற்பனைப்போலவும் கவிஞனைப்போலவும் அவள் இயற்கையின்பேரில் மிகப் பிரீதியாயிருந்தாள். சிறுபிராயமாயிருக்கையிலும், அவள் தன்மையானது இயல்பின் தன்மை மேரை சிறப்பினால் எவி எழுப்பிவிடப்பட்டது. அவள் தக்க வார்த்தைகளைக்கொண்டு வர்ணிக்கும் சக்தியைப் பார்க்கையில், அவள் இங்கிலிஷ்கவிகள்பேரிலிருந்த பிரீதியினாலும் சவிஸ்தாரமாய்ப் புஸ்தகங்களை வாசித்துவந்ததினாலும் அப்படிப்பட்ட திறமை அவளுக்கு இருந்ததென்றறியலாம்.

அந்தப் புஸ்தகத்தில் காட்சிகள் சிறந்தவண்ணம் விளக்கப்பட்டிருப்பதுடன், குணங்களைப்பற்றிய கூறுபாடுகளையும் நுட்பமாய் எடுத்துக் காட்டியிருக்கிறது. நூதனமான கதைகளை எழுதுகிறவர்கள் அநேகரைப்போல, கிருபாயும் ஜனசங்கத்தில் மௌனமாயிருப்பாள். மற்றவர்கள் சொல்வதைக் கேட்கவும், கவனிக்கவும், குணங்களைப் பற்றி நிதிக்கிறவளாயும் காணப்படுவாள். அவள் ஒருவரையும் அற்பமாய் எண்ணாள்; யாவர்பேரிலும் அவள் மனம் கவியும், அவள் எழுதின முதல் புஸ்தகம் முடிய, அதின் கடைசி அதிகாரம் சென்னபட்டணம் கிறிஸ்தவ கல்லூரி ஜர்னலில் அச்சிடப்பட்ட சற்று பின் கிருபாயிக்கு சகுணமாகிய குழந்தை பிறந்தது. அது தன் பெற்றோருக்குச் சில மாதங்களுக்குமாத்திரம் இரவலாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அதின் தாயின் ஜீவன் அதால் கொஞ்சம்குறைய மோசத்துக்கேதுவாயிருந்தது. கமலத்துடைய குழந்தையின் மரணத்தைக் குறித்து வாசிக்கையில், அவளுடைய துக்கத்தை விரித்துரைத்த இறகு தாயின் கண்ணீரில் தோய்க்கப்பட்டிருக்கவேண்டும் என்று உணரும்படி நேரிடும். அவள் புருஷன் அக்காலத்தில் அவளைப்பற்றி "இந்தப் பெரிய கஷ்டத்துக்குப் பின்பு, அவள் ஒருக்காலும் அவளாக இருக்கவில்லை" என்று எழுதியிருக்கிறார். என்றாலும் அவள் ஒருக்காலும் முறுமுறுக்கவில்லை; அமைதியாய் நடந்துகொண்டு, மற்றவர்களுக்குப் பிரயோசனமான காரியங்களைச்செய்து, தன் வியாகுலத்தை நீக்கும்படி முயன்றாள். அவளுடைய புருஷன், அவள் தன் தகப்பனுடைய வீட்டையும் தன் பந்துக்களையும் கண்டால் அநுகூலமடையலாமென்று நம்பி, பம்பே பட்டணத்துக்குக் கூட்டிப்போனார். ஆனால் பிரயாணத்தின் அலுப்பினால் அவள் மிக

வும் தோய்ந்து சங்கடப்பட்டு மறுபடியும் சுகவீனத்தோடு திரும்பினாள்.

சென்னபட்டணத்தில் ஒரு ஆஸ்பத்திரியில் அவள் சிலகாலமிருந்ததில் அங்கே செய்யப்பட்ட பரிகாரத்தினால் அவளுக்குச் சற்று சுகமுண்டானது. அவளுக்கிருந்த வியாதி சீக்கிரத்துக்குள்ளாக மரணபரியந்தத்திற்கு உட்படுத்தும் என்று சொல்லப்பட்டபோது, அதை அவள் வழக்கம்போல அமைதியோடும் சாந்தகுணத்தோடும் ஏற்றுக்கொண்டாள்.

அடுத்த வருஷத்தில் அவளுடைய நெருங்கின இனபந்துக்களில் சிலர் இறந்துபோனதால், மனநோவுக்குள்ளானாள். முக்கியமாய் அவள் புருஷனின் தகப்பனாரும் தாயாரும் காலஞ்சென்றுபோனது, தீராத விசனத்தை அவளுக்குண்டாக்கினது. அவள் பயங்காளியாயும் கூச்சமுள்ள பிள்ளையாயும் சென்னபட்டணத்தில் கால்மிதித்தபோது, அவர்கள் இருவரும் அவள் அவ்விடத்தில் சுகமாயிருக்கத் தக்கதாய் வசதிபண்ணி, மிகுந்த பாசம் காட்டியிருந்தார்கள். அவளுக்குச் சுகவீனமும் துக்கமும் நேரிட்டபோதிலும், எப்போதும் எழுதிக்கொண்டேயிருந்தாள். அவள் எழுதினவைகளில், அவள் மாமனார் குணப்பட்ட சரித்திரம் மிகச் சிறந்தது; அது முதலாவதாக அச்சிடப்பட்டது. அப்பால் அவளுடைய மனோவியின் ஜீவிய சரித்திரச் சுருக்கத்தையும், சென்னபட்டணத்திலே பள்ளிக்கூடங்களில் அவள் செய்த நன்மைகளையுங்குறித்தெழுதினாள். அப்பால், கமலம் என்ற புஸ்தகத்தை எழுதத் துவக்கினாள். பொருளை எடுத்துக்காட்டும் வகையைப்பற்றிய அளவு, அதிக பலமாய் அவள் மனதிலிருந்திருக்கவேண்டும். சென்னபட்டணத்தில் ஆஸ்பத்திரியிலிருக்கையிலே, சில அதிகாரங்களைக்குறித்து அவள் யோசித்திருந்தாள். முக்கியமாய் ருக்மாவின் புருஷன் விஷபேதியில் இறந்த காரியத்தைக்குறித்து மிக சிந்தனைகொண்டிருந்தாள். அந்தப் புஸ்தகத்தை அவள் காய்ச்சலாயிருக்கும்போதே அவாவோடே எழுதினாள். ஒருவேளை தான் அதை முடிக்க ஏதுவிராதென்று எண்ணி அப்படி எழுதிவந்தாள். இறகு பிடித்தெழுத கூடாதிருந்தபோது, அவள் தன் புருஷனுக்கு வாசகத்தைச் சொல்ல, அவர் அதை எழுதிவந்தார். காய்ச்சல் அப்போது 104 ரேகைக்கு வந்தெட்டியிருந்தது. இந்துதேச பெண் சொற்பப் பிரயோசனமான காரியத்தையாவது செய்யக்கூடும் என்று நான் காட்டட்டும் என்று அவள் வேண்டிக்கொண்டாள். அவள் ஆசையும் அவளுக்கு அநுக்கிரகிக்கப்பட்டது. சகுணத்தைப் பிரசுரம் செய்தவர்கள் ஜர்னலில், கமலமும் பிரசுரம் செய்யப்பட்டதை அவள் கண்டாள்.

தன் சுகவீனத்தால் வைத்திய சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ளத் தடைப்பட்டதைக் கண்டபோது, தான் கொண்ட நோக்கத்தையும்



தன் தாலந்துகளையும் வேறே வகையாய்ச் செலுத்தினதைப் பார்க்கையில், அவள் மனோசக்தி வரம்பெற்றவளென்று தெளிவாய்க் காட்டுகிறது. அவள் தன் கைக்கெட்டின வேலையைச் செய்ய ஆயத்தமாயிருந்ததுடன் உழைப்பெடுத்து, அவைகளைச் செய்யவும் மிகுந்த திறமையுடையவளாயிருந்தாள்.

கமலத்தின் மிச்சமான பாகம் நீலகிரியைச்சேர்ந்த கூனூரில் எழுதப்பட்டது. அவ்விடத்திலுள்ள குளிர்ந்த ஆகாயமானது அவளுக்குப் பலத்தை யுண்டுபண்ணும் என்ற நோக்கத்தோடே 1893-ம் அங்கே கொண்டுபோகப்பட்டாள். மறுபடி சென்ற ஏப்ரல் மாசத்தில் அவளைக் கூனூருக்குக் கூட்டிக்கொண்டுபோனதில், துவக்கத்தில் சற்று சுகமுண்டானதுபோலக் காணப்பட்டது. அவளுடைய புருஷனும் அவர் சகோதரியும் அவளை வெகு பத்திரமாய்ப் பார்த்து, ஆகாரம் ஊட்டிவந்தார்கள். ஆனால் அவள் சுகம் குன்றுதலடையத் துவக்கினது. ஒருதரம் அவள் ஜீவனைப்பற்றி அவநம்பிக்கையும் உண்டானது. அவள் முகமலர்ச்சி ஒருக்காலும் அவளைவிட்டு நீங்கவேயில்லை. மரணம் சமீபிக்கவே, அவளுடைய பலத்த விசுவாசமானது பிரகாசமாய்த் துலங்கினது. மறுபடியும் சென்னபட்டணத்துக்கு வந்தாள். அவளைப் பத்திரமாய்ப் பார்த்துவந்த சகோதரி திடீரென்று மரித்துப்போகவே, அதினாலுண்டான அதிர்ச்சியைத் தாங்க அவளுடைய பலவீனதேகம் சக்தியற்றதாயிருந்தது. நீண்டகாலமாய் ஒரு இழையின்மேல் தொங்கியிருந்த ஜீவன் 1894-ம் ஆகஸ்டு மீ 8உ சமாதானத்துடன் பறந்துபோய்விட்டது. அவள் உடல் சென்னபட்டணத்திலிருக்கிற புரசவாக்கம் கல்லறைத் தோட்டத்தில் அவள் பிள்ளை அருகே சேமிக்கப்பட்டது.

கிருபாயுடைய ஜீவன் நீடித்திருந்து, அவள் ஆத்துமாவைப்போல அவள் சரீரமும் பலமாயிருந்தால், அவள் என்னென்ன காரியங்களைச் செய்திருப்பாள் என்று யார்தான் சொல்லக்கூடும். அவள் எழுதின கவி வாசகமானது, அவள் பிந்தியகாலத்தில் கவிசிரோமணியாவாள் என்று விளங்கினது. அவள் புஸ்தகங்கள் அவளுக்கு அந்நியமான இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்டபோதிலும், காட்சிகளைப்பற்றி விசித்திரமாய் வர்ணித்திருப்பதையும் இலட்சணங்களைப்பற்றி, அவள் சுத்தபாவனையாக விளக்கியிருப்பதையும் ஒவ்வொரு வரியிலும் காணப்படும் ஊக்கத்தையும் தெளிவையும் பார்க்கையில், அவைகளை அங்கிலேயர் செய்திருக்கிற கதைகளுக்கு ஒப்பாக மதிக்கலாம்.

அவள் சவிஸ்தாரமாய்ப் பற்பல இங்கிலீஷ் புஸ்தகங்களை வாசித்ததில், எனத்தனமாய்ப் பாஷைநடையைப் பின்பற்றாமல், தான் விரும்

பின கவிஞர்களுடைய கருத்துகள் தன்னில் ஒரு பாகமாகும் பரியந்தம் அவைகளை உட்கொண்டுவந்தாள். பிரின்சஸ் என்ற பாட்டின் கவிகளின்பேரில் அவளுக்கு முக்கிய பிரீதியிருந்தது. டெனிசன் கடைசியாக உண்டுபண்ணின கவி, அவள் சாகுமுன் உதடுகளிலிருந்தது.

கிருபாயி சத்தியநாதனுடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கு அவளுக்குப் பிள்ளைகளில்லாதிருந்தும், அவளுடைய ஞாபகசின்னமானது இந்துதேசத்தின் உத்தம ஸ்திரீகளுக்கெல்லாம் அருமையான சுதந்தரம்போலிருக்கும். அவர்கள் இன்னமும் தேர்த்தியும் நன்மையுமான கல்விசாஸ்திரங்களை உண்டுபண்ணக்கூடுமென்ற நம்பிக்கைகளினால் அவர்களைத் திருப்திசெய்யும். அது அவர்களை நன்றியறிதலால் நிறையவும் பண்ணும். இங்கிலிஷ் ஸ்திரீகளாகிய நாங்களும் அந்த நன்றியறிதலில் பங்குள்ளவர்களாயிருக்கிறோம். ஏனெனில் கிருபாயி நாம் ஒருவரையொருவர் அறியவும், ஒருவரிடத்தில் ஒருவர் அதிகமாய் அன்புகூரவும் படிப்பித்திருக்கிறாள்.

## தெலுங்கர்.

திராவிடபாஷைகளில் தெலுங்குதான் சவிஸ்தாரமாய் அநேக ஜனங்களால் பேசப்பட்டுவருகிறது. கிழக்கரையோரமாய் சென்னபட்டணத்துக்குச் சமீபத்திலிருந்து சிக்காகோலம்வரையும் அந்தப் பாஷை வழங்கப்பட்டுவருகிறது. சிக்காகோலத்திலிருந்து ஒரியா பாஷை துவக்குகிறது. அதின் உள்நாடு இந்தியாவின் நடுமையம்வரையும் செல்லுகிறது. அதின் விஸ்தீரணம் 100,000 சதுரமைல். 1891-ல் தெலுங்கு பேசுகிற ஜனங்களின் தொகை, இரண்டுகோடியாயிருந்தது. அதின் அட்சரங்கள் பெரும்பாலும் வட்டவடிவாயிருக்கின்றன.

தெலுங்கு ஜனங்களுக்கு முதல் மிஷனெரிகளாக கனம்: க்ரான் ஐயரும், கனம்: டெஸ் கிரான்ஜஸ் ஐயரும் லண்டன் மிஷன் சங்கத்தாரால் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் 1805-ல் விசாகபட்டணத்தில் வேலையைத் துவக்கினார்கள். 1836-ல் அமெரிக்கன் பப்திஸ்து மிஷனெரியாகிய கனம்: எஸ். டி. டேய் ஐயர் வந்து பணிவிடையை நடப்பித்தார். கனம்: எல். ஜெவயற் ஐயர் 1852-ல் முதலாவது குணப்பட்டவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

1893-ல் தெலுங்கு மிஷன்களைச் சேர்ந்தவர்களாய் 99 அந்நிய தேச மிஷனெரிகளும் 68,938 சபையாரும் இருந்தார்கள். பப்திஸ்து



மிஷன், ஞானஸ்நானம் பெற்றவர்களின் தொகையைமாத்திரம் காட்டியிருக்கிறது. மற்ற மிஷன்கள் ஞானஸ்நானம் பெற்றவர்களும் ஞானஸ்நானம் பெறாமல் ஆராதனைக்கு வருகிறவர்களுமான 35,000 சுதேசிகளைக் காட்டியிருக்கின்றன. பள்ளிக்கூடக் கணக்குச் சரியாய் வைக்கப்படவில்லை. பிள்ளைகளின் தொகை 12,339 என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

## 10. கனம்: எம். ரத்தினம் ஐயர்.

மங்கலம் ரத்தினம் காரு, கனம்: நோபிள் ஐயர் காலத்தில் குணப்பட்ட முதல் பிராமணன். அவரும் அவர் உடன் வேலையாளுமாகிய வ. பூஷணம் காரும் இந்துமார்க்கத்தை விட்டு, கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்தார்கள். அவர்கள் இரண்டுபேர்களுடைய மனைவிகளும் பிந்தி அவர்களைச் சேர்ந்துகொண்டார்கள். ரத்தினம் காருவுடைய முதல் மனைவி குழந்தையாயிருந்தபோது, அவருக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டாள். அவள் பெற்றோரிடத்திலிருந்து அவளை வரவழைப்பது மிகுந்த பிரயாசமாயிருந்தது. அந்தக் குடும்பத்துக்குப் பூசாரியாயிருந்த ஓர் பிராமணன் சுதேசிகளின் கருத்துக்கு இசைவாய்ப் பேசி, புருஷன் எந்தக் கிணற்றிலிறங்கினானோ, மனைவியும் எப்போதும் அதில் இறங்கவேண்டுமென்று சொன்னதின்பேரில், அவள் அனுப்பிவிடப்பட்டாள். பல்லக்குக் கொண்டுவரப்பட்டது. அவள் மனப்பிரியத்தோடே அதிலேறவே, தன் புருஷன் அண்டைக்குச் சல்தியாய்க் கொண்டுபோய் விடப்பட்டாள். அவள் தன் பிள்ளைகளோடும் புருஷனோடும் நோபிள் ஐயர் வீட்டில் சுகமாய் வாழ்ந்துவந்தாள். பின்பு அவள் உத்தம கிறிஸ்தவளானாள். ஆனால் சீக்கிரத்துக்குள்ளாக, அவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து மறுமைக்குட் சென்றாள். யாருக்கும் நோபிள் ஐயர் உபசாரியாயிருந்ததால், குணப்பட்டவர்கள் ஒருவராவது அவர் மேசைக்கு வராதபடி நிறுத்திவைக்கப்படமாட்டார்கள். குணப்பட்டவர்கள் உத்தமர்களாயிருந்ததற்கு காரணம், தேவ பக்தனை நோபிள் ஐயருடன் அவர்கள் பழகி, அவரோடே சம்பாஷணைசெய்து வந்ததேயாம். நோபிள் ஐயர் தம்மால் குணப்பட்டவர்களைத் தெலுங்கருக்குச் சுதேச குருக்களாக்கவேண்டும் என்ற நோக்கமுடையவராயிருந்தார். அவர் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதில் அதிசயப்படத்தக்கவண்ணம் மனவுறுதியுள்ளவராயும் தாம் எடுத்தகாரியம் முடிக்க வல்லபசாலியாயுமிருந்தார். ஆனால் அவர்களுக்குக் குருப்

பட்டம் கொடுக்க இடையூறுகளுமிருந்தன. கர்த்தருடைய வேலை விருத்தியடைய அவர்களுடைய உதவி அவசியமாயிருந்தபோதிலும், சென்னபட்டணம் சர்ச்சுமிஷன் கமிற்றிமார் அவர்கள் சபையில் பணிவிடை செய்தாலன்றி மற்றப்படி குருப்பட்டம் கொடுக்கப்படாதென்று சொன்னார்கள். மற்றச் சேகரங்களில் அவர்கள் பணிவிடை செய்தபின்பு, அவர்கள் இரண்டுபேரும் தங்கள் ஞானதகப்பனோடேகூட இருக்கும்படியான சலாக்கியத்தைப் பெற்றார்கள். நோபிள் காலேஜில் உபாத்தியாயராயிருந்த கனம்: ஜே. ஷார்ப் ஐயருடைய உதவியினால் நோபிள் ஐயர் அவர்களுக்கு வேதபாடம் படிப்பித்தார். காலேஜில் அவர்கள் வேலை அதிகப்பட்டுக்கொண்டிருந்ததால், ரத்தினம் காருக்கும் பூஷணம் காருக்கும் படிப்பிக்க நேரம் கிடைப்பது வருத்தமாயிருந்தது; நோபிள் ஐயர் என் ஜீவியம் ஒன்றுக்குமுன் ஒன்றைத்தாவிப் பிடிக்கிறதாயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் தமது சொலிசைப் பாராமல், அவர்களை நன்றாய் ஆயத்தப்படுத்தினார். தாம் சுவிசேஷத்தினாலேபெற்ற இரண்டு குமாரரையும் திவ்விய பணிவிடைக்கென்று நன்றாய் ஆயத்தப்படுத்தி அனுப்பவேண்டும் என்பது அவருடைய முழுநோக்கமாயிருந்தது. ரத்தினம் காரு கிரேக்க பாஷையில் நிபுணராகும்படி படிப்பித்தார். அவர்களுக்குத் திருப்தியவண்ணம் வேதபோதனைகளைக் கற்றுக் கொடுத்தார். அவர்கள் எஜமானுடைய உபயோகத்துக்காக பரிசுத்தமாக்கப்பட்டிருந்த பொன் பாத்திரங்களாய் எந்த நற்கிரியையும் செய்ய ஆயத்தமாயிருந்தார்கள். அவர்கள் முதலாவதாக எல்லூரில் இங்கிலிஷ் ஆராதனை நடப்பிக்கும்படி நேரிட்டது. இரத்தினம் காரு ஐயர் இங்கிலிஷில் தேர்ந்த பிரசங்கியாயிருந்தார். செகராய், மசூலி, எல்லூர் என்ற இடங்களில் அவருடைய பணிவிடை இங்கிலிஷில் அவசரத்தினிமித்தம் நடத்தப்பட்டபோது, அங்கிலேயர் மிகவும் அருமையாய் மதித்தார்கள். 1876—ஞ பெஜவாடா பள்ளிக்கூடத்துக்கு உபாத்தியாயராக அனுப்பப்பட்டார். மிகவும் தாழ்ந்த ஸ்திதியிலிருந்த அந்தப் பள்ளிக்கூடத்தை மேற்றரமான ஸ்திதிக்குக் கொண்டுவந்தார். இந்தக் கண்ணியமான ஸ்திதியிலிருக்கையில், அவருடைய சகோதரரான மிஷனெரிமாரும் சென்னபட்டணம் சர்ச்சமிஷன் கமிற்றிமாரும் அதிகமதிகமாய் அவரை மதித்துவந்தார்கள். சென்னை அத்தியட்சர் அவரைப்பற்றியிருந்த நல்லெண்ணத்துக்குக் குறிப்பாக, அவரைத் தம்முடைய கண்ணிய சாப்பிளான்களில் ஒருவராக்கினார். அந்த உத்தியோகத்திலே தர்ஜுமா முதலிய வேலைகளை அவர் அதிகமாய்ச் செய்யும்படி நேரிட்டது. முக்கியமாய் ஜெபபுஸ்தகத்தைத் தெலுங்கில் திருப்புகிறதில் அவர் அதிகப் பிரயோசனமாயிருந்தார். அங்கிலேயரும் சுதேசிகளும் கூடின கூட்டத்திலே சுத்த தெலுங்கா



யிராத அற்பத்தையும் அவர் உடனே கண்டுபிடித்து, நீக்கிப் போட்டுச் சரியான வார்த்தையும் அமைத்துக் கொடுப்பார். ஜாதி வேற்றுமை அவரிடத்தில் கொஞ்சமேனும் கிடையாது. மலாஜாதியைச் சேர்ந்த தமது சகோதரரைப்பற்றி அவருள்ளத்தில் நல்ல எண்ணமிருந்தது. துவக்கமுதல் தெலுங்கு ஜில்லா ஆலோசனை சங்கத்தை ஏற்படுத்துவதற்கு அவரும் அங்கிலேயருடன் ஒருவராயிருந்தார். அவர் அதற்கு செக்கிரத்தேரியும் பின்பு பிரதி அக்கிராசனாதிபதியுமாயிருந்தார். இதுவிஷயத்தில் அவர் இடத்துக்கு வேறொருதகுந்த ஆள் கிடைப்பது வருத்தம். பெஸ்வாடா ஹைஸ்கூலிலிருந்து மசூலிபட்டணம் சபையையும் அதோடே வேறு சில சபைகளையும் விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டார். கனம்: டப்ளியூ. ஜீ. பேக்கர் ஐயர் சுகவீனத்தினிமித்தம் இந்தியாவை விடும்படி நேரிட்டபோது, அவர் சேகர முழுமையையும் விசாரிக்கும்படி நியமிக்கப்பட்டார். அந்த வேலையில் அவர் தமது கடமைகளை கீர்த்தியாயும் சித்தியாயும் நிறைவேற்றினார்.

மசூலிபட்டணம் சேகரத்தை விசாரித்த மூன்று மிஷனெரிமார் மரணத்தால் தறிப்புண்டுபோனார்கள். ஷார்க்கி ஐயர் ஒன்று, பூஷணம் காரு இரண்டு, இப்போது ரத்தினம் காரு மூன்றாவதாக தேகவியோகமானார். இந்த நஷ்டங்கள் அந்த மிஷனுக்குச் சோதனையாக நேரிட்டிருக்கிறது. அதை நிர்வகிப்பதும் வருத்தமாயிருக்கிறது. ஒரு வருஷத்திலே ஆறுமாசங்களாக தேசத்தில் மிச்சமானபாகத்தில் தண்ணீர் கட்டி நிற்கும். சக்தியுள்ள ரஸ்தாக்களையும் வயல்களையும் தண்ணீர் கால்களையும் கடந்து பிரயாணம்செய்வது பயங்கரமாயிருக்கும். நம்முடைய சகோதரர் உண்மையோடே உழைத்து, மார்க்கத்துக்குரிய ஆசீர்வாதங்களையும் சாக்கிரமெந்துகளையும் அநேக இடங்களிலுள்ள விசுவாசிகளுக்குப் பரிமாறி, தேவனுடைய சபையை நன்றாய் ஆண்டு, அதின் எல்லையை விஸ்தாரப்படுத்திக்கொண்டுவந்தார். விசேஷ விண்ணப்பம் செய்யும்படியாகக் குறிக்கப்பட்ட நாளுக்குச் சம்பந்தமாய் நம்முடைய அத்தியட்சர் குருக்களுக்கெழுதின விளம்பரத்தில் அவர் ஒரு ஐரோப்பிய மிஷனெரியின் வேலையைச் செய்துவந்தார் என்று காட்டியிருக்கிறது. அவர் ஒருவர் செய்யக்கூடிய வேலையிலும் அதிகமான வேலை செய்தார். சென்ற வருடத்தில் கனம்: பேட்பீல்டு ஐயர் இங்கிலாந்துக்குப் போகவேண்டியதாய் நேரிட்டபோது, மிஷனெரிமாருடைய ஆலோசனைக் கூட்டத்தில் பேட்பீல்டு ஐயரும் கூடஇருக்க, எல்லாரும் ஏகமாய் ரத்தினம் ஐயர் நோபிள் கல்விச்சாலைக்கு முதலாளியாயும், அவருடைய அம்மாள் ஷார்க்கு மெம்மோரியல் பெண்பள்ளிக்கூடத்தை மேல்பார்க்கவுமாக கமிற்றிமாருக்குச் சிபார்சு செய்தார்கள். ரத்தினம் அம்மாள்

சென்னபட்டணத்தில் அண்டர்சன் அம்மாள் பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கப்பட்டவள். ரத்தினம் ஐயர் பெரிய வேலைகளின் மத்தியில் திடீரென மரணத்துக்குள்ளானார். மிஷன் ஆசாமிகள் வழக்கப்படி புதன்கிழமை ஜெபக்கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். ரத்தினம் ஐயர் மிஷன் லித்தானியாவை வாசிக்கும்படி குறிக்கப்பட்டிருந்தது. "ஜீவனாலாகிலும் மரணத்தினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தில் மேன்மைப்படும்படி" என்ற ஜெபத்தை வாசிக்கவே, அதிலே நிறுத்திவிட்டார். கனம்: பீல் ஐயர் உடனே புஸ்தகத்தை வாங்கி, ஆசீர்வாதம்சொல்லி ஜெபத்தை முடித்தார். ஜெபம் முடியவே ரத்தினம் ஐயர் மயங்கி கீழே விழுந்தார். அரைமணி நேரத்துக்குள்ளாக அவர் ஜீவன் பறந்துபோய்விட்டது.

சென்னபட்டணம் கமிட்டிமார் நவம்பர் மாசத்தில் அவரைக் குறித்துச் செய்த தீர்மானமாவது, "நவம்பர் 10உ மங்கலம் ரத்தினம் ஐயர், காக்காவலியினால் மரித்துப்போன செய்தியை துக்கத்தோடே சாதனத்தில் பதிவுசெய்கிறார்கள். அவரை இழந்தது தெலுங்கு சபைக்கும் மிஷனுக்கும் பெரிய நஷ்டமாயிருக்கிறது. அவர் பக்திவிஷயத்திலும் திவ்விய பணிவிடையை உண்மையோடு செய்த விஷயத்திலும் நன்மைக்கென்று அவர் தமது சொற்சக்தியை பிரயோகித்த விஷயத்திலும் கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய தெலுங்கன் முப்பத்துநாலு வருடங்களாக, ஸ்திரமான நடக்கையினால் சிறந்த மாதிரியைக் காட்டினதையிட்டு கமிட்டிமார் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார்கள். இங்கிலிஷிலும் கிரேக்கிலும் தெலுங்கிலும் அவர் தேறின வித்வானாயிருந்தார். வேதாகம ஜெபபுஸ்தக திருப்புதல்களில் சிறந்த உதவிசெய்தார். தெலுங்கில் கிறிஸ்தவ கல்வி விர்த்தியடையும்படி காரணமாயிருந்தார். ரத்தினம் ஐயருடைய பணிவிடையும் நடக்கையும் அவருடைய தேசத்தாருக்கு நீண்டகாலமாய்த் தெரியக் காட்டிக்கொண்டேயிருக்கும். தங்களுடைய திவ்விய எஜமானுக்கு மகிமையுண்டாக, தங்களுடைய சிறந்த ஜீவியத்தினாலும் சம்பாஷணையினாலும், மயங்கிக்கிடக்கும் திரளான கூட்டத்தாரை ஜீவதண்ணீருள்ள ஊற்றண்டைக்குக் கொண்டுவர அவரைப்போலுள்ள அநேக தெலுங்கு கிறிஸ்தவர்களைத் தேவன் எழுப்பும்படி ஊக்கமாய் ஜெபிக்கிறவர்களாயிருக்கிறார்கள். கமிற்றிமார் இந்தத் தீர்மானத்தில் ஒரு பிரதியை ரத்தினம் ஐயருடைய விதவைக்கும் அனுப்பி, அவளுடைய பெரும் துயரத்தில் அவர்கள் அவளுடன் கிறிஸ்தவ அநுதாபம் காட்டி, நாயனார் திக்கற்ற விதவையின் இருதயத்தில் பேசினவர், அவளுடைய துக்கத்தில் பலமாய் ஆறுதல் அளிக்கவும் விண்ணப்பம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள்" என்பதே.



# 11. பி. வெங்கய்யா.

வெங்கய்யா தான் மிகப் பெரிய தூமகேது காணப்பட்ட இரண்டு வருடங்களுக்கு முந்திப் பிறந்ததாகச் சொன்னான். அந்த நக்ஷத்திரம் 1811-ம் வருடம் தோன்றினதாயிருக்கலாம். அவன் 50 வயசாயிருக்கையில், கனம்: த்ரி. உவை. டார்லிங் ஐயரோடே அறிமுகமானான். டார்லிங் ஐயர் அவனைப்பற்றி எழுதின சரித்திரத்திலிருந்து இந்தச் சரித்திரம் சுருக்கி எழுதப்பட்டிருக்கிறது.

1859-ளு பெஸ்வாடாவில் சிவராத்திரி திருவிழா கொண்டாடப்பட்ட ஒரு காலையில் டார்லிங் ஐயர் அந்த உற்சவத்துக்கு வந்த திரள் கூட்டத்தில் பிரசங்கித்தார். அந்தப் பிரசங்கத்தைக் கேட்டவர்களில் ஒருவன் வெங்கய்யாவே, தேவனைப்பற்றி யாராவது அங்கே பிரசங்கிப்பார்கள் என்ற நம்பிக்கையோடே 28 மைல் தூரம் கால்நடையாய் நடந்துவந்தான். உற்சவகாலங்களிலே சில தருணங்களில் ஒரு கிறிஸ்தவ குரு பிரசங்கிப்பதாகக் கேள்விப்பட்டிருந்தான். அப்படிப்பட்ட ஒருவரை பெஸ்வாடாவில் காணலாம் என்று எண்ணி, பிரயாணப்பட்டு வந்திருந்தான்.

வெங்கய்யாவுக்கு மெய்த்தேவனைப்பற்றி அறியவேண்டும் என்ற ஆசை எப்படி வந்தது? மூன்று வருடங்களுக்கு முன்னே விக்கிரகங்களைத் தூர எறிந்துவிடவும், தேவனைத் தேடவும் ஆச்சரியமானவகையாய்ப் போதிக்கப்பட்டிருந்தான். அதின் விபரமாவது உலக விபத்துக்களிலிருந்து விடுவிக்கும் என்று எண்ணப்பட்ட விக்கிரகத் தெய்வங்களுக்கு முன்பாக வெங்கய்யா நிற்கையில், அருகேயிருந்த ஒரு இந்து சிநேகிதன் இப்படிப்பட்ட தெய்வங்கள் மனிதருடைய கைவேலைகள் என்றும்; தச்சன் அவைகளைச் செய்ய, வர்ணக்காரன் வர்ணம் பூசியிருக்கிறான், அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது, வாயினாலும் பேசாது என்றும் ஒரு கிறிஸ்தவ குரு பிரசங்கித்தார். அதுமுதல் நான் இப்படிப்பட்ட தெய்வங்களின்பேரில் நம்பிக்கை வைப்பதை விட்டுவிட்டேன் என்று சொன்னதைக் கேட்டு, உடனே விக்கிரகங்களை விட்டுத் திரும்பி, ஜீவனுள்ள மெய்த்தேவனை ஆராதிக்கத் தன்னை ஒப்புவித்து, அவரைப்பற்றிய அறிவில் பெருகும்படி விரும்பினான். முன்சொல்லிய இந்து சிநேகிதன் வெங்கய்யாவிடத்தில், கிறிஸ்தவ குரு மகாபெரிய தேவன் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசம்பண்ணுகிறவரல்ல, அவரே ஒன்றான மெய்த்தேவன் என்று பிரசங்கித்ததைப்பற்றியும் சொல்லியிருந்தான். வெங்-

கய்யா மகாதேவனே நீர் யார்? நீர் எங்கேயிருக்கிறீர்? உம்மை எனக்குக் காட்டும் என்று ஜெபித்தான்.

இப்படி மூன்று வருடங்கள் கழிந்தன. வெங்கய்யா இருந்த தாலுகாவுக்கு ஒரு கிறிஸ்தவ குருவாவது வந்திருப்பதில்லை; ஏனெனில் அக்காலத்தில் அப்படிப்பட்ட தூரமான இடத்துக்கு ஆள் வருவது கூடியகாரியமாயிருக்கவில்லை. ஆனால் அந்த மூன்று வருடங்களும் வீணாய்க் கழியவில்லை. மிஷனெரிமார் அடுத்த ஜில்லாக்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததால், அதைக் கேட்டவர்கள் வாய்மொழியாய் மற்றவர்களுக்குச் சொன்னதை வெங்கய்யா நன்றாய்க் கேட்டுத் தான் கேட்டவைகளைத் தியானிப்பான். அவைகளைப்பற்றி சொப்பனங்களையும் காண்பான். சொப்பனத்திலே தேவன் தன் ஜெபத்துக்கு மறு உத்தரவாகத் தன்னைப் போதிப்பதாய்க் காண்பான். கிறிஸ்துமார்க்கத்துக்கடுத்த சன்மார்க்க புஸ்தகம் ஒன்று அவனுக்குக் கொண்டுவரப்பட்டது. அவன் அதை வாசிக்கக் கேட்டு, அதால் தெளிவடைந்தான், அதிலே மகா பெரிய தேவன் தாமே கெட்டுப்போன உலகத்தாருக்கு இரட்சகராயிருக்கிறாரென்று காட்டியிருந்தது. அந்தச் சத்தியத்தை அவன் பிடித்துக்கொண்டு மகாதேவனாகிய இரட்சகரே, உம்மை எனக்குக் காண்பியும் என்று ஜெபம் பண்ணிவந்தான்.

வெங்கய்யா இன்னொருவகையிலும் போதனையைக் கற்றுக்கொண்டான். அவனுடைய சிநேகிதரில் சிலர் கிறிஸ்தவ அடைக்கலத்துக்குப் போயிருந்தார்கள். அவர்கள் வெங்கய்யாவிடத்தில் கிறிஸ்தவர்கள் தாக்கப்பட்ட விதத்தையும், அவர்கள் இந்துக்களைப்போல் நடக்காமல் மரித்துப்போனவன் கடைசிநாளில் எழுந்திருப்பானென்று தங்களைத் தேற்றிக்கொண்டதையும்பற்றி ஆச்சரியத்தோடே சொன்னார்கள். அப்போது வெங்கய்யா அப்படிப்பட்ட போதனை ஜீவனைக் கொடுக்கிற தேவனிடத்திலிருந்து வந்திருக்கவேண்டும் என்பதற்கு ரூபகாரமாயிருக்கிறதென்று எண்ணினான்.

பெஸ்வாடா உற்சவத்துக்கு வெங்கய்யா வந்ததைப்பற்றி முன் சொல்லியிருக்கிறோமே. பிரயாணத்தினால் இளைப்படைந்தவனாய் ஆயிரக்கணக்கானபேர்கள் ஸ்நானம் பண்ணிக்கொண்டிருந்த நதியோரத்தில் உட்கார்ந்து, இந்த ஜலம் பாவத்தைச் சுத்திகரிக்கமாட்டாதென்று சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்போது ஒரு பூசாரி அவனைக் கண்டு, நீ ஸ்நானம் செய்யப் போகவில்லையா? இந்தச் சமயத்திற்கு அவசியமான மந்திரங்களை ஜெபிப்பதற்கு உனக்கு உதவிசெய்வேன். அப்போது உனக்கு வேண்டிய நன்மைகள் கிடைக்குமென்று உறுதிப்பாடாய்ச் சொன்னான். அதற்கு வெங்கய்யா அவனைப் பார்த்து,



ஐயா, அப்படியல்ல, இங்கே நான் ஸ்நானம் செய்யவேண்டியது அவசியமா? திரள் கூட்டமான ஜனங்கள் நதியில் பாய்ந்து ஜலத்தைச் சேறாக்கிப்போட்டதால், என் சரீர அழுக்கை நீக்கமுதலாய் ஏதுவில்லையே; அப்படியாகில், என் பாவங்களை அது எப்படி சுத்திகரிக்கக்கூடும் என்று சொன்னான். பூசாரி ஆச்சரியத்தோடே நீ கிறிஸ்தவனோ? என்று கேட்டான். அதற்கு வெங்கய்யா நான் கிறிஸ்தவனல்ல; ஆனால் அப்படியாக விரும்புகிறேன் என்றான். அப்போது பூசாரி யாராவது கேட்டுக்கொள்வார்களென்று பயந்து, அவன் காதில் உன்னைக் கிறிஸ்தவனாக்கக் கூடியவர் ஒருவர் இருக்கிறார். அவர் அதோ அந்த மலைபடிவாரத்திலிருக்கிற வீட்டில் வாசம் செய்கிறார். நீ கிறிஸ்தவனாகக்கூடிய விதத்தை உனக்கு அறிவிப்பார் என்று மெதுவாய்ச் சொல்லிவிட்டுக் கடந்துபோனான்.

வெங்கய்யாவின் சிநேகிதரில் சிலர் அவனைப்போல பிரயாணத்திலே அவ்வளவாய்க் களைத்துப்போகவில்லை. அவர்கள் கூட்டத்துக்குப் போய், அங்கே இயேசுகிறிஸ்து உலக இரட்சகர் என்று ஒரு மிஷனெரி பிரசங்கித்ததைக் கேட்டார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் வெங்கய்யா பார்க்கவேண்டும் என்று விரும்பின மனுஷன் இதோ இருக்கிறாரே என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். வெங்கய்யா அதைக் கேட்டு, நாம் உடனே கிறிஸ்தவ குருவண்டைக்குப் போவோம், வாருங்கள் என்ன, எல்லாரும் மிஷனெரியுடைய பங்களாவுக்குப் போனார்கள். அவர்கள் வெளியே இருக்கையில், வெங்கய்யா தேவனுக்கு நேராக தன் இருதயத்தை ஏறெடுத்துக்கொண்டிருந்தான். அவன் செய்கிற தின்னதென்பதை அவன் இஷ்டர் அறியாதிருந்தார்கள். ஏனெனில் அவன் தன் தலையை தன் முழங்கால்கள் இரண்டுக்கும் இடையில் வைத்துக்கொண்டிருந்தான். அவன் பண்ணின ஜெபமாவது "மகாதேவனாகிய இரட்சகரே, இந்தக் குருவை எங்களுக்குக் காண்பித்தருளும்" என்பதே.

மிஷனெரி பட்சமாய் அவர்கள் யாரென்று விசாரித்தபோது, வெங்கய்யா தன் கரங்களை விரித்தவனாய் முன்னுக்கு வந்து, குருவே தேவனைப்பற்றி அறியும்படி உம்மைப் பார்க்க வந்தோம். நீர் அறிந்திருக்கிற இரட்சகரான மெய்த்தேவனைப்பற்றி, தயவுசெய்து எங்களுக்குச் சொல்லும். என் இஷ்டர்கள் இன்று காலையில் உம்முடைய பிரசங்கத்தைக் கேட்டார்கள்; நான் அப்போது அங்கேயில்லை, நான் அதைக் கேட்க விரும்புகிறேன் என்றான். மிஷனெரி, அப்போது இயேசுவின் சரித்திரத்தையும், பாவிகளுக்காக அவர் மரித்த அன்பையும் எடுத்துக் காட்டினார். அவர் பேசி முடிந்தவுடனே வெங்கய்யா எழுந்துநின்று, மிகுந்த பெருமூச்சோடே தன் கைகளை மார்

போடே மடக்கிக்கொண்டு, உயரப்பார்த்து, "இவரே என் தேவன், இவரே என் இரட்சகர், நான் இவரை அநேக நாட்களாய்த் தேடினேன், இப்போது இவரைக் கண்டுபிடித்தேன், இவரே என் இரட்சகர், நான் இவரை வணங்குவேன்" என்றான்.

அந்த மனிதனோடே சில மணிநேரம் பேசி, ஜெபம்பண்ணின பின்பு, வெங்கய்யா மிஷனெரியைப் பார்த்து அவர் தன் ஊருக்கு வரும்படி கேட்டான். அப்படியே மிஷனெரி மூன்றாம் நாள், அவன் ஊருக்குப் போனார். வெங்கய்யாவும் அவன் இனத்தார்களும் அவரை ஏற்றுக்கொண்டார்கள். அவர் அங்கே சிலநாட்கள் இருந்து, அந்த ஊர் ஜனங்களுக்கும், பக்கத்து ஊர்களிலிருந்து வந்த ஜனங்களுக்கும் பிரசங்கித்தார். பிராமணர் மிஷனெரியை எதிர்த்து, அவரைத் தங்கள் ஊரைவிட்டுத் துரத்திவிடும்படிப் பார்த்தார்கள். மிஷனெரி ஜனங்களுக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப் போதித்தது தங்கள் மார்க்கத்துக்கு இடையூறு உண்டாக்குகிறதென்றும், அப்படிச் செய்வதில் அவர் இராணி அம்மாளுடைய கட்டளைக்கு விரோதம் செய்கிறாரென்றும், அதற்காக அவர்மேல் பெரியகோர்ட்டில் பிரியாது செய்வோமென்றும் பயமுறுத்தினதுடன் பிரியாதும் செய்தார்கள்.

ஜனங்களில் சிலருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி குறிக்கப்பட்டநாள் வந்தபோது, மிஷனெரியின் கூடாரத்துக்கு வருகிறவர்களெல்லாம் நொறுக்கப்படுவோம்; ஸ்நானம்பெறுகிறவர்கள் மூச்சு முட்டிச் சாவார்களென்று பயமுறுத்தினார்கள். ஆனால் அதைப்பற்றி எண்ணம் கொள்ளவில்லை. வெங்கய்யாவும் அவன் மனைவியும் அவன் பிள்ளைகளும் பதினாறு மனுஷரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். கடைசியாக தேனு என்கிற மனுஷன் ஞானஸ்நானம் பெற்றபோது, வெளியே ஒரு அழுகை சத்தம் கேட்கப்பட்டது. தேனு என்பவன் அது தன் மனைவியின் சத்தம் என்பதை அறிந்து அவளைத் தடுத்துவையுங்கள், அவளைத் தடுத்துவையுங்கள், அவள் கிணற்றுக்குப் போகிறாள் என்றான். அவள் தன் புருஷன் ஞானஸ்நானம் பெற்றால் கிணற்றில் விழுந்து இறந்துபோவேனென்று அவனைப் பயமுறுத்தியிருந்தாள். அவளைத் தடுத்துவைத்தார்கள். ஒரு மாசத்துக்குப் பின்பு, அவளும் ஞானஸ்நானம் பெற்றாள்.

வெங்கய்யா [illegible] சுவிசேஷத்தைச் சமீபமான இடங்களிலும் தூரமான இடங்களிலும் பிரசங்கித்துவந்தான். மேலும் அவன் வாசிக்க படிக்கவும் பிரயாசப்பட்டான். அவன் கண்ணாடிபோட்டுப் படிக்கவேண்டியதாயிருந்தால், அது அவனுக்கு மிகுந்த பிரயாசமாயிருந்தது. அவனுக்கு நல்ல ஞாபகசக்தி யிருந்த



தால், அது அவனுக்கு நன்மையாக இருந்தது. அவன் வேதவாக்கியங்களை மனதில் பாடம்பண்ணிவைத்து, இரட்சகரைப்பற்றி அறிவிக்கும்போதெல்லாம், அந்த வாக்கியங்களை எடுத்துரைப்பான். கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிப்பதற்கு ஒரு கட்டிடத்தை உண்டாக்க வேண்டும் என்ற ஆவல் அவனுக்கிருந்தது. அதற்கு வெங்கய்யா நிலம் கொடுத்தான். கிறிஸ்தவர்கள் தங்களுடைய பெலனுக்குத் தக்கதாக உதவிசெய்தார்கள். புறத்திலிருந்தும் கொஞ்சம் சகாயம் கிடைத்தது. ஒரு ஜெபவீடு சீக்கிரத்துக்குள்ளாகக் கட்டப்பட்டது. வாரநாட்களில் அந்த இடம் ஆண் பெண் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடமாக உபயோகிக்கப்பட்டது.

வெங்கய்யா பிரசங்கிக்கும்படியாக பல இடங்களுக்குப் போனபோது, சில இடங்களில் அவன் கடினமாய் நடத்தப்பட்டதுண்டு. ஒருதரம் குந்தபுளி என்ற இடத்தில் கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றி சில இந்துக்களோடே நியாயம் பேசிக்கொண்டிருந்தபோது, அவனுக்குப் பின்னிருந்த ஒரு மனிதன் ஒரு தடிக்கொம்பைக்கொண்டு பலமாய் அடித்தான். அதனால் அவன் சுருண்டு கீழே விழுந்தான். அவனை மிஷனெரி வீட்டுக்கு மரண நிலைமையில் தூக்கிக்கொண்டு போனார்கள். ஒரு மணிநேரத்துக்கதிகமாய் அவன் மூர்ச்சையாயிருந்தான். இதெல்லாவற்றையும் அவன் உத்தம கிறிஸ்தவனாக சகித்துக்கொண்டான். அவன் ஜீவன் பாதுகாக்கப்பட்டது. துன்பத்துக்கு அஞ்சாமல் அவன் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கிக்கவும், அவ்விடத்திலுள்ள கொஞ்சப்பேரான கிறிஸ்தவர்களோடே ஆராதனை செய்யவும் அடிக்கடி குந்தபுளிக்குப் போய்வருவான்.

கனம். ஜே. ஸரோன் ஐயர் வெங்கய்யாவிருந்த ஊராகிய இராகவாபுரத்துக்கு மிஷனெரியாக நியமிக்கப்பட்டார். ஒரு நல்ல கோயில் வேண்டியதாயிருந்தது. 1883-ம் அவர் எழுதினதாவது: கோயிலுக்கு அஸ்திபாரம் போடப்பட்டுத் தரைக்குமேலே அது எழும்பி வருகிறது. அஸ்திபாரக்கல் ஏப்ரல்மீ 9ல் வெங்கய்யாவாலும் என் மனைவியாலும் முதலாவதாக வைக்கப்பட்டது. 1885-ம் மார்ச்சுமீ 5ல் ஆராதனைக்காக பிரதிஷ்டையாக்கப்பட்டது. வயோதிபனான வெங்கய்யா கண்ணீரோடும் பெருமூச்சோடும் ஸரோன் ஐயருக்கு முன்பாக சொன்னதாவது, "போதும் கர்த்தாவே, அபாத்திரனான உமது ஏழை அடியேன் இப்போது சமாதானத்தோடே புறப்படட்டும்" என்று சொன்னான் என்பதே.

1891-ம் மார்ச்சுமீ 17ல் மிஷனெரியின் அம்மாள் எழுதினதாவது: "வெங்கய்யா இன்னமும் உயிரோடிருக்கிறான்; அவனுக்குக் கண் தெரியாதிருந்தும் முகமலர்ச்சி யுள்ளவனாயிருக்கிறான்; கோயி

ந்துக்கு வர அவனால் இயலாது; ஆனால் அடிக்கடி ஆட்கள் அவனைச் சந்திக்கும்படி விரும்புகிறான்; வாசிக்கக் கேட்கவும், பாடக் கேட்கவும் அவனுக்குப் பிரியமிருக்கிறது; மிகுந்த அனேகரோடே ஜெபம் பண்ணிவருகிறான்" என்பதே. வெங்கய்யாவைப்போல சுவிசேஷத்திற்காக அதிகமாய்ச் சகித்தவர்களில்லை. வயோதிப பலவீனத்தால் அவன் பற்பல இடங்களுக்கும் போய்ச் சுவிசேஷத்தை அறிவிக்க இயலாதிருந்தபோது, தன் குடிசையிலிருந்து பிரசங்கிப்பான். 1891-ம் செப்டெம்பர் 19உ அவன் மரணமடைந்தான். அப்போது அவன் தூங்குகிறவனைப்போலக் காணப்பட்டான்.

வெங்கய்யா மரித்த சில மாசங்களுக்குப் பின்பு 2,915 கிறிஸ்தவர்கள் இருந்ததாக மிஷனெரி எழுதியிருக்கிறார்.

---

## கன்னடர்.

---

கன்னடபாஷையானது, மைசூர் நாடெங்கும் வழங்கப்படுகிறது. வடக்கே நிசாம் ராஜ்யத்திலிருக்கிற பேதார் வரையும் அது பேசப்படுகிறது. மேல்கரையிலிருக்கிற கன்னடத்திலும் அது சாதாரணமாக உபயோகிக்கப்படுகிறது. கன்னடம் பேசப்படுகிற பூமி 65,000 சதுரமைல் அளவுள்ளது. 1891-ம் அந்த பாஷையைப் பேசின ஜனங்கள் 90 இலட்சம்பேராயிருந்தார்கள்.

கன்னடருக்குள்ளே மிஷன்வேலை 1810-ம் வருஷம் ஜான் ஹான்ஸ் ஐயரால் தொடங்கப்பட்டது. அவர் லண்டன் மிஷனைச் சேர்ந்தவராய் பல்லாரியில் வாசமாயிருந்தார்.

1893-ம் கன்னடத்திலே 67 ஐரோப்பிய மிஷனெரிமார்களும் 4,881 நற்கருணைக்காரரும், 13,567 பள்ளிப்பிள்ளைகளும் இருந்தார்கள்.

லண்டன் மிஷனைச்சேர்ந்த சாமுவேல் பிளைகல் ஐயர் மிகுந்த அன்போடு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகருக்குப் பிரயோசனமுள்ளவராயிருந்தார். அவரைக்குறித்து எழுத போதுமான உபகரணங்கள் கைக்குக் கிட்டவில்லை.



# 12. வயோதிபனான தானியேல்.

---

தானியேல் ஞானஸ்நானம் பெறுமுன் சிக்கா என்றழைக்கப்பட்டான். ஆனால் இந்தச் சரித்திரத் துவக்கமுதல் அவனைத் தானியேல் என்ற பெயரால் அழைப்போமாக. அவன் 1799-ம் மேய்மீ 4உ பங்களூருக்கு 55 மைலுக்கு வடமேற்கேயிருக்கிற குப்பி என்னும் பட்டணத்துக்குச் சமீபமான சிங்காமாளி என்ற கிராமத்தில் பிறந்தான். அந்நாளில் சீரங்கபட்டணம் அங்கிலேயரால் பிடிக்கப்பட்டது. தானியேலுடைய தகப்பன் வறிஞனாயிருந்ததால், அவன் தன் மகனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப ஏதுவில்லாதிருந்தது. தானியேலுக்கு வாசிக்கவும் எழுதவும் தெரியமாட்டாது. ஆனால் அவன் ஜீவியம் பிரயோசனமானதாயிருப்பதால், அதைப்பற்றி எழுதுவது நன்மையாயிருக்கும்.

ஒருநாள் தானியேல் குப்பியில் தன் தகப்பன் வீரசிக்கா என்பவரோடேகூட இருக்கையில், அவனுடைய இனத்தாரில் ஒருவன் வந்து, உன் தகப்பனார் நம்முடைய தேவதையை ஒரு பெட்டிக்குள் வைத்துப் பூட்டி தன் ஊர் கோவில் பூசாரியிடம் கொடுத்து வந்துவிட்டார்; அது அங்கேதானிருக்கிறது, அது முதல் இதுவரைக்கும் அதற்குப் பூசை செய்யப்படவில்லை; அதால் அது கோபதாபமாயிருக்கிறது; என்மேலும் என் குடும்பத்தின்மேலும் கொடிய ஆபத்து வந்திருக்கிறது. நாம் போய் அதை இங்கே கொண்டுவந்து, அதற்குப் பூசை செய்வோம் என்றான். அந்தத் தேவதைக்கு இலட்சுமி எனப் பேர். அது ஐசுவரியத்தையும் சௌக்கியத்தையும் கொடுக்குமாம். தானியேல் என்ற பிள்ளையாண்டான், அதைக் கேட்டபோது "இலட்சுமி என்ற தேவதை உம்மை ஐசுவரியத்தினால் ஆசீர்வதித்திருக்கிறது; எங்களையோ தரித்திர நிலைமையில் வைத்துவிட்டது. அது எங்களுக்கு வாழ்க்கை கொடுத்தாலொழிய அதற்குப் பூசை செய்யோம் என்றான். தானியேலின் தகப்பனும் இனத்தானும் பிள்ளையாண்டானைக் கோபத்தோடே பார்த்தார்கள். ஆனால் கடைசியாகத் தகப்பன் விக்கிரகத்தை எடுத்து வருவதற்கு இடங்கொடாதபடி நிறுத்திப்போட்டான்.

தானியேலுக்கு 11 வயதாயிருக்கையில், அவனும் அவன் சகோதர சகோதரிகளும் புண்களால் உபத்திரவப்பட்டார்கள். பெற்றோர் அந்தப் புண்கள் நீங்குவதற்கு என்ன செய்யலாமென்று ஒரு குறிகாரனைக் கேட்டார்கள். அவன் நாகதேவனை வணங்காததால் இந்தப் புறப்பாடு உண்டாயிருக்கிறது என்றான். ஆதலால் பெற்

றோர்கள் இரண்டு பழைய கற்சிலைகளை எடுத்துப் பாம்பின் உருவமாக அடிக்கச்செய்து, அவைகளை வணங்கினார்கள். அப்படிச் செய்வது மதியீனம் என்று தானியேல் எண்ணி, தருணம்பார்த்து, அவைகளை இரண்டு மூன்று துண்டுகளாகத் தகர்த்துத் தூர விட்டெறிந்துபோட்டான். அவன் தகப்பன் அவன்பேரில் மிகுந்த கோபங்கொண்டு, மரத்தெய்வங்கள் பொய்யாயிருக்கலாம், நாகதேவன் அப்படியல்லவே, இப்போது அதின் கோபம் நம்மேல் அதிகரிக்குமே, என்னென்ன ஆபத்துகள் நமக்கு நேரிடுமோ, யார்தான் சொல்லக்கூடும்? என்றான்.

தகப்பனுடைய கோபம் தணிந்தபின்பு, தானியேல் அவனைப் பார்த்து, "ஐயா, சர்ப்பங்களை வணங்குவதும், அவைகளுக்குச் சொரூபங்களைச் செய்வதும் மதியீனம்; பொறுமையாயிரும், நமக்கு யாதொரு ஆபத்தும் வராது, அப்படி ஏதாவது ஆபத்து நேரிட்டால், நான் வேறே இரண்டு சொரூபங்களைச் செய்விப்பேன், அப்போது கிரமமாய் அவைகளுக்குப் பூசை செய்யலாம்" என்றான். சில நாட்களுக்குள்ளாகப் பிள்ளைகள் எல்லாருக்கும் சுகமுண்டாயிற்று. பெற்றோருக்கு நாகதேவனை வணங்குவதைப்பற்றிய எண்ணம் அற்றுப் போயிற்று.

தானியேல் 19 வயசாயிருக்கையில் அவன் குடும்பம் எளிமையாயிருந்ததால், தான் மூன்றுக்கு வர்த்தகனாக அவன் வேறே இடத்துக்குப் போகப் பிரியமாயிருந்தான். ஐசுவரியவானாயிருந்த அவன் இனத்தாரில் ஒருவன், அவனைத் தன் வீட்டில் வைத்துப் பண்ணை வேலை செய்யும்படி பழக்கினான். தானியேலுக்கு விவாகம் செய்யப் பிரியமிருந்தபோது, அந்த இனத்தான் கலியாணச் செலவை எல்லாம் செய்தான். தானியேல் அவனோடே அநேக வருடக்காலமிருந்தான்.

1836-ஆ செப்டெம்பர் 1உ தானியேல் முதல்விசையாகச் சுவிசேஷ பிரசங்கத்தைக் கேட்டான். பாலியமுதல் இறைவனையும் அவன் விக்கிரக வணக்கத்தை அவமதித்தாலும், ஒன்றான மெய்த் தேவனைப்பற்றி ஒன்றும் அறியாதவனாயிருந்தான். அந்த நாளிலே வெஸ்லியன் மிஷனைச்சேர்ந்த கனம்: ஹாட்சன் ஐயர் குப்பி நகரத்தில் முதல்விசையாக இரட்சண்ணிய வழியைப்பற்றிச் சுருக்கமாய்ப் பிரசங்கித்தார். அடுத்த வருடம் ஏப்பிரல் மாசத்தில் ஹாட்சன் ஐயரும் அம்மாளும் குப்பியில் குடியிருக்கப் போனார்கள். அவர்களை வந்து பார்த்தவர்களில் ஒருவன் தானியேல். அவர்கள் தானியேலின் ஊராகிய சிங்காமாளியைப் பார்க்கப் போனார்கள். அங்கிலேய துரைசானி ஒருவராவது அதற்கு முந்தி அங்கே போயிருந்ததில்லை. ஊர்ஜனங்



கள் எல்லாரும் கூடிவந்தார்கள். ஹாட்சன் ஐயர் சுருக்கமாய் அவர்களுக்குப் பிரசங்கம் செய்தார்.

விக்கிராகாராதனையைப்பற்றி தானியேலுக்கிருந்த அவநம்பிக்கையைக்குறித்து மிஷனெரிக்கு அறிவிக்கப்பட்டது. அவனுடைய சொற்சக்தியினாலும் மிஷனெரியுடைய சொற்சக்தியினாலும் சிங்காமாளியில் விக்கிரக வணக்கம் அநேகமாய் நின்றுபோனது. அந்த இடத்தில் அர்ச்சிக்கப்பட்ட விக்கிரகத்துக்குப் பேர் இரங்கன். அது இப்போது ஏன் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது? என்று கேட்டபோது, ஜனங்கள் மிஷனெரிமாராகிய நீங்கள் "அந்தத் தெய்வம் எங்களைப் பராமரியாமல் நாங்களோ அதைப் பராமரிக்கிறோம் என்றும், நாங்கள் அதைத் தனிமையாய் விட்டுவிட்டால் அது தன்னைப் பாதுகாக்க வலாதென்றும், அது தன்னைக் காக்க சக்தியற்றதாயிருந்தால் எங்களை எப்படிக் காக்கும் என்றும் சொன்னீர்களே, அது எங்களுக்குப் புத்தியாய்த் தோன்றினது. அது தானேத் தன்னைப் பாதுகாக்கக்கூடுமோ, அல்லவோ என்பதைப் பார்க்கும்படி தீர்மானித்திருக்கிறோம். அது தன்னைப் பாதுகாக்காதிருந்தால், எங்களையும் பாதுகாக்க வலாதென்பது நிச்சயம். ஆகவே நாங்கள் பூசையை நிறுத்தியிருக்கிறோம். அது விளக்கு அணையாதபடி செய்யவும், பூமாலைகள் காய்ந்துபோகாதபடி பண்ணவும், ஆலயம் சுத்தமாயிருக்கப் பார்ப்பதும், அதற்கு இயலாதென்றும், ஒரு அற்பகாரியத்தையாவது தானேச் செய்ய சக்தியற்றதென்றும் சீக்கிரத்துக்குள்ளாக கண்டுகொண்டோம். விளக்கு அணைந்துபோயிற்று, பூமாலை வாடிப்போயிற்று, ஆலயம் அழுக்காய்ப் போயிற்று. பின்பு சிரித்துக்கொண்டு, மேற்கூரையும் அதின் தலைமேல் விழுந்தது, அது அதற்குக் கீழே சும்மாதானிருக்கிறது. அது தன்னைப் பாதுகாக்க வலாதென்று நன்றாய்க் கண்டுகொண்டோம்" என்றார்கள். பூசாரியைப்பற்றி விசாரித்தபோது, ஒரு வாலிபன் அவன் தன் மிருகஜீவன்களோடு வயலுக்குப் போய்விட்டான். ஆலயம் கைவிடப்பட்டதால் அவன் தன் வயிற்றுப் பிழைப்புக்கு ஏதாவது செய்யவேண்டுமே என்றான்.

1843-ஆ கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றி தானியேல் அதிகமான அபிலாசை காட்டினான். மிஷனெரிமார் சிங்காமாளியில் ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்துப் பிள்ளைகளைப் பரீட்சிக்கக் கிரமமாய் வந்து போயிருந்தார்கள். தானியேல் பள்ளிக்கூடத்துக்கு அடிக்கடி வந்து பிள்ளைகள் பாடம்படிக்கையில் கேட்டுக்கொண்டிருப்பான். அவனுக்கு வாசிக்கத் தெரியாதிருந்தும், தன் பிள்ளைகளைப் படிக்கச்செய்து நாடோறும் அநேகவருடங்களாய் வேதத்தைத் தனக்கு அவர்கள் வாசிக்கும்படி செய்தான். அவனுக்குப் பலத்த ஞாபகமும் சாதாரண புத்

தியும் உண்டு. பழைய புதிய ஏற்பாடுகளில் அடங்கிய அநேக காரியங்களை அவன் நன்றாய்க் கற்றுக்கொண்டான். துன்பம் உண்டாகும் என்ற பயத்தினால் அவன் கிறிஸ்துமார்க்கத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடப் பின்வாங்கியிருந்தான். ஆனால் ஆவியானவர் அவனில் கிரியையை நடப்பித்துவந்தார். கடைசியாகக் கிறிஸ்துவுக்காகச் சகலத்தையும் விட்டுவிடத் தீர்மானித்தான். அவன் ஞானஸ்நானம் பெறுமுன்னதாக, அவனுக்கு நேரிடும் துன்பங்களைப்பற்றி எச்சரிக்கைப்பட்டதுடன், விழிப்புள்ளவனாய் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருக்கும்படி போதிக்கப்பட்டான். அப்பொழுது தானியேல் "எனக்குண்டாகும் ஒவ்வொரு வருத்தத்திலும் தேவன் எனக்கு ஆதரவாயிருப்பார், அவருடைய உதவியால் நான் அதைச் சகிப்பேன்" என்றான்.

ஞானஸ்நானத்துக்காகக் குறிக்கப்பட்ட தினத்தில் அநேகர் கோயிலில் கூடிவந்தார்கள். அவர்களுக்குள் அவன் இனத்தாரில் பலரும் இருந்தார்கள். மிஷனெரி தண்ணீரை அள்ளி ஞானஸ்நானம் கொடுக்க எத்தனமாயிருக்கையில், சமீபத்திலிருந்த ஜனங்கள், ஜலத்தில் இரண்டொரு சொட்டு தற்செயலாய்த் தங்கள்மேல் விழுந்துவிடும்; அதனால் அவர்கள் தங்கள் விருப்பத்துக்கு விரோதமாய்க் கிறிஸ்தவர்களாகவேண்டியதாகும் என்று பயந்து, அதிர்ச்சிகொண்டு வெளியே ஓடிப்போனார்கள். மற்றவர்களும் அப்படியே செய்தார்கள். சிலர் ஜன்னல்களில் ஏறிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அமைதியுண்டானபோது, மிஷனெரி ஞானஸ்நானம் கொடுத்தார். தானியேல் ஞானஸ்நானம் பெற்றபின்பு அவனுடைய அஞ்ஞான இனத்தாரால் அவனுக்குத் துன்பம் நேரிடவில்லை. விக்கிரகாராதனையைப் பற்றிய எண்ணம் அவர்களுக்குள் அற்றுப்போயிருந்ததால் தானியேல் கிறிஸ்துமார்க்கத்தை அநுசரித்ததையிட்டு அவனை மெச்சிக்கொண்டார்கள்.

1851-ஆம் தானியேலுக்குப் பெரிய சோதனையுண்டாயிற்று. உவெஸ்லியன் சங்கத்தாருக்கு நேரிட்ட கொடிய கடனால், கூலிமிஷனை அவர்கள் கைவிட்டுவிடவும், அங்குள்ள கட்டிடங்களை விற்கவும் ஏதுவுண்டானது. தானியேல் இப்போது பரியாசம் பண்ணப்பட்டான். அதற்கு அவன் "தேவன் என்னைக் கைவிடமாட்டார்; நான் சத்துருவாயிருந்தபோது அவர் என்னைப் பாதுகாத்து எனக்காகக் கவலையுள்ளவராயிருந்தாரே; இப்போது நான் அவருடைய பிள்ளையாயிருக்கையில் அவர் என்னைக் கைவிடுவாரா?" என்று உத்தரவு சொன்னான். அவனுடைய மனைவி அவனுக்கு ஆறுதலுண்டாகச் சொன்னதாவது: "கிறிஸ்துவுக்காக நாம் இந்த நிந்தைகளை எல்லாம்



அநுபவிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். அவர் நம்மை இந்த வேளையில் தாங்குவார்" என்பதே.

தானியேல் மார்க்கத்தில் உண்மையுள்ளவனாக இருந்தான். சில வருடங்களுக்குப் பின்பு, மிஷன்வேலை திரும்பவும் துவக்கப்பட்டது. 1864-ஆம் வரைக்கும் ஸிங்கனேருபள்ளியிலிருந்த ஒரு கட்டிடம் கோயிலாகவும் பள்ளிக்கூடமாகவும் உபயோகிக்கப்பட்டது. இரண்டு கட்டிடங்கள் இருக்கவேண்டியது அவசியம் என்று தானியேல் எண்ணி, தன் சொந்தச் செலவினால் ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டத் தீர்மானித்து, அதை மிஷனுக்கு நன்கொடையாகக் கொடுக்க விரும்பினான். தன் எண்ணத்தை மிஷனெரிக்குத் தெரியப்படுத்தின போது, அவர் இருக்கிற கட்டிடத்தைப் பள்ளிக்கூடமாக உபயோகித்து, ஆராதனைக்காக ஒரு புதுக் கட்டிடத்தைச் சமைப்பது உத்தமம் என்று ஆலோசனை சொன்னார். தானியேலிடத்தில் கட்டிடவகைக்காக ரூ 40. இருந்தது. கோயிலைக் கட்டுவதற்கு அது போதாததால், சில சிநேகிதருடைய உதவியினால் கோயில் கட்டப்பட்டு முடிந்தது.

தானியேலுக்கு 70 வயதாயிருந்தபோது, அவன் ஒரு சிநேகிதனோடே "தேவன் என் மனைவியைத் தம்மண்டைக்கு அழைத்துக்கொள்ளச் சித்தமானார்; இப்போது நான் வயோதிபனாய் என் பிரயாணத்தின் முடிவுக்குச் சமீபமாயிருக்கிறேன்; நான் மூன்றும் தலைமுறைமட்டும் என் பிள்ளைகளின் பிள்ளைகளையும் பார்க்கும்படியான சலாக்கியத்தைப் பெற்றேன்; அவர்கள் எல்லாரையும் நான் ஜெபிக்கிற அவருக்கு ஒப்புவிக்கிறேன்; அவர் அவர்களை ஆசீர்வதிக்கவும், அவர்களை மோட்சபாதையில் காத்து நடத்தவும், அவர்களை நான் மகிமையிலே கண்டு சந்திக்கவும் அநுக்கிரகிக்கவேண்டும் என்று ஜெபம் பண்ணுகிறேன்; அவர் என் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் என்னைப் பரம ராஜ்யத்துக்கு அழைக்கும்பரியந்தம் நான் பொறுமையோடே காத்திருக்கும்படி சகாயம் செய்வாராக; தேவன் மிஷனெரிமார்களையும் மிஷன் வேலையையும் திரளாய் ஆசீர்வதிப்பாராக" என்று சொன்னான்.

தானியேல் 80 வயதுவரைக்கும் ஜீவித்திருந்தான். அவன் வரவர மிகவும் பெலவீனப்பட்டுப் போனதோடு, சாகிறதற்கு அநேக வாரங்களுக்கு முந்திக் கண் தெரியாதவனாகவும் காது கேளாதவனாகவும் இருந்தான். மிஷனெரி ஒருவர் அவனைப் பார்க்கப் போனபோது, அவன் சில சிறு வாக்கியங்களைச் சொல்லி, அப்பால் நெடுநேரம் மவுனமாயிருந்து பின்பு "இயேசுவே என்னை உம்மண்டைக்கு எடுத்துக்கொள்ளும்" என்றான்.

இதற்குச் சிறிதுநாட்களுக்குப் பின்பு, அவன் மரித்துப்போனான். அப்போது மிஷனெரிமார் குப்பியை விட்டு வேறே இடத்துக்குப் போயிருந்தார்கள். அவன் இறந்தநாளில் அவன் சற்று சுகமாய் இருந்ததாகக் காணப்பட்டான். அவன் கண்ணும் காதும் ஒருவாறு சுகமாயிருந்தன. அறையில் நடமாடுகிறவர்களைப் பார்க்கக்கூடியவனாயிருந்தான். தான் மரித்துப்போவது நிச்சயமென்று காலையில் உணர்ந்து, தன் ஜனங்கள் எல்லாரும் தன்னைச் சுற்றிவரும்படி கேட்டு, அவர்கள் பரமராஜ்யத்துக்குத் தன்னைப் பின்சென்று வரவேண்டுமென்று புத்தி சொன்னதோடு, மிஷனெரிமாருக்குத் தான் சலாம் செய்ததாகவும், தான் பாக்கியமுள்ளவனாக மரிப்பதையும் தன் இருதயம் தேவன்பால் நிறையப்பட்டிருப்பதையும் அவர்களுக்கு அறிவிக்கும்படி சொல்லி நித்திரையடைந்தான்.

## 13. கனம்: ஹெர்மன் அனந்தராயர் காண்டிகியா ஐயர்.

1893-ஆம் பெப்ருவரிமீ 1உ கனம்: ஹெர்மன் அனந்தராயர் காண்டிகியா ஐயர் நீலகிரியிலிருக்கிற காய்தி என்ற இடத்தில் மரணமடைந்தார். அவர் கூர்க் நாட்டிலுள்ள அனந்தபுரியிலிருந்தார். அவர் பாஸில் மிஷனைச்சேர்ந்த குரு. அவர் 1825-ஆம் மார்ச்சுமீ 20உ மங்களூரில் பிறந்தார். அவர் தகப்பனாருக்கு வக்கீல் வேலை; நல்ல ஸ்திதிவந்தன்; பிராமண குலத்தைச் சேர்ந்தவர். அனந்தராயருக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றிய நல்லெண்ணம் மங்களூரிலிருக்கிற மிஷன் ஆங்கிலோ வெர்நாக்கியுலர் பள்ளிக்கூடத்திலுண்டானது. 1843-ஆம் ஒரு காலையில் அண்டர்சன் ஐட்ஸ் தாஸா மோக்லிங் ஐயருக்கு அவர் மூலமாய் ஒரு செய்தி யனுப்பினார். அந்த வேளையில் மோக்லிங் ஐயர் அதிக அவசரமான வேலையைச் செய்துகொண்டிருந்ததால், புதிதாய்வந்த ஒரு இங்கிலீஷ் பத்திராசிகத்தை அவருக்குக் கொடுத்து, வாசித்துக்கொண்டிருக்கச்செய்தார். அதிலே ஒரு கிரேக்க ராஜன் தன் சட்டப்பிரமாணங்களை நிலைநிறுத்தும்படி தன் மகன் கண்களில் ஒன்றையும் தன் கண்களில் ஒன்றையும் பிடுங்கின சரித்திரம்சொல்லியிருந்தது. தேவன் மனித ஜாதியாரை இரட்சிக்க ஏற்படுத்தியிருக்கிற இரட்சண்ணிய வகையை விளக்குவிப்பதற்கு அந்தச் சரித்திரம் ஒரு திருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. அனந்தராயருடைய மனதில் அது அழுந்தப்படவே, கண்ணீர் சொரிந்தார். அவர் மோக்லிங் ஐயரிடத்தில் அதென்ன சரித்திரம் என்று கேட்டார். ஐயர் அவரைப் பார்த்தபோது, தன் இருதயக் கவ-



லையைப்பற்றி தன்னோடு சம்பாஷிக்க வந்திருக்கிறார் என்று அறிந்து, அவரை உள்ளே வரச்சொல்லி, அந்தச் சரித்திரத்தை விஸ்தரித்துப் பரிசுத்தமுள்ள தேவன் நீதிபரராயும் பாவிகளை நீதிமான்களாக்குகிறவராயும் இருக்கிறார் என்ற ஒரே இரட்சண்ணிய வழியை அவருக்கு விளக்கினார். அனந்தராயர் மனம் இளகக் கண்ணீர் சொரிந்தார். மோக்லிங் ஐயர் கிறிஸ்துவினுடைய கிருபையின் ஐசுவரியத்தை எடுத்துக்காட்டி, அவர் எல்லாப் பாவிகளையும் ஏற்றுக்கொண்டு, அவர்கள் பாவங்களெல்லாவற்றையும் மன்னிக்கிறாரென்று சொன்னபோது அவர் சிரித்தார். அந்தக் கண்ணீரும் சிரிப்பும் உத்தமமானவைகளென்பதை மிஷனெரி கண்டு, அவர் தமது பாவங்களைக் கர்த்தருக்கு முன்பாக அறிக்கையிடும்படி சொன்னார். அவர் சற்று தாமதம் செய்தாலும் தன் இருதயத்திலிருந்ததை வெளியிட்டு ஜெயமடைந்தார். இரண்டுபேரும் ஒருமித்து ஜெபம்பண்ணினார்கள். மோக்லிங் ஐயர் கிறிஸ்துவின் ஆவியால் புதிதாய்ப் பிறந்த சகோதரனிடத்தில் விளங்கின கிருபைக்காகத் தோத்திரம் செலுத்தினார். நீர் வெளியரங்கமாய்க் கிறிஸ்துவை அறிக்கைசெய்ததினிமித்தம் உமக்கு உண்டாகும் உபத்திரவங்களைத் தாங்க ஆயத்தமாயிருக்கிறீராவென்று மிஷனெரி கேட்க, அனந்தராயர் இல்லை; ஆனால் தேவன் எனக்கு உதவி செய்வார் என்றார். 1844-ஆம் ஜனுவரிமீ 4உ அவரும் அவரோடேகூட வேறிரண்டு வாலிபரான பிராமணரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அந்த இரண்டு வாலிபரும் முன்னமே கிறிஸ்துமார்க்கத்தைச் சேரப் பிரியங்காட்டினார்கள். ஆனால் அனந்தராயர் அவர்களை நிறுத்தி வைத்திருந்தார். அனந்தராயர் குணப்பட்டதினால் அவர் தமது குடும்பத்தை விட்டுப் பிரியவேண்டியதாய் நேரிட்டது. அவர் மனைவி எட்டு வருஷமாய் அவரைச் சேராதபடி இருந்தாள். ஆனால் மோக்லிங் ஐயர் அவருக்குத் தகப்பனும் சகோதரனுமாயிருந்தார். அந்த மூன்று பிராமணவாலிபரும் இனிமேல் வரப்போகிற திரண்ட அறுப்புக்கு முதற்பலன்களாயிருந்தார்கள். அந்த அறுப்புக்கு அனந்தராயரும் உதவி செய்யவேண்டியதாயிருந்தது. பாஸில் தாய்ச்சங்கத்தார் அனந்தராயர் தமது தேசத்தாருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக இந்து தேசத்திலேயே அவரைப் பயிற்றுவிக்கவேண்டுமென்று எண்ணினார்கள். ஆனால் மோக்லிங் ஐயருடைய எண்ணம் வேறாகவிருந்தது. அவர் தமது மகனை 1845, 46-ஆம் தேசகாலத்தில் பாஸில் நகரத்துக்குக் கொண்டுபோனார். அனந்தராயராகிய ஹெர்மன் மிஷன் கல்விச்சாலையில் சில வருஷம் படித்தார். 1851-ஆம் அவர் பட்டாபிஷேகம் பெற்று இந்தியாவிற்கு வந்து மங்களூரிலிருக்கிற வேத வித்தியாசாலைக்கு மோக்லிங் ஐயருக்கு உதவிசெய்தார். அவருடைய மனைவி இலட்சுமி - கடைசியாக அவரைச் சேர்ந்துகொண்டாள். ஆனால்

அவள் கிறிஸ்துமார்க்கத்தில் சேரப் பிரியமற்றிருந்து கடைசிபரியந்தம் பிடிவாதமுள்ளவளாய் ராமனை வணங்கி 18 மாசத்துக்குப்பின் மரணமடைந்தாள்.

1860-௵ டிசெம்பர் ௴ காண்டிஷியா ஐயர் ஜர்மனி பிறவியாகிய மரியாள் ரேயினுட் மிசிஸை விவாகம்பண்ணினார். எட்டுப் பிள்ளைகளும் அந்த அம்மாளும் இப்போது அவர் இறந்துபோன துயரத் தோடிருக்கிறார்கள். மங்களூரில் அவர் வேலை வித்தியாசாலையிலும், ஆங்கிலோ வெர்னாக்கியுலர் பள்ளிக்கூடத்திலும் மங்களூர் சுதேச சபையிலும், அஞ்ஞானிகளுக்கு பட்டணத்திலும் பட்டிகளிலும் பிரசங்கிப்பதிலுமிருந்தது. அவருக்குத் தமது தேசத்திலுள்ள பல பாஷைகள் நன்றாய்த் தெரியுமாதலால் அவர் கல்விக்குரிய புத்தகங்களை எழுதுவதற்கு தகுந்தவராயிருந்தார். அவர் சுயபாஷையாகிய கொங்கணம், கன்னடம், துளுவம், இந்துஸ்தானி, சமஸ்கிருதம், இங்கிலீஷ், ஜர்மன், லத்தீன், கிரேக்கு, எபிரெயு என்ற பாஷைகளை அவர் கற்றிருந்தார். கன்னடபாஷையில் அவர் பள்ளிக்கூடங்களுக்கு உபயோகமாக அநேக புஸ்தகங்களைத் திருப்பியும், எழுதியுமிருக்கிறார். சில சன்மார்க்கப் புஸ்தகங்களையும் உண்டுபண்ணியுமிருக்கிறார். அவைகள் இந்நாள்வரையும் அந்த மிஷனில் சவிஸ்தாரமாய் உபயோகிக்கப்பட்டுவருகின்றன. 1853-௵ மோக்லிங் ஐயர் கூர்க் நாட்டில் ஒரு மிஷனைத் துவக்கினார். படிப்படியாய் அநேக தாழ்ந்த ஜாதியார் ஞானஸ்நானம் பெற்றதால், அவர்களைப் பிரத்தியேகமாய்க் குடியேற்றவும், அவர்களுக்கு வேலைகளைக் கண்டுபிடிக்கவும் அவசியம் என்று கண்டார். காண்டிஷியா ஐயருக்கு அவருடைய தகப்பனருடைய ஆஸ்தி கிடைத்ததால் அவர் ஒரு தரிசு நிலத்தையும் காட்டையும் வாங்கி அதில் 20 கிறிஸ்தவ குடும்பங்களை 1857-௵ குடியேற்றினார். இதால் காண்டிஷியா ஐயர் அவர்களுக்கு நிலச்சுவானார். இதுதான் அனந்தபூர் கஸ்பாவுக்கு மூலம். காண்டிஷியா ஐயர் 1869-௵ வரைக்கும் மங்களூரிலிருந்து முக்கியமாய்த் தேசாந்தர வேலையை நடப்பித்துவந்தார். ஆனால் கூர்க்நாட்டில் அவர் இட்டிருந்த காப்பிப்பயிரானது துவக்கத்தில் செழித்தோங்கினாலும் பின்பு அது அவருக்கு மிகவும் பாரமாகக் காணப்பட்டதால், அதைச் சுதாவாய் மேற்பார்க்கும்படி நேரிட்டது. 1869-௵ அவர் அனந்தபூருக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் சபை வேலையையும் தேசாந்தர வேலையையும் பார்த்துவந்ததுடன், தமது சொத்தையும் மேற்பார்த்துவந்தார். 1881-௵ அவருக்குப் பென்ஷன் கொடுக்கப்பட்டது. அப்படியிருந்தபோதிலும், அவர் பாசில் மிஷன் சம்பந்தமாய் அதற்காக வேலை செய்துகொண்டுவந்தார். 1891-௵ கன்னடபாஷையில் வேதாகமத்தை மறுபடியும் திருப்பும் விஷயத்



துக்கு ஒரு அவயவமாக நியமிக்கப்பட்டார். அவர் பல பாஷைகளைக் கற்றிருந்தபடியால், அந்தவிஷயத்தில் அதிகப் பிரயோசனமுள்ளவராக விளங்கினார். அவர் நீலகிரியைச்சேர்ந்த காய்தியில் யோவான் சுவிசேஷத்தைத் திருப்பிக்கொண்டிருக்கையில், அவருக்கு விலாச்சுளியுண்டானது. அவர் தமது மனைவியையும் பிள்ளைகளையும் தமது பரமபிதாவின் கையில் ஒப்புவித்துச் சமாதானத்துடன் மரணமடைந்தார். அவருடைய குமாரத்திகளிலொருத்தி, இந்தியாவில் பரம எஜமானுடைய பணிவிடையைச் செய்துவருகிறாள். மோக்லிங் ஐயரும் மற்றவர்களும் எதிர்நோக்கின ஏராளமான அறுப்பு இன்னும் வராதிருந்தும், அது வரவே வரும் என்பதற்குச் சந்தேகமில்லை. அப்போது விதைத்தவர்களும் அறுக்கிறவர்களும் ஏகமாய்ச் சந்தோஷப்படுவார்கள்.

## மலையாளிகள்.

மலையாளி பாஷையானது பூர்வீக தமிழிலிருந்து தோன்றினது. ஆனால் இப்போது அது கொஞ்சம் மாறிப்போயிருக்கிறது. அது இந்தியாவின் தென்மேற்கான கடல்கரையோரமாயுள்ள குடிகளால் திருவனந்தபுரம் முதல் மங்களூருக்குச் சமீபமாயிருக்கிற சந்திரகிரி வரைக்கும் வழங்கப்பட்டுவருகிறது. சமஸ்கிருதத்தில் அந்தத் தேசம் கேரளதேசம் என்று அழைக்கப்படுகிறது. அந்தப் பாஷை 55 லட்சம் ஜனங்களால் பேசப்பட்டுவருகிறது.

கிறிஸ்துமார்க்கமானது முதலாவதாக அலெக்சந்திரியாவுக்குப் போய் வியாபாரம்பண்ணின இந்துக்களான வியாபாரிகளால் கொண்டுவரப்பட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. சீரிய கிறிஸ்தவர்கள் பூர்வமுதல் தென்மேற்கு கரையில் குடியிருந்து வந்திருக்கிறார்கள். இந்துதேச அரசர்கள் கிறிஸ்தவர்களாக வந்து குடியேறினவர்களுக்கு அதிகமான சலாக்கியத்தைக் கொடுத்திருந்தார்கள். கிறிஸ்தவர்களும் பெருகினார்கள். போர்த்துகீசர் இந்தியாவுக்கு வந்தபோது, அவர்களை ரோமான் மார்க்கத்திற்குத் திருப்பும்படி வேண்டிய முயற்சிகளைச் செய்ததில் அநேகர் அப்படிச் சேர்ந்துகொண்டார்கள்; மற்றவர்களோ உறுதியாய் நிலையில் நின்றார்கள்.

புரோடெஸ்தாந்து மிஷன் சர்ச்சு மிஷன் சங்கத்தாரால் 1816-௵ அங்கே தொடங்கினது. அப்பால் 1821-௵த்தில் லண்டன் மிஷனும், 1839-௵ பாசில் மிஷனும் அங்கே வேலையைத் துவக்கின.

1893-௵ அங்கே 40 அந்நியதேச மிஷனெரிமாரும், 12,674 நற்கருணைக்காரரும், 45,056 கிறிஸ்தவர்களும், 14,357 பள்ளிப்பிள்ளைகளும் இருந்தார்கள்.

# 11. யாக்கோபு ராமா வர்மா ஐயர் என்ற குணப்பட்ட ராஜ பிரபு.

ராமா வர்மா என்ற ராஜ பிரபு இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் கொச்சியில் அரசபுரிந்த வீரகேரள மகாராஜாவின் சட்டப் பிள்ளைகளில் இரண்டாவது மகன். அவர் திருப்புணித்துறையில் 1814-௵ நவம்பர் 28உ பிறந்தார். வழக்கத்தின்படி அவருடைய தாயார் அவனைக் குலதெய்வத்துக்குத் தத்தம்பண்ணி, அவர் சமஸ்கிருத சாஸ்திரங்களையும் கலைஞானத்தையும் கற்கும்படி செய்தாள். அவர் பதின்மூன்றும் வயசாயிருக்கையில், தர்க்க சங்கிரகத்தைத் தெளிவுற கற்றிருந்து, கிரகணங்களைக் கணிக்கத்தக்க திறமையுள்ளவரானதைப் பார்க்கையில், அவர் கல்வியில் எவ்வளவாய்த் தேர்ச்சியடைந்தார் என்பதை நிதானிக்கலாம். அவருடைய தகப்பனார் விஷ்ணு பக்தன். அவருக்குப் பிரியமுண்டாக ராமா வர்மா முத்திராதாரணம் என்ற வருத்தமான சடங்கை மூன்றுதரம் நிறைவேற்றினார்.

அவர் பதினாலு வயசாயிருக்கையில், அவர் தகப்பனார் காலஞ்சென்றுபோனார். அவருடைய பெரிய தகப்பனார் மகன் பட்டத்துக்கு வந்து அரசாண்டான். அவன் தன் சிறிய தகப்பனாருடைய குடும்பத்தைக் கடினமாய் நடத்தத் துவக்கினதால், அவர்கள் ராஜ அரண்மனையைவிட்டு, வைப்பீன் நகரத்திற்குப் போய் அங்கே ஐந்து வருஷம் குடியிருந்தார்கள். குடும்பத்தை நடத்தும் காரியம் ராமா வர்மாவின்மேல் விழுந்ததால், அவர் நேரம் முழுதும் அந்தவேலையில் செலவழிந்தது. 1831-௵ கர்னல் மன்றோ அந்த ராஜாவினிடத்தில் பரிந்து பேசினதின்பேரில் ஒப்புரவாகுதலுண்டானது. ராஜ குடும்பத்தார் மறுபடியும் திருப்புணித்துறைக்கு வந்தார்கள். இந்த இடத்தில் ராஜபிரபு இந்துமதத்தை ஆராய்வதில் முயற்சியாயிருந்தார். அவர் புராணங்களை வாசித்து, அநேக மந்திரங்களை நெட்டுருப் பாடம் செய்து, மற்றவர்களோடே கலவாமலும் ஆசாரங்களைத் தனியாயும் பிரத்தியேகமாய் அனுசரித்துவந்தார். இதனால் மோக்ஷம் அவர்க்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. அவர் இதைச் செய்துவந்தபோதிலும், அது அவர் ஆத்துமாவுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை. இந்துமதத்தைப்பற்றி அவருக்கிருந்த நம்பிக்கை சின்னபின்னப்படுத்தக்கதான காரியங்கள் சில சம்பவித்தன.

அவர் குடும்ப ஆலயத்தில் பணிவிடைசெய்த பிராமணன் பூசை விக்கிரகத்தின்மேல் போட்டிருந்த 15,000 ரூ. பெறுமான ஆபரணங்



களை எல்லாம் களவுசெய்து, இடமென ஓடிப்போய்விட்டான். போலீஸ்தார் எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டும் பலிதப்படாமற்போயிற்று. ராமா வர்மா பொன்னை கொடுத்த தெய்வத்தை நோக்கி, போலீஸ்தாருக்கு உதவிசெய்யும்படி பிரார்த்தனை செய்தும் கள்ளன் அகப்படவில்லை. இதற்குச் சற்றுப் பின்பு காலஞ்சென்ற ராஜா வைத்திருந்த விஷ்ணு பொன் விக்கிரகத்தை இன்னொரு பிராமணன் திருடிக்கொண்டு ஓட்டம் பிடித்தான். கள்ளனைக் கண்டுபிடிப்பதற்குச் செய்யப்பட்ட பிரயத்தனங்களெல்லாம் பலனற்றதாய்ப் போய்விட்டது. இந்த இரண்டு சங்கதிகளையும் இராஜபிரபு கண்டபோது, விக்கிரகங்கள் பொம்மைகள் என்றும், அவைகள் தங்களையே காக்க சக்தியற்றவைகள் என்றும், தங்களைக் காக்கத் திராணியில்லாதவைகள் தங்கள் தொழும்பர்களை எப்படிப் பாதுகாக்கக்கூடும் என்றும் நிதானித்துக்கொண்டார். அதுமுதல் அவர் ஆலயங்களுக்குப் போகும் வழக்கத்தை நிறுத்திப்போட்டார். அவருடைய பந்துக்களும் தாயாரும் ஆலயத்துக்குப் போகும்படி அவரை வருத்தினபோதிலும் அவர்களுக்கு இணங்கவில்லை. என்றாலும் வழக்கப்படி சமய சாஸ்திரங்களை வாசித்துவந்தார்.

இந்தக்காலத்தில் தேவபக்தியுள்ள ஒரு மாது மலையாளியில் திருப்பப்பட்ட ஒரு புதிய ஏற்பாட்டை அவர் சகோதரனுக்கு இனாமாகக் கொடுத்தார். அவர் அதை ராமா வர்மாவண்டைக்குக் கொண்டுபோய், இந்து சாஸ்திரங்களோடு அதை ஒத்துப்பார்க்கும்படி கேட்டார். அவர் காலதாமதமில்லாமல் அப்படிச் செய்யத் தொடங்கினார். மத்தேயு சுவிசேஷம் முதலாம் அதிகாரத்தில் காட்டியிருக்கிற தலைமுறை அட்டவணையைப் பார்த்தபோது அவருக்குப் பிரியமில்லாதிருந்ததால் எல்லாம் அப்படித்தானிருக்குமென்று எண்ணி, அதை ஒருபக்கமாய் வைத்துவிட்டார். அவர் சிநேகிதர் வரும்போது, அந்தப் புஸ்தகத்தை எடுத்து அதில் காட்டியிருக்கிற பேர்களை விநோதத்துக்காக வாசித்துக் காட்டுவார்.

ராமா வர்மா 16 வயசாயிருக்கையில் அவருக்கு உபநயனம் நடந்தது. இந்தச் சடங்கும் அவர் குடும்பத்தில் சற்று பிந்தி ஒரு பாலிய பெண் இறந்துபோனதும் தம்முடைய பிற்கால நிலைமையைப்பற்றி பயபக்தியாய்ச் சிந்திக்கும்படி ஏவினது. ஆகவே கலைஞானத்தை ஆராயும்படி மிகக் கருத்துள்ளவரானார். இப்படிச் சில வருடங்கள் கடந்துபோயின. கோட்டயத்தில் கல்விகற்கும் அவருடைய இனத்தாரிலொருவன் தன் விடுமுறையை ராமா வர்மாவோடே பின்னிட வீட்டுக்கு வந்தான். அந்தப் பையன் ராமா வர்மா தன்னோடே கோட்டையத்துக்குப் போய்ப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து இங்கிலீஷ் படிக்கும்

படி ஆலோசனை சொன்னான். ராமா வர்மா அந்தப் பாஷையைக் கற்றுக்கொள்ள பிரியப்பட்டுக் கொச்சிக்குப் போகக் கருதினார். கொச்சியில் ரிட்ஸ்டேயில் ஐயர் ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்திருந்தார். 1834-ம் ஆகஸ்டு மீ அவருடைய இருபதாம் வயதில் கொச்சிக்கு வந்து பள்ளிக்கூடத்தில் சேர்ந்துகொண்டார். ரிட்ஸ்டேயில் ஐயர் பள்ளிக்கூடத்தில் செய்த ஜெபங்களும், படிப்பித்த வேதபாடங்களும் ராஜபிரபுவுக்கு அநேகம் விளங்காதிருந்தாலும், மெத்தப் பிரியமாயிருந்தது. ஒருநாள் மிஷனெரி விக்கிரகங்களைப்பற்றியும் பூசாரிகளைப்பற்றியும் சொல்லும்படி நேரிட்டது. அவைகளின் இலட்சணங்களைப்பற்றிச் சொல்லப்பட்டவைகள், ராமா வர்மா மனதுக்குச் சரியாகக் காணப்பட்டதுடன், அவைகளை [illegible] வீண் என்றும் அறிந்துகொண்டார். அன்றுதானே ரிட்ஸ்டேயில் ஐயர் அவருக்கு ஒரு புதிய ஏற்பாட்டை இனாமாகக் கொடுத்து, அந்த ஆகமத்தை உத்தமத்தோடு ஆராயவேண்டும் என்றும், முதலாவது பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்திலிருந்து துவக்கி வாசிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அவர் அந்த நிருபத்தைத் திரும்பத் திரும்ப வாசித்து [illegible] எல்லாவற்றையும் மனப்பாடமாக்கிக் கொண்டார்.

ஒரு ஓய்வுநாளில் ராமா வர்மா ஒரு கொங்கண பிராமணனுடன் கொச்சியிலிருக்கிற ஒரு கோவிலுக்குப் போனார். அங்கே ஏசாயா தீர்க்கதரிசனம் 53-ம் அதிகாரம் கடைசி வாக்கியத்தில் "அவர் அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டார்" என்ற வசனத்தின்பேரில் பிரசங்கம் பண்ணப்பட்டது. அது ராமா வர்மாவின் மனதில் ஆழமாய்ப் பதிந்ததால், அவர் இயேசுகிறிஸ்து தனக்காகவும் பரிந்துபேசுகிறவர் என்று உணர்ந்தார். இதுதான் அவர் ஜீவிய மாறுதலுக்குக் காரணமாயிருந்தது. அதுமுதல் அவர் வெளியரங்கமாய் இயேசுவுக்குச் சேவிக்கும்படி மனங்கொண்டார். ஆனால் உலகபயம் அவருக்குண்டாக இருதயத்தில் கிறிஸ்தவனாயிருந்தால் போதும் என்கிற நம்பிக்கையுடையவரானார். அவர் வீட்டுக்குவந்து இளைப்பாறி சில மாதங்களுக்குப்பின் மறுபடியும் கொச்சிக்குப் பிரயாணப்பட்டதில், அவர் ஏறிப்போன படவு கவிழ்ந்துபோகத்தக்கதான பெருங்காற்றுண்டாயிற்று. தான் கரையில் பிழைப்பேன் என்ற நம்பிக்கை இரவின் இரண்டொருஜாமம் அவருக்கு அற்றுப்போயிற்று. கரைக்குவந்தபோது, அவர் சுதேசசபை பாஸ்டரிடத்தில் போய், ஞானஸ்நானம் பெறும்படி தனக்கு இருக்கிற ஆசையை வெளியிட்டார். அடுத்த ஓய்வுநாளில் ஞானஸ்நானம் கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. ராஜபிரபுவின் பிராமண சயம்பாகி அதைக் கேள்விப்பட்டு, பிரபுவின் தாயாரிடத்தில் இரகசியமாய் அறிவித்தான். அவள் அவரை உடனே



திருப்புணித்தேரிக்கு வரும்படி அழைத்ததால், அப்போது ஞானஸ்நானம் பெறுவது தடைப்பட்டுப்போயிற்று. ஆனால் தேவன் இன்னும் அவர்பேரில் கிருபையாயிருந்தார். ராமா வர்மாவின் வயிற்றில் ஒரு புண் உண்டாயிற்று. வைத்தியர்கள் அதைச் சுகப்படுத்துவது கூடாதகாரியம் என்று தீர்த்தார்கள். ராமா வர்மா வியாதி சுகப்பட்டால், தான் வெளியரங்கமாய்க் கிறிஸ்துவை அறிக்கைசெய்வதாக பொருத்தனைபண்ணினார். அவர் விண்ணப்பம் கேட்கப்பட்டது. "கிருபையுள்ள கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டுச் சுகமருளினார்" என்று பிந்தியகாலத்தில் அவர் சொல்லிக்கொண்டார்.

அவர் சற்று பலப்பட்டபின்பு, தாயாரையும் பந்துக்களையும் கடைசியாக வழியனுப்பிக்கொண்டு, ஒரு சனிக்கிழமை கொச்சிக்கு வந்தார். அடுத்தநாள் 1835-ம் ஏப்பிரல் மீ 5உ கொங்கண பிராமணனோடே யாக்கோபு என்ற பேரால் ஞானஸ்நானம் பெற்றார். கொங்கண பிராமணனுக்கு யோவான் என்ற பேர் தரிக்கப்பட்டது. பூணூல் கத்தரிக்கப்பட்டது. அன்றையத்தினமே வர்மா ஐரோப்பியரோடே போஜனபானம் பண்ணினார். இந்தச் செய்தி பிரஸ்தாபமானவுடனே தேசமெங்கும் கூக்குரல் உண்டாயிற்று. திரள் திரளான ஜனங்கள் கிறிஸ்தவனான ராஜ பிரபுவைப் பார்க்கும்படி மிஷன் கம்பவுண்டுக்குத் திரண்டுவந்து, கூடுமானால் பிரபுவைத் தங்களோடேகூட திருப்பிக்கொண்டுபோகும்படி அவரை வசப்படுத்தப் பார்த்தார்கள். ஆனால் ராமா வர்மா சந்தோஷத்தால் நிறையப்பட்டவராய்ச் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை அவர்களுக்குப் பிரசங்கித்தார். அப்போது வந்தவர்களில் ஒருவர் அவருடைய சின்னையா, இன்னொருவர் அவர் சகோதரன். அவர் சின்னையா அவரைச் சபித்து வீட்டுக்குத் திரும்பினார். அவர் சகோதரன் அவரைக் குத்திக் கொன்றுபோடும்படி ஒரு ஈட்டியைக் கொண்டுவந்தார். ஆனால் சகோதரர் இருவரும் சந்தித்துக்கொண்டபோது முந்திய பாசம் மேலிட ஆயுதம் கீழே விழுந்துவிட்டது. இருவரும் கண்ணீர் சொரிந்தார்கள். அவர்கள் கொஞ்சநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். ராமா வர்மா கிறிஸ்துவுக்காக நியாயம் சொல்லிக்கொண்டிருந்தார். அவர் சகோதரனோ தன்னோடேகூட வீட்டுக்கு வரவேண்டும் என்று அவரை அலட்டிக்கொண்டிருந்தார். ராமா வர்மா பெலனற்ற சித்தத்தைக் காட்டினபடியால், அவர் சகோதரன் அவருக்குக் கொஞ்சம் பணம் கொடுத்துவிட்டுத் திருப்புணித்தேரிக்குத் திரும்பிப் போனார். ராமா வர்மா மலபாரை விட்டுப் புறப்படும் பரியந்தம், அவர் சகோதரன் அவருக்குப் பண உதவி செய்துகொண்டுவந்தார்.

ராமா வர்மா இரண்டு வருஷம் ரிட்ஸ்டேயில் ஐயரோடேகூட இருந்தார். மிஷனெரிக்கு மிகுந்த வேலையிருந்தது, ராமா வர்மாவுடைய ஆத்தும வளர்ச்சிக்குப் பிரதிகூலமாயிருந்தது. அப்போது தமது மனதிலிருந்ததை கனம்: யோசேப்பு பென் ஐயருக்கு அறிவிக்க, அவர், தேவன் புஸ்தகத்தைப் பார்க்கிறவரல்ல, இருதயத்தைப் பார்க்கிறவராயிருக்கிறார். நீர் ஜெப புஸ்தகத்தை வாசிக்கலாம்; ஆனால் அதிலடங்கிய வார்த்தைகள் இருதயத்திலிருந்து புறப்படவேண்டும் என்றார். இந்த வார்த்தைகள் ராமா வர்மாவுக்குச் செபத்தைப்பற்றி நவீன எண்ணங்களை உண்டுபண்ணினது. அவர் பென் ஐயருடைய ஆலோசனையின்படி நடந்து, அதிகமான பிரயோசனத்தை அடைந்தார்.

1837-ல் ராமா வர்மா ரிட்ஸ்டேயில் ஐயரை வழியனுப்பிக்கொண்டு, சென்னபட்டணத்துக்குப் போய், கனம் அத்தியட்சர் கிராமர் ஸ்கூலில் சேர்ந்தார். அங்கே அவர் இரண்டு தேவபக்தியுள்ள துரைமக்களால் மூன்றுவருஷம் படிப்பிக்கப்பட்டார். ஒருநாள் சாயந்தரம் அவர் மாராமன் மாத்தான் என்ற மலையாள கிறிஸ்தவனோடே உலாவப்போனார் (இந்த மாராமன் மாத்தான் பிந்தியகாலத்தில் சீரிய சபைக்கு மார் அதனேசியு என்ற பேரால் அத்தியட்சரானார்.) அவர்கள் உலாவி வீட்டுக்குத் திரும்பிவருகையில், அவர்கள் பள்ளிக்கூடத்துக்குச் சமீபமாய் ஒரு வீட்டின் மாடத்திலிருந்த இரண்டு துரைமக்கள் அவர்களை வீட்டுக்கு வரவழைத்துச் சாலை அறைக்குக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களோடே கிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய அன்பைப்பற்றியும் நெடுநேரம் சம்பாஷித்து, அவர்களோடே ஜெபம்பண்ணினார்கள். அந்த நேரம் ராமா வர்மாவுக்குக் கிடைத்த மிகப் பிரியமான காலங்களில் ஒன்றாயிருந்தது. அந்தத் துரைமக்கள் ஸ்காட்ஸ்மிஷனைச் சேர்ந்த கனம்: யோவான் அண்டர்சன் ஐயரும், கனம்: ஆர். ஜான்சன் ஐயருமே. இன்னொரு பிரிவான சபையைச் சேர்ந்தவர்களோடே அவர் ஜெபத்துக்கு இருந்ததற்காக அவர் பேரில் குற்றம் சாட்டப்பட்டது. அது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. இதுவுமல்லாமல் பிந்தி அவர் பட்சமற்றவண்ணம் நடத்தப்பட்டபடியால் அவர் கொச்சிக்குத் திரும்பினார்.

அந்தவேளையில் மார் அதனேசியு அந்தியோகியாவுக்குப் புறப்பட்டார். பிரபுவும் ஒருதலைமைப் பார்க்க விருப்பமுள்ளவராய் பெல்கேயம் வரைக்கும் அவரோடேகூடப் போனார். அந்த இடத்துக் கிறிஸ்தவர்கள் அவர்களைப் பட்சமாய் உபசரித்து அவர்கள் வந்திருக்கிற செய்தியை கனம்: யோசேப்பு தேயலர் ஐயருக்கு அறிவித்தார்கள். சில நல்ல மனிதர்கள் மழைகாலம் முடியுமுன் அவர்கள் பிரயாணம் செய்யக்கூடாதென்று ஆலோசனை சொன்னார்கள். அவர்கள்



அதற்கு இணங்கினார்கள். மார் அதனேசியு ஆண் பள்ளிக்கூடத்துக்கு உபாத்தியாராகவும், ராமா வர்மா தேயலர் ஐயர் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கவும் ஏற்படுத்தப்பட்டார்கள். மழைகாலம் முடிந்தபின்பு, மார் அதனேசியு அந்தியோகியாவுக்குப் புறப்பட்டார். ராமா வர்மாவுக்குக் கண்ணில் வியாதியுண்டானதால், அவரோடேகூடப்போக ஏதுவில்லாமற்போயிற்று. அவருக்குச் சுகமுண்டானபோது, அவர் தேயலர் ஐயர் வீட்டில் பதினெட்டுமாசக் காலமிருந்து, அவர் பிள்ளைகளுக்குப் படிப்பித்து, ஏழைகளை மேல்விசாரித்துவந்தார். அந்தக்காலத்தில் அவர் தேயலர் ஐயர், பெய்னன் ஐயர் என்ற இரண்டு உத்தம மிஷனெரிமார்களுடன் சம்பாஷணை செய்துகொண்டுவந்தது, அவருக்குமிகுந்த பிரயோசனமாயிருந்தது. அங்கேயும் மற்றவர்களுக்குப் பிரயோசனமுண்டாகத்தக்கதாக அவருக்கு விசாலமான இடமிருந்தது. ஓய்வுநாள் காலைதோறும் அவர் பள்ளிப்பிள்ளைகளுக்கு வேதம் படிப்பிப்பார். ஞாயிறு புதன் சாயந்தரங்களில் அவர் கோயிலில் தமிழிலே ஆராதனை நடத்துவார். வேளாவேளைகளில் கன்னடத்திலும் பிரசங்கம் செய்வார். அவர் பெல்கேயத்தை விட்டு புறப்பட்டு, தேயலர் ஐயருடைய ஆலோசனையின்படி மங்களூருக்குப் போக கப்பலேறினார். ஆனால் காற்று அவரை தலைச்சேரிக்குக் கொண்டுபோய்விட்டது. அவர் அங்கே இறங்கினவுடனே பட்டாளமிருக்கிற முக்கியஸ்தானமாகிய கன்னனூருக்கு வந்து சேர்ந்தார். அவர் வந்த ஒரு வாரத்துக்குப் பின், மிகப்பிரயோசனமுள்ளவராயிருந்த ஹிபிக் மிஷனெரியண்டைக்குப் போனார். அவர் ராமா வர்மா மிகவும் வைராக்கியமுள்ள கிறிஸ்தவன் என்பதைக் கண்டு, சிலமாசங்களுக்குள்ளாக அவரை உபதேசியாராக்கினார். 1844-ல் பெப்ருவரியில் அவர் மிஷன் போர்டிங் பள்ளிக்கூடத்தில் படித்த ஒரு பிள்ளையை விவாகம்பண்ணினார்.

அந்தக்காலத்திலே மிஷன் கோவில் ஆராதனை இங்கிலீஷிலும் மலையாளத்திலும் மாற்றி மாற்றிச் செய்யப்பட்டுவந்தது. சுதேச கிறிஸ்தவர்கள் 100 பேர்மாத்திரம் இருந்தார்கள். ஆனால் கோவில் ஐரோப்பிய போர்வீரராலும் யூரேஷியராலும் நிரம்பியிருக்கும். ஹிபிக் ஐயர் இங்கிலீஷில் பிரசங்கிக்க, ராமா வர்மா மலையாளத்தில் மொழிபெயர்த்துச் சொல்லுவார். மற்றவர்கள் மலையாளத்தில் பிரசங்கிக்கும்போது, அவர் அதை இங்கிலீஷில் அர்த்தமா சொல்வார். இப்படி ஓய்வுநாளில் மாத்திரமல்ல, மற்றநாட்களிலும் அப்படியே செய்துவந்தார். இப்படி அவர் திவ்விய பணிவிடையை நடப்பித்துக்கொண்டு வருகையில், இந்துக்கள் கிறிஸ்துமார்க்கத்துக்கு விரோதமாய்ச் சொல்லும் ஆட்சேபனைகளுக்கு உத்தரவு எழுதுவதிலும் அலுவலாயிருந்தார். 1854-ல் வரைக்கும் இப்படிப்பட்ட வேலையை நடப்பித்து

வந்தார். இதுவிஷயத்தில் இந்துமார்க்கத்தைப்பற்றி சவிஸ்தாரமாய் அறிந்தவரும் புதிதாய்க் குணப்பட்டவருமான ஒரு கிறிஸ்தவர் அவருக்கு உதவிசெய்தார்.

1856-ம் தாய்கமிற்றிமார் ராமா வர்மாவை ஐரோப்பிய ஐயர்மாருடைய ஸ்திதியில் வைத்து நடத்தும்படி சித்தமானார்கள். செப்டெம்பர் 3உ அவர் கன்னனூர் மிஷன் கோவிலில் பட்டாபிஷேகம் பெற்றார். கோவிலில் சுதேசிகளும் ஐரோப்பியரும் நிறைந்திருந்தார்கள். சிறக்கல் ராஜாவை ஹெபிக் என்ற பெரிய பாதிரி சாய்பு வரவழைத்திருந்ததால், அவர் தமது ராஜாங்கப் பல்லக்கில் கோவிலுக்கு வந்தார். ஹெபிக் ஐயரும் ராமா வர்மா ஐயரும் பண்ணின பிரசங்கங்களை அவர் கேட்டு, மூன்று நாட்களுக்குப் பின்பு கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொண்டார்.

ராமா வர்மா குருப்பட்டம் பெற்றபோது, 42 வயதுள்ளவராயிருந்தார். அவர் ஸ்தூலித்த தேகி; அவர் அநேக வருஷங்களுக்கு ஜீவித்திருப்பார் என்று எண்ணத்தக்கதாயிருந்தது. ஆனால் தேவசித்தம் வேறாக இருந்தது. அந்த வருஷத்தில் கன்னனூரில் வைசூரி கடுமையானது. ராமா வர்மாவுக்குப் பிராணசிநேகிதனும் சவிமானுமான ஒருவனுக்கு அந்த வியாதி யுண்டானது. அவன் கிறிஸ்துமார்க்கத்துக்குவர ஆசையைக் காட்டியிருந்தான். ராமா வர்மா மரணத்துக்கு ஏதுவாயிருந்த அந்தச் சிநேகிதனுடைய வீட்டுக்கு அடிக்கடி போய்ப் பார்த்துவந்தார். சிநேகிதர் தடுத்தும் பின்வாங்காமல் அப்படிச்செய்துவந்தார். அந்தவியாதி அவரையும் பிடித்தது. சில நாட்களுக்குள்ளாக அவர் தமது ஜீவியத்தை முடிக்கவே, அடக்கம் பண்ணப்பட்டார். கிறிஸ்தவர்களும் இந்துவர்களும் அவருக்காகக் கனத்த துக்கம் கொண்டாடினார்கள்.

ராமா வர்மாவுக்குக் கலியாணம் செய்து பன்னிரண்டு வருஷமாகியும் அவருக்குச் சந்தானமில்லாதிருந்தது. அவருடைய விதவை சில வருடங்களுக்குப் பின்பு அவரைப் பின்சென்றாள்.

[illegible]ப்பிலும் செய்கையிலும் பேர்போன பெரிய ஊழியன் இவ்வண்ணமாய்த் தமது ஓட்டத்தை முடித்தார்.

---

S. P. C. K. Press, Vepery, Madras—1896.